

கோகுலம்

கோகுலம் நவம்பர் 84
ரூ.2



சர் சி.வி. இராமன்

பிறந்த நாள் : 7-11-1888 மறைந்த நாள் : 21-11-1970

கோகுலம்



மலர்—2 இதழ்—10 1984 நவம்பர் மாத இதழ்

உயிர்களிடத்தில் அன்பு வேணும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
- பாரதியார்

கௌரவ ஆசிரியர்:
அழ. வள்ளியப்பா

தனிப்பிரதி ரூ. 2/- ஆண்டுச் சந்தா ரூ. 24/-

அருமைச் சிறுவர் சிறுமியரே,

இன்று மிகவும் சிறந்தநாள்
எங்கள் நேரு பிறந்தநாள்'

என்று நவம்பர் 14—ஆம் தேதி ஆடிப்பாடி ஆனந்தமடையப் போகிறீர்கள். உங்கள் ஆனந்தத்தை அதிகப்படுத்த 'கோகுல'த்திலும் பல புதுப் புதுப் பகுதிகளைச் சேர்க்கப் போகிறோம்.

என் குழந்தைப் பருவம்: நேரு மாமா சின்ன வயதிலே எவ்வாறு இருந்தார், என்னென்ன செய்தார் என்பதை அவரே கூறுகிறார். இந்த இதழில். இதேபோல், இன்று நம்மிடைய வாழ்ந்து வரும் பல பெரியவர்கள், தங்கள் குழந்தைப் பருவத்தைச் சுவையாக எழுதி, உங்களை மகிழ்விக்கப் போகிறார்கள்.

ஒரு பூனை புலியாகிறது! எப்படி ஒரு பூனை புலியானது என்பதை அறிய ஆவலாக இருக்கிறீர்களல்லவா? அடுத்த இதழிலிருந்து இத்தொடர்கதையை எழுதுபவர், குழந்தைகளுக்காக நிறைய நிறையப் புத்தகங்களை எழுதிப் பல பரிசுகளும் பாராட்டுக்களும் பெற்ற டாக்டர் பூவண்ணன் என்பதை அறியும் போது உங்கள் மகிழ்ச்சி பல மடங்காகிறது; இல்லையா? படிக்கத் தவறாதீர்கள்.

கேளுங்கள்; சொல்லுகிறோம்: உங்களுக்கு அவ்வப்போது பல சந்தேகங்கள் தோன்றுகின்றன. அந்தச் சந்தேகங்களை அகற்றவே இந்தப் பகுதி. இதில் நீங்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லப்படும். நீங்கள் கேட்கும் கேள்விகளால் உங்களுக்கு மட்டுமல்ல; மற்றவர்களுக்கும் பயன் ஏற்பட வேண்டும். அஞ்சல் அட்டையில், 'கேள்வி — பதில் பகுதி' என்று தலைப்புக் கொடுத்து, அதன்கீழ் உங்கள் கேள்விகளை எழுதி அனுப்புங்கள்.

அழ. வள்ளியப்பா






இந்த இதழ் எழுத்தாளர்கள்



அழகாபுரி அழகப்பன்



வேண்டுவோம்

இலட்சக் கணக்கான குழந்தைகளின் பசி என்னும் நோயைத் தீர்த்து வருபவர் நம் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள். பசி நோய் தீர்த்த அவர், தற்போது நோய்வாய்ப் பட்டிருப்பது குறித்து நாம் அனைவரும் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளோம். விரைவில் அவர் பூரண குணம் பெற்று, நீடூழி வாழ, நாம் அனைவரும் ஆண்டவன் திருவருளை வேண்டுவோமாக.

-ஆசிரியர்

பிருந்தாவனக் கதாசிரியர்கள்

கா. சிவசுப்பிரமணியன்




ஆர். சிவகாம சுந்தரி



கே. ஷர்மிளா



மு. கா. நெடுமாறன்



பிருந்தாவனக் கவிஞர்கள்

வே. நடராஜன்

ஆர். சாந்தி







என் குழந்தைப் பருவம்

– ஜவஹர்லால் நேரு

மாலை நேரங்களில் என் தந்தையாரைக் காணப் பல நண்பர்கள் வருவது வழக்கம். நாள் முழுவதும் உழைத்துக் களைத்த தந்தையார், அப்போது சிரித்து மகிழ்ந்து இளைப்பாறுவார்; அவருடைய கலகலப்பான சிரிப்பொலி வீடு முழுவதும் எதிரொலிக்கும். அவருடைய சிரிப்பொலி அலகாபாத்தில் பெயர் பெற்றுவிட்டது. அவரும், அவருடைய நண்பர்களும் என்ன பேசுவார்கள் என்பதை அறிய, திரை மறைவில் நின்றுகொண்டு எட்டிப் பார்ப்பேன். என்னை அவர் பார்த்துவிட்டால், என்னை இழுத்துத்தம் மடிமேல் கொஞ்ச நேரம் உட்கார வைத்துக் கொள்ளுவார்.

எனக்கு என் அப்பாவின் பேரில் தனி ஈடுபாடுண்டு. அவரைப் பெரிதும் மதித்தேன். நான் பார்த்தவர்கள் எல்லோரிலும் அவர் மிகுந்த வலிமையும் ஊக்கமும் உடையவராகத் தோன்றினார். நானும் பெரியவனாக வளரும்போது அப்பாவைப் போலவே இருக்க வேண்டும் என்று எண்ணினேன். நான் எவ்வளவுக்கெவ்வளவு அவரை மதித்தேனோ, நேசித்தேனோ, அவ்வளவுக்கவ்வளவு அவரைக் கண்டு அஞ்சினேன்.

அவருடைய கோபத்துக்கு நான் ஒரு சமயம் ஆளாக நேர்ந்தது. அப்போது எனக்கு ஐந்து அல்லது ஆறு வயதிருக்கும். அவருடைய அலுவலக மேஜையின் மேல் இரண்டு ஊற்றுப்பேனாக்கள் இருக்கக் கண்டேன். அவைகளின் பேரில் எனக்கு ஆசை பிறந்து விட்டது. தந்தையாருக்கு இரண்டு பேனாக்களும் தேவையாய் இருக்காது



என்று எண்ணி ஒரு பேனாவை எடுத்துக் கொண்டேன்.

பின்னர், பேனாவைக் காணவில்லையென்று தேடினார்கள். அச்சத்தால் உண்மையைச் சொல்லவில்லை. கடைசியில், பேனாவைக்கண்டு பிடித்து விட்டார்கள். என் குற்றம் வெளியாய் விட்டது. தந்தைக்குப் பொல்லாத கோபம் வந்து விட்டது. கடுஞ்சினத்தில் நான் குழந்தையென்பதையும் பாராமல் என்னை நையப் புடைத்து விட்டார். வலியையும், அவமானத்தையும் தாங்க முடியாமல் அன்னையிடம் ஓடினேன். பல நாட்கள் வரையில் வலியிருந்தது. களிம்புகளையும் மருந்துகளையும் பூசி வலியைப் போக்கினார்.

அவர் எனக்கு இவ்வளவு கொடிய தண்டனை கொடுத்துங்கூட நான் அவரை நோகவில்லை. அது சற்று அதிகம் எனினும், அதை என் குற்றத்திற்கேற்ற தண்டனையாகவே கருதினேன். தந்தையிடமிருந்த அன்பும் ஈடுபாடும் குறையவில்லையெனினும், அச்சம் மிகுந்தது. தாயாரிடம் அப்படியில்லை. அவரிடம் எனக்கு என்றுமே அச்சம் கிடையாது. நான் என்ன செய்தாலும் அவர் பொறுத்துக் கொள்ளுவார். அப்படியிருக்கும்போது அவரைக் கண்டால் அச்சம் ஏற்படுமா?

அன்னையார் எங்களிடம் அளவு கடந்த அன்பு செலுத்தினார். அவரிடம் குறும்பு செய்வேன். தந்தையைவிடத் தாயிடந்தான் நெருங்கிப் பழகினேன். எதையும் தாயிடந்தான் சொல்லுவேன். எடுத்ததற்கெல்லாம் அவரிடந்தான் ஓடுவேன்.

தாயார் குள்ளமாகவும் மெலிந்து ஒல்லியாகவும் இருப்பார். விரைவில் நானும் அவருடைய உயரத்தளவுக்கு வளர்ந்து விட்டேன். இதனால் நான் அவருக்குச் சமமாகி விட்டதாக எண்ணினேன். அவருடைய அழகைக் கண்டு லயித்தேன்: அவருடைய அழகிய — சிறிய கைகளையும் பாதங்களையும் பார்த்துப் பார்த்து மகிழ்ந்தேன். அவர் புதிதாக காஷ்மீரத்திலிருந்து வந்து குடியேறிய குடும்பத்தைச் சேர்ந்தவர். அவருடைய முன்னோர்கள் இரண்டு தலைமுறைக்கு முன்புதான் இந்தியாவுக்கு வந்தனர். ஆகவே, அவர் அவ்வளவு அழகாக இருந்ததில் வியப்பொன்றும் இல்லை.

என் அன்னைக்கு அடுத்தபடியாக என் தந்தையாருடைய கணக்கர் முன்ஷி முபாரக் அலி என்பவரிடம் நெருங்கிப் பழகினேன். அவர் பதானில் நல்ல குடும்பத்தில் பிறந்தவர். 1857—ஆம் ஆண்டில் நடந்த இந்தியக் கிளர்ச்சியின் போது அவருடைய குடும்பம் சீரழிந்தது. ஆங்கிலப் படையினர் அக்குடும்பத்தில் பலரைக் கொன்று விட்டனர். இத்துன்பத்தில் மூழ்கியிருந்த அலி, பண்பட்டு எதையும் பொறுத்துக் கொள்ளக் கூடிய பொறுமைசாலியாக விளங்கினார். அவர் குழந்தைகளிடம் தனியன்பு காட்டுவார். ஆகவே எனக்கு மனவருத்தமோ, துன்பமோ நேர்ந்தபோதெல்லாம் அவர் எனக்குப் புகலிடமாக இருந்தார்.

தாடி வளர்த்திருந்த அவர், எனக்குப் பழைய காலத்தவராகப் பட்டது. தாவிச் சென்று அவரைத் தழுவிக் கொண்டு அவர் கதை சொல்லுவதைக் கண்கொட்டாமல் கேட்பேன். சலிப்பே தோன்றாது. அவர் அரபிக் கதைகள், பிறகதைகள், 1857—58—இல் நாட்டில் நடந்த நிகழ்ச்சிகள் முதலியவைகளைச் சுவையோடு சொல்லுவார். அவர் சொல்லும் கதைகளை மணிக்கணக்காகக் கேட்டுக் கொண்டிருப்பேன். நான் வளர்ந்து பெரியவனான பின்புதான் அவர் காலஞ்சென்றார். அவர் என் உள்ளத்தில் நீங்காத இடம் பெற்று விட்டார். அவருடைய அன்பையும், பண்பையும் நான் என்றுமே மறக்க முடியாது.

முபாரக் அலி சொன்ன கதைகளையன்றி என் அன்னையும், பெரிய தாயாரும் சொன்ன புராணக் கதைகளையும் மகாபாரதம், இராமாயணம் ஆகிய காவியக் கதைகளையும் பிறகதை

களையும் கேட்டுள்ளேன். என் பெரிய தாயார் பண்டைக்கால நூல்களை நன்கு கற்றறிந்தவர். அவருக்குக் கணக்கற்ற கதைகள் தெரியும்; கதைக் களஞ்சியமாகத் திகழ்ந்தார். அவர் சொன்ன கதைகளைக் கேட்டுக் கேட்டு இந்தியப் புராணங்களையும் நாட்டு இலக்கியத்தையும் நன்கு அறிந்து கொண்டேன்.

திருவிழா நாட்கள் பல — ஒருவர்மேல் ஒருவர் தண்ணீரை ஊற்றிக்கொண்டு கோலாகலமாக விளையாடி மகிழும் ஹோலிப் பண்டிகை; வீடுகளெங்கும் ஆயிரக்கணக்கான அகல் விளக்குகள் ஒளிவீசும் தீபாவளி என்னும் ஒளி விழா; சிறையில் கிருஷ்ணன் நள்ளிரவில் பிறந்ததைக் கொண்டாடும் ஜென்மாஷ்டமி (ஆனால், அன்று நள்ளிரவு வரையில் விழித்திருப்பது கடினம்); இராமச்சந்திரனின் பழைய கதையையும் அவருடைய இலங்கை வெற்றியையும் நாடகங்களோடும், ஊர்வலங்களோடும் கொண்டாடும் தசராவும் ராம் லீலையும்.

குழந்தைகளாகிய நாங்கள் இவ்விழா வேடிக்கைகளைக் கண்டு களித்ததோடு இஸ்லாமியப் பண்டிகை வேடிக்கைகளையும் கண்டு களித்தோம்; மொகரம் பண்டிகை ஊர்வலங்களை வேடிக்கை பார்ப்போம். ஈத் பண்டிகையின் போது முபாரக் அலி நல்ல உடைகளை அணிந்து கொண்டு தொழுகைக்காகப் பெரிய மசூதிக்குச் செல்லுவார். நான் அவர் வீட்டுக்குச் சென்று இனிப்புத் தின்பண்டங்களை உண்பேன். இவையன்றி இந்துப் பஞ்சாங்கத்தில் காணும் சிறு நோன்புகள் பல.

காஷ்மீரிகளாகிய எங்களிடையே, மற்ற இந்துக்கள் கொண்டாடாத தனிப் பண்டிகைகள் வேறு இருந்தன. அவைகளில் முதன்மையானது சம்வத் பஞ்சாங்கப்படி வரும் புத்தாண்டு நாள் (நௌரோஜ்). புத்தாண்டு நாள் எங்களுக்குச் சிறப்பு நாள். எல்லோரும் புத்தாடை அணிந்து கொள்வோம். சிறுவர்களாகிய எங்களுக்குக் கைச் செலவுக்குக் காசும் கிடைக்கும்!

இவை எல்லாவற்றுக்கும் மேலாக நான் விரும்பும் ஆண்டு விழா ஒன்று உண்டு. அவ்விழாவில் நான்தான் நடு நாயகம். அதுதான் என் பிறந்த நாள் விழா! அது ஆண்டிலே ஒரு நாள்; தனிநாள்; இன்பம் தரும் புனிதநாள். பிறந்த நாள் விழா என்றால் எனக்கு ஒரே குதூகலம்தான். அந்நாளில் விடியற்காலையில் என்னைப் பெரிய துலாக்கோலில் நிறுத்தி என் எடையளவு கோதுமை முதலிய பொருள்களை வைத்து நிறுத்து, அவைகளை ஏழைகளுக்கு வழங்குவர். பின்பு எனக்குப் புத்தாடைகள் அணிவிப்பர். ஏராளமான வெகுமதிகள் வந்து குவியும். பிற்பகலில் விருந்து நடைபெறும். இவ்வளவு சிறப்பான பிறந்த நாள் விழா, ஆண்டுக்கு ஒரு முறைதான் வரும் என்பது அப்போது எனக்குத் தெரியாது. ஆகவே, பிறந்தநாள் விழா அடிக்கடி வரவில்லையே என்று வருந்தினேன். வருந்தியதோடு வாளா இருக்கவில்லை. அவ்விழாவை அடிக்கடி கொண்டாட வேண்டுமென்று வம்பு செய்தேன். பிறந்த நாள் விழாக்கள் விரும்பத்தகாத வயது முதிர்ச்சியை அறிவுறுத்தும் நாட்களாகத் தோன்றக் கூடிய காலமும் வரும் என்பதை அப்போது நான் அறியவில்லை.

சிலபோது உறவினர் திருமணங்களுக்கு, தொலைவிலுள்ள பட்டணங்களுக்குக் குடும்பமே செல்வதுண்டு. அப்போதெல்லாம் குழந்தைகளாகிய எங்களுக்கு ஒரே குதூகலந்தான்! திருமண விழாக்களென்றால் எங்களுக்கு விடுதலை நாட்கள். வழக்கமான கட்டுப்பாடுகளெல்லாம் தளர்த்தப்படும். நாங்கள் எங்கள் மனம் போல் நடந்து கொள்ளலாம். எனவே, திருமண நாட்கள் எங்களுக்கு இன்ப நாட்களாக இருந்ததில் வியப்பொன்றும் இல்லை. ஆங்காங்கே யிருந்து வந்த பல குடும்பங்களும் திருமண வீட்டில் இறங்குவதால் அங்கு கூட்டம் மிகுதி





யாக இருக்கும். குழந்தைகளும், சிறுவர், சிறுமிகளும் பலர் இருப்பர். எனக்குத் தனிமையைப் பற்றிய கவலை அப்போது இராது. நாங்கள் ஆசைதீர விளையாடுவோம்; குறும்பு செய்வோம். குறும்பு அளவை மீறும்போது பெரியவர்களின் திட்டும் கிடைக்கும். அதையும் வாங்கித் தோளில் போட்டுக் கொண்டு விளையாடுவோம்.

அப்போது நடந்த ஒரு நிகழ்ச்சி எனக்கு நன்கு நினைவில் இருக்கிறது. எனக்கு சுமார் ஏழு அல்லது எட்டு வயதிருக்கும். அலகாபாத்திலிருந்த குதிரைப் படையைச் சேர்ந்த குதிரை வீரர் ஒருவரோடு ஒவ்வொரு நாளும் நான் குதிரைச் சவாரி செய்வது வழக்கம். ஒருநாள் நான் வழியில் விழுந்து விட்டேன். என் அழகிய குதிரை தனியாக வீடு திரும்பியது. டென்னிஸ் விளையாடிக் கொண்டிருந்த என் தந்தையார் குதிரை மட்டும் தனியாக வீடு திரும்பியதைக் கண்டு திகைத்தார். அவரும் மற்றவர்களும் என்னைத் தேடிக் கண்டுபிடிக்க ஓர் ஊர்வலமாகவே கிளம்பி விட்டனர். வழியிலே என்னைக் கண்டனர், தீரச் செயலைப் புரிந்த வீரனை வரவேற்க வருவது போன்று!

நான் பத்து வயதுச் சிறுவனாக இருந்த போது, பழைய வீட்டிலிருந்து புதிய வீடு ஒன்றில் குடி புகுந்தோம். புதிய வீடு பெரியது. அதற்கு 'ஆனந்த பவன்' என்று பெயரிட்டார் என் அருமைத் தந்தையார். அதில் பெரிய தோட்டமும் நீந்து குளமும் இருந்தன. புதியவைகளைக் காணக்காண உள்ளத்தில் கிளர்ச்சி ஏற்பட்டது.

துணைக் கட்டடங்கள் கட்டப்பெற்றன. வேலையாட்கள் குழி தோண்டுவதையும், பிற வேலைகளைச் செய்வதையும் ஆவலோடு பார்த்துக் கொண்டிருப்பேன்.

வீட்டிலேயே பெரிய நீந்து குளம் இருந்ததால், வெகு விரைவில் நீந்தக் கற்றுக் கொண்டேன். தண்ணீரில் மூழ்கவும் மிதக்கவும் நன்கு பழகிக் கொண்டேன். கோடைக்காலத்தில், ஒரே நாளில் பல முறை நீந்துவேன். மாலையில் தந்தையாரின் நண்பர்கள் பலர் நீந்துவதற்காக வருவார்கள். நீந்து குளத்திலும் வீட்டிலும் மின்சார விளக்குகள் போடப்பட்டிருந்தன. அக் காலத்தில் அலகாபாத்தில் மின்சார விளக்குப் போடுவது புதுமையாக இருந்தது. பலரோடு நீந்தி விளையாடுவது எனக்குப் பேரின்பமாக இருந்தது.

இச்சமயத்தில் குடும்ப நிகழ்ச்சி ஒன்று என்னுடைய கவனத்தைக் கவர்ந்தது. எனக்குக் குட்டித்தங்கை வந்துவிட்டாள்! எல்லோருக்கும் தம்பியோ, தங்கையோ இருக்கும் போது எனக்கு மட்டும் இல்லையே என்று வெகு காலமாக ஏங்கிக்கொண்டிருந்தேன். இது பெருங்குறையாகவே இருந்து வந்தது. இக்குறையைக் களையத் தங்கை கிடைத்ததைக்கண்டு மட்டற்ற மகிழ்ச்சியடைந்தேன்.

எனக்குச் சுமார் பதினொரு வயதிருக்கும் போது வீட்டிலேயே தங்கியிருந்து எனக்குப் பாடம் கற்பிக்கப் புதிய தனி ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டார். அவர் பெயர் பர்டினண்டு டீ. புரூக்ஸ். அவர் சற்றேறக் குறைய மூன்றாண்டுகளே எனக்கு ஆசிரியராக இருந்தார். என்றாலும் என்னைப் பலவகையிலும் ஆட் கொண்டு விட்டார்.

புரூக்ஸின் தொடர்பால் எனக்குப் பல வகையான நூல்களையும் படிக்கும் ஆர்வம் ஏற்பட்டது. அநேக ஆங்கில நூல்களைப் படித்தேன். சிறுவர் இலக்கியத்தை நன்கு கற்றேன்.


புரூக்ஸ் வியத்தகு விஞ்ஞான உலகத்துக்கும் என்னை அழைத்துச் சென்றார். வீட்டில் ஆய்வுக் கூடம் ஒன்றை நிறுவினேம்; பௌதிகம், இரசாயனம் ஆகியவை பற்றிய சோதனைகளை மணிக்கணக்கில் செய்வேன்; பொழுது போவதே தெரியாது!

—ஜவாஹர்லால் நேரு எழுதிய சுயசரிதை என்ற நூலிலிருந்து
தமிழாக்கம்: ஜெயா அருணாசலம்
வெளியிட்டோர்: கார்த்திகைப் பிரசுரம், சென்னை.



மாலியும் ஜாலியும்
கருத்து: எம்.ஆர்.ராஜன்
எங்க ஜாலிக்கு என் மேலே ரொம்ப பிரியம்!
என்னை ஸ்கூல் வரை கொண்டு வந்து விட்டுட்டு உடனே வீடு திரும்பிடும்!
இப்ப நாம கடைக்குப் போகிறோமா, பார், ஜாலியும் கூடவே வருது!
நடைபாதையிலே சிவப்பு விளக்கு வரப் போகுது நின்னு போகலாம்!
நிற்காதே சீக்கிரம் ஓடிப் போயிடலாம்
ஐயையோ! சிகப்பு விளக்கு வந்துடுத்தே!
பரவாயில்லே, வா ஓடிப் போயிடலாம்!
பார்த்தியா உங்க ஜாலியை.. நம்ம மாதிரி சாலை விதியை மீறாமே நிற்குது!

திருக்குறள் புதிர்



புதிர் 31

புதிர் 32



மேலே இருக்கின்றன இரு படங்கள். ஒவ்வொரு படமும் ஒரு திருக்குறளை நினைவுபடுத்தும். எந்தத் திருக்குறளை எந்தப் படம் நினைவூட்டுகிறது?

10ஆம் பக்கம் புரட்டினால் விடை கிடைக்கும்.

நல்லவன் வல்லவனாக!



ஜகத்குரு ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் ஆசி

பாலன் பெரிய வீட்டுப் பிள்ளை. மிக நல்லவன்தான். ஆனாலும், மிகவும் சோம்பேறி. தன்னுடைய பொருட்களைக் கவனிக்க மாட்டான். வீடு முழுதும் அவனுடைய பள்ளிக்கூடப் புத்தகங்கள் இறைந்து கிடக்கும். பேனா பென்சில்கள் ஒழுங்காக இல்லாமல் எங்காவது கிடக்கும்.

அவனுக்கென்று ஓர் அறை அந்த வீட்டில் உண்டு. அங்கு மேஜை, நாற்காலி, புத்தகம் வைக்க அலமாரி எல்லாம் உண்டு. அவன் தாயாரோ, சிறிது கல்வி அறிவுள்ள அவர்கள் வீட்டு வேலைக்காரனோ தினமும் புத்தகங்களை எடுத்து அடுக்கி வைப்பார்கள். பென்சிலைச் சீவி வைப்பார்கள். உடைகளைத் தேடிப் பிடித்துத்துவைத்து மடித்து வைப்பார்கள்.

நாளுக்கு நாள், பாலனுடைய பொறுப்பின்மையும் சோம்பேறித்தனமும் வளர்ந்தன. அவன் படிப்பில் முதல்வனாக இருந்தாலும், சோம்பேறித்தனம் அவனுடைய மதிப்பைக் குறைத்துவிட்டது.

பாலனைத் திருத்துவதற்காக அவனுடைய பெற்றோர் எல்லா முயற்சிகளையும் எடுத்தும் சோம்பேறித்தனத்தை அவனிடமிருந்து நீக்க முடியவில்லை. ஒருநாள், அவன் தந்தை இந்தக் குறையை அவனுடைய ஆசிரியரிடம் கூறி வருந்தினார். ஆசிரியர் பாலனுடைய வீட்டுக்கு வந்தார். வீட்டின் நிலைமையை உற்றுக் கவனித்தார். பிறகு, அவனுடைய தந்தையிடம் சில விஷயங்களைக் கூறி அவைகளைக் கடைப்பிடிக்கச் சொன்னார்

ஆண்டுப் பரீட்சை வருவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னால், அவனுடைய தந்தையார் அவனை அழைத்தார். ''அப்பா பாலா, நம் வீட்டு வேலைக்காரன் வேலையை விட்டு விட்டான். அவன் வேலைகளை நானும் உன் தாயாருமாகக் கவனிக்கின்றோம். அதனால், இனிமேல் உன்னுடைய பொருட்களை நீதான் கவனமாகப் பார்க்க வேண்டும். நாங்கள் உதவ முடியாத நிலையில் இருக்கிறோம்'' என்று கூறினார்.

வழக்கம் போல் அசிரத்தையாக இருந்தான் பாலன். பரீட்சைக்கு முதல் நாள் புத்தகங்களைப் பாலனால் தேட முடியவில்லை. தாயார் தலைவலி என்று படுத்து விட்டார். ஒரு வழியாகப் புத்தகங்களைத் தேடிப் பிடிப்பதற்குள் களைப்பு வந்து தூக்கம் வந்து விட்டது. ஏதோ சமாளித்துக் கஷ்டப்பட்டுப் படித்தான். பரீட்சை அன்று காலையில் குளிப்பதற்குத்துண்டு கூடக் கிடைக்கவில்லை. பாலனுக்கு அழுகை அழுகையாக வந்தது. பெற்றோர் உதவ மறுத்து விட்டார்கள். ஒரு வகையாகக் குளித்துச் சாப்பிட்டான்.

பரீட்சைக்குப் புறப்படும் போது பேனா, பென்சில், அட்டை முதலியவை நினைவிற்கு வந்தன. பேனாவிற்கு மை விடும் பொழுது மேலே சிந்தியது. பென்சில் சீவும் பொழுது கையில் காயம் ஏற்பட்டது. அட்டை கிடைக்கவேயில்லை. பெற்றோர்கள் அலட்டிக் கொள்ளவேயில்லை.

ஒருவழியாக, பாலன் பரீட்சைக்குப் புறப்பட்டான். அப்பொழுது அவ்வழியாக வந்த ஆசிரியர், பாலனுடைய வகுப்புத் தோழன் சேதுவை அழைத்து வரச் சொன்னார்.

பாலன் சேதுவின் வீட்டிற்கு இது வரை சென்றதில்லை. இன்றுதான் போகிறான். அவன் வீட்டில் பல குடித் தனங்கள் நிறைந்திருந்தன. சேதுவின் வீடு இரு அறை மட்டுமே. பாலன் ஆச்சரியப்பட்டான். பிறகு சேதுவை நோக்கி, ''உன் பொருட்களை எப்படிப் பாதுகாக்கின்றாய்?'' என்று கேட்டான்.

உடனே சேது, ''நாங்கள் வசதி குறைந்தவர்கள். எனக்கு ஒரு பெட்டி மட்டுமே உண்டு. அதில் புத்தகம், பேனா, உடை முதலியவற்றைப் பொறுப்பாக வைக்கவேண்டும். உபயோகிக்கும் பொருட்களை அவற்றின் உபயோகம் முடிந்த பிறகு அதனதன் இடத்தில் வைக்காவிட்டால், அது வீணாகப் போய்விடும். எங்களால் திரும்ப வாங்க முடியாது. ஆகவே, என்னுடைய பெட்டிதான் எனக்குப் பொக்கிஷம்.'' என்று கூறினான்.

சேது கூறிய செய்திகள் பாலனுடைய மனத்தில் அசை போட்டன. அன்று மாலை பாலனுடைய ஆசிரியர் அவன் வீட்டிற்கு வந்தார். பாலனிடம் அவன் மனத்தில் படும்படி கூறத் தொடங்கினார்.

''நம் வீட்டில் இருக்கும் இரும்பாலான பொருட்கள் உபயோகமில்லாவிட்டால் துருப்பிடித்து விடும். அது போல நம் உடம்பில் இருக்கும் எல்லா உறுப்புக்களையும் நல்ல விஷயங்களில் ஈடுபடுத்த வேண்டும். உடம்பு வேலை செய்வதற்கு என்றே படைக்கப்பட்டது. வேலை இல்லாத உடம்பு நோய்க்கு இடமாகும். நோயுள்ள உடம்புக்கு இன்பம் இல்லை. சுறுசுறுப்புள்ள சேது உன்னைவிடத் திடமாக இருக்கிறான். மேலும், தன் பொறுப்புக்களை ஒழுங்காகக் கவனிக்காதவனிடம் எதிர்காலத்தில் சிறப்பான காரியங்கள் ஒப்படைக்கப்பட மாட்டா. ஆகவே, இன்றிலிருந்து உன் சோம்பேறித்தனத்திற்கு விடை கொடு.''

அன்றிலிருந்து நல்லவனான பாலன் வல்லவனும் ஆனான்.

காந்தி மொழி:

நாம் நற்காரியங்கள் செய்கிறோம் என்று செருக்கடைவதும் அவைகளுக்கு விலை கூறிக் கிரையம் கொள்வதும் தகாது. நாம் மேலும், மேலும் உயர்குணம் உடையவர்களாக முயற்சி செய்ய வேண்டும். இடைவிடாது நற்காரியங்கள் செய்வதில் ஆசையை வளர்க்க வேண்டும். இப்படிப்பட்ட ஆசையை நிறைவேற்றுவதற்குச் செய்யப்படும் முயற்சியே உண்மையான சமய மார்க்கமாகும்.

திருக்குறள் புதிர் - விடை

புதிர் 31 : விடை

பரியது கூர்ங்கோட்டது ஆயினும் யானை
வெரூஉம் புலிதாக் குறின். **(599)**

யானையின் உடம்பு பருத்திருக்கிறது. தந்தங்களும் கூர்மையானவை. அப்படியிருந்தும் புலி தாக்க வந்தால் யானை பயப்படுகிறது.

புதிர் 32: விடை

எண்என்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்என்ப வாழும் உயிர்க்கு. **(392)**

எண் என்று சொல்லப்படுபவை கணக்கு நூல்கள்; எழுத்து என்று சொல்லப்படுபவை, இலக்கண, இலக்கிய நூல்களாகும். இவை இரண்டும் இந்த உலகில் வாழும் மக்களுக்குக் கண் போன்றவை என்று பெரியோர் சொல்லுவார்கள்.



டாக்டர் பூவண்ணன் எழுதும்
ஒரு பூனை புலியாகிறது!
அடுத்த மாதம் புதிய தொடர் கதை ஆரம்பம்

சார், தபால்!

வருத்தம் மறைந்தது; மகிழ்ச்சி பிறந்தது!

● சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு ராஜாஜி 'கல்கி'யில் வாரம் ஒரு கதை சிறுவர்களுக்காக எழுதி வந்தார். அவற்றை மீண்டும் 'கோகுல'த்தில் வெளியிட்டால், இக்காலக் குழந்தைகளுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்குமே!

—வி. வெங்கடராமன், மின்பாறை.

(ராஜாஜி பிறந்தது டிசம்பர் 10—ஆம் தேதி. சென்ற டிசம்பரில் அவர் எழுதிய சில கதைகளைச் சுருக்கித் தந்தோம். அடுத்த மாதமும் அவர் எழுதிய இன்னும் சில கதைகளைத் தரப்போகிறோம். ஆசிரியர்.)

● செந்தில்குமார் எழுதிய 'சொர்க்கத்தில் காண்பார்' கதையில் வரும் ஆசிரியர் வேதலிங்கம் பாத்திரம், என் நிஜவாழ்க்கையில் வந்த ஆசிரியர் போல ஓவியர் ராஜா வரைந்துள்ளார். என் போன்ற மாணவர்களுக்குக் கருத்துள்ள அதே சமயத்தில் பலன் தரும் வகையில் கதை அமைந்தது குறித்து மகிழ்ச்சி.

—பி. கோபால கிருஷ்ணன், சென்னை—17.

● தெனாலிராமன் கதைகள் தெரிந்த கதைகள்தான். இருந்தாலும் திரும்பத் திரும்பப் படித்தாலும் சிரிப்பு வருகிறதே! இதைத்தான் காலத்தால் அழிக்க முடியாத கதைகள் என்கிறார்களோ!

—இரணியல் கலை, சென்னை—57.

● ஐயோ, 'கருணை விழிகள்' முடியப் போகிறதா! பஸ்ஸிலே வந்த பலே திருடனைப் பிடித்துக் கொடுத்த சின்னுவுக்கு என் உளமார்ந்த பாராட்டுக்கள்.

—வி. ஸ்ரீதர் (983), சின்னசேலம்.

● செப்ட. மாத கோகுலம் கதைகளில் முதலிடம் 'சாந்தி பொம்மை' கதைக்குத்தான். வழக்கமான கதைகளிலிருந்து இக்கதை வித்தியாசமாக இருந்தது. பாராட்டுக்கள்.

—எ. சௌரிராஜன், ஸ்ரீரங்கம்.

● சென்ற இதழ் பிருந்தாவனப் பகுதியில் வி. சாரதா (1699) எழுதியுள்ள 'ஒரு G + 4 T' என்ற துணுக்கு ஆனந்த விகடன் 19.8.84 இதழில் பாம்பே டையிங் விளம்பரப் பக்கத்தில் வெளிவந்ததுதான். இப்படிக் காப்பி அடித்து எழுதுவது மிகவும் தவறல்லவா?

—ஆர். எஸ். மீனாட்சி (4469), வேலூர். எஸ். ஸ்ரீராம், கடையம். அ. முஹம்மது நிஜாமுத்தீன், நீடூர்.

● சுற்றுலா செல்லும் பொழுது நகை, கைக்கடிகாரம் போன்ற விலை உயர்ந்த பொருள்களை எடுத்துச் செல்லக் கூடாது என்று 'இதுக்கு மேலே' அறிவு புகட்டியது.

—டி. முருகவேள், தக்கோலம்.

● 'கருணை விழிகள்' முடியப் போகிறதே என்று வருந்தினேன். ஆனால், டாக்டர் பூவண்ணனின் 'ஒரு பூனை; புலியாகிறது' என்ற தொடர்கதை எழுதப் போகிறார் என்று அறிந்ததும், அந்த வருத்தம் மறைந்தது; மகிழ்ச்சி பிறந்தது!

—என். கனகராஜன், சமத்தூர்.

● சுப்பிரமணிய சிவா பிறந்த நாள் 4.10.84 என்பதுதான் சரியானது. தாங்கள் தவறுதலாக 14.10.84 எனப் பிரசுரித்து விட்டீர்கள்

—ரகமி, சென்னை—5.

(தமிழ்க் கலைக்களஞ்சியம் 5—ஆம் தொகுதி 64—ஆம் பக்கத்தில் அவர் 14.10.84—ல் பிறந்தார் என்றுள்ளது. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் வெளியிட்டுள்ள 'வாழ்வாங்கு வாழ்ந்தவர்கள்' என்ற புத்தகத்திலும் (பக்கம் 7) 1884—ஆம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 14—ஆம் நாள் பிறந்தார் என்றிருக்கிறது. ஒருவேளை, அவர் பிறந்த தமிழ்த் தேதிக்குச் சரியான ஆங்கிலத் தேதி கண்டுபிடிப்பதில் தவறு நேர்ந்திருக்கலாமோ!

—ஆசிரியர்.)

● மாவட்ட வினா விடைகள் எங்கள் தஞ்சை மாவட்டத்தின் பெருமைகளை நன்கு எடுத்துக் காட்டின. மாவட்ட நண்பர்கள் சார்பில் மனம் நிறைந்த நன்றி

—ஐயாறு எஸ். வாசுதேவன், சென்னை—14

● 'இன்றைய இளைஞர்களின் ஆதர்ச புருஷர் ஸ்ரீ ஆஞ்சநேயர்' என்றார் ஸ்வாமி விவேகானந்தர். லவ குசர்களுடன் அனுமாரின் சந்திப்பையும் பின் நடந்தவைகளையும் சுவாரசியமான வண்ணக்காட்சிகளில் தந்து எங்களைக் குஷிப்படுத்தி விட்டீர்கள்.

—ஆர். ஸ்ரீநிவாசன், திருச்சி—6.

● திருமதி சௌந்தரா கைலாசத்தின் 'உரிமையும் கடமையும்' பாட்டு என்னை மிகமிகக் கவர்ந்து விட்டது.

—எம். ஏ. பாஷா, சின்னசேலம்.

● மாவட்ட வினா விடையில் தரங்கம்பாடியில் வீரமாமுனிவர் தமிழ் கற்றதாக உள்ளது. தரங்கம்பாடியில் தமிழ் கற்ற ஜெர்மானிய குருவின் பெயர் பர்த்தலோமியோ சீகன் பால்கு.

—ஜெ. பிரிசில்லா இவாஞ்சலின், தரங்கை.

● துறைதோறும் தூய தமிழ் என்னும் நிலையில் பாலனின் பணி பாராட்டுக்குரியது.

—மருத்துவர் மறையரசன், தலைவர், உலகத் தமிழ்க் கழகம், நீடாமங்கலம்.

புதிய புத்தகங்கள்



நிலாச்சோறு

நிலாச் சோறு உண்ணலாம்;
நிறையக் கதைகள் சொல்லலாம்;
விலா நோகச் சிரிக்கவே
வேடிக் கைதான் பண்ணலாம்.

ஓரே நாடு; ஓரே மக்கள்;
ஒன்று கூடுங்கள்.
ஓரே வானம் ஓரே நிலா;
எண்ணிப் பாருங்கள்.

மிகச் சிறு குழந்தைகளுக்கு, கொஞ்சம் வளர்ந்த குழந்தைகளுக்கு, இன்னும் சற்று வளர்ந்த குழந்தைகளுக்கு — இப்படி மூன்று பிரிவுகளாகப் பிரிக்கப்பட்ட 62 பாடல்களைக் கொண்டது இந்தப் புத்தகம். ஒவ்வொரு பாட்டுக்கும் ஒரு படம்; அழகான அட்டை. இந்நூலாசிரியர் குழந்தை எழுத்தாளர் சங்கம் நடத்திய குழந்தைக் கவிதைப் போட்டியில் ஏ. வி. எம். தங்கப் பதக்கம் பெற்றவர்.
வெளியீட்டோர்: திருமலைப் பதிப்பகம், பிளாக் எ'ன்: 385, அண்ணாநகர், கிழக்கு, சென்னை–40; விலை ரூ. 6/-.



பல தேசத்துக் குட்டிக் கதைகள் (முதல் தொகுதி)

கோகுலத்தில் தொடர்ந்து 'தேவி' எழுதிவந்த ஜெர்மன் தேசத்துக் குட்டிக் கதைகள், இங்கிலாந்து தேசத்துக் குட்டிக் கதைகள், பர்மா தேசத்துக் குட்டிக் கதைகள் என எட்டுத் தேசத்துக் குட்டிக் கதைகளைப் படிக்கலாம் இந்தப் புத்தகத்தில். சிரிக்கவைக்கும் கதைகள், சிந்திக்க வைக்கும் கதைகள், நுண்ணறிவை விளக்கும் கதைகள், நீதி புகட்டும் கதைகள்,- ஆகமொத்தம் 26 இருக்கின்றன. அந்தந்த நாட்டுக்கு ஏற்றவாறு ஒவ்வொரு கதைக்கும் ஒரு படம் அச்சிடப்பட்டுள்ளது. அழகான முகப்புப் படம்.
வெளியிட்டோர்: குழந்தைப் புத்தக நிலையம், விற்பனை உரிமை: பாரி நிலையம், சென்னை–1, விலை ரூ. 4/-.

வேலை கொடுக்கணும் மூளைக்கி

மா. காயாம்பு என்ற கவிஞர் எழுதிய இப்புத்தகத்தில் 'புரட்சி செய்யணும் அறிவியலில்', 'பருவமும் பயனும்,' 'கடலைக் காண வாரீர்!' போன்ற பல பயனுள்ள பாடல்களைக் காணலாம். 'மூளையால் வந்த சுதந்திரம்', 'காட்டில் நடந்த போட்டி' என்ற தலைப்பில் பழைய கதைகளைப் பாடல்களாகவும் படிக்கலாம்.

ரஷ்யா செய்த ஏற்பாட்டில்
ராகேஷ் போனார் ராக்கெட்டில்.
பிறந்தது அவரும் நம்நாடு.
போற்றுது அவரைப் பலநாடு!

என்று அண்மையில் நடந்த அற்புதச் செயலை அழகாகப் பாடியிருக்கிறார்.

புத்தகப் பெயரில் 'மூளைக்கி' என்று இருப்பது என்னவோ போல் இருக்கிறது. 'மூளைக்கு' என்றே இருந்திருக்கலாமே!



வெளியிட்டோர்: நீலன் பதிப்பகம், அண்ணா சாலை, திருப்பத்தூர் ரோடு, தேவகோட்டை. விலை ரூ. 2.50.

மின்மினிக் கதைகள்

நோய் தீர்ந்தது!

ஒரு பெரிய பணக்கார இளைஞன். அவனுக்கு அவன் அப்பா சேர்த்து வைத்த சொத்து ஏராளம். அவன் காலையில் எட்டு மணிக்கு எழுந்திருப்பான்; சாப்பிடுவான்; தூங்குவான்; எழுந்திருப்பான்; சாப்பிடு வான்; தூங்குவான். எந்த வேலையும் அவன் செய்ய மாட்டான். உடற்பயிற்சி செய்வதும் இல்லை. தோட்டத்திற்குள்ளேயாவது நடக்கலாமல்லவா? ஊஹூம், நடக்க மாட்டான். இப்படியே அவன் வாழ்ந்து வந்தான். நாளாக ஆக, அவன் உடம்பு பருத்து விட்டது. பலவிதமான நோய்களுக்கும் அவன் ஆளாயினான்.

அவன் மனைவி ஒரு வைத்தியரை அழைத்து வந்து காட்டினாள். அவர் ஒரு மாத்திரையைக் கொடுத்து, ''இதை ஒவ்வொரு நாள் காலையிலும் சாப்பிட வேண்டும். மருந்தைத் தனியாகச் சாப்பிடக் கூடாது. ஆறாக்குப் பாலில் மூன்று சொட்டுப் பனித்துளி கலந்து, அதில் இந்த மருந்தைக் கரைத்துக் குடிக்க வேண்டும்'' என்றார்.

அப்படியே ஒரு வாரம் குடித்து வந்தான் பணக்காரன். எந்தவித முன் னேற்றமும் தெரியவில்லை.

மீண்டும் வைத்தியரை அழைத்துவரச் சொல்லி, ''என்ன ஐயா, எந்தவித அபிவிருத்தியும் காணோமே?'' என்றான் பணக்காரன்.

''பாலில் கலக்கிறீர்களே, அந்தப் பனித் துளிகளை யார் கொண்டு வந்து தருவார்கள்?'' என்று கேட்டார் வைத்தியர்.

''என்னுடைய வேலையாள்தான்.''

''அடடே! நான் ஒன்றைக் கூற மறந்து விட்டேனே! பனித்துளியை வேறு யாரும் எடுத்து வரக் கூடாது. நீங்களேதான் எடுத்துவர வேண்டும். இல்லாது போனால், உடம்பு கெட்டு, உயிருக்கே ஆபத்து வந்துவிடும்.''

''அப்படியா! சரி, சரி'' என்றான் பணக்காரன். அன்று முதல் சூரியன் உதிப்பதற்கு முன்பே எழுந்து விடுவான்; தன் பங்களாவின் மாடியிலிருந்து கீழே இறங்கி வருவான். தோட்டத்திற்குச் சென்று பனித்துளி இருக்கும் செடிகளைத் தேடிப் பிடிப்பான். மூன்று சொட்டுப் பனித்துளிகளை மிகுந்த சிரமத்துடன் எடுத்துக்கொண்டு வருவான். இப்படியே அவன் தொடர்ந்து செய்து வந்தான். சோம்பல் நீங்கிச் சுறுசுறுப்புப் பெற்ற அந்தப் பணக்கார னின் வியாதி பறந்தோடி விட்டது!





போர் வேண்டாம்!

அவன் ஒரு பெரிய நாட்டின் அரசன். பக்கத்திலிருந்த சிறிய நாட்டின் மீது படையெடுத்து, அதைத் தன் நாட்டுடன் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று ஆசைப்பட்டான். அவனுடைய அமைச்சர் எவ்வளவோ தடுத்துப் பார்த்தும், அரசன் கேட்கவில்லை.

அடுத்த நாட்டின் மீது படையெடுத்து அரசரும், அமைச்சரும், படைவீரர்களுடன் சென்று கொண்டிருந்தார்கள். வழியில் ஓரிடத்தில் தங்கிச் செல்ல வேண்டியிருந்தது. படைவீரர்களில் சிலர் அடுப்பு மூட்டி, தாங்கள் கொண்டு வந்திருந்த கடலையை அவிக்க விரும்பினார்கள். கடலையை ஒரு பாத்திரத்தில் கொட்டி வைத்துவிட்டு, கற்களையும் கள்ளிகளையும் அவர்கள்பொறுக்கிவரச் சென்றபோது, ஒரு குரங்கு பக்கத்து மரத்திலிருந்து வேகமாக இறங்கி வந்தது. ஒரு கை நிறையக் கடலையை அள்ளிக் கொண்டு, மரத்தின் மேல் ஏறியது.

குரங்கு ஒரு கிளையில் உட்கார்ந்து கடலையைத் தின்று கொண்டிருக்கும் போது ஒரு கடலை அதன் கையிலிருந்து தவறிக் கீழே தரையில் விழுந்து விட்டது. அதை விடுவதற்கு மனமில்லாத குரங்கு மரத்திலிருந்து கீழே தாவியது. அப்போது பார்த்து விட்டனர் வீரர்கள்! உடனே, கூச்சல்போட்டு அதைத் துரத்தினர். பயந்து போய் அது மரத்தில் பாய்ந்து ஏறியது. ஏறும் போது கையில் வைத்திருந்த மற்ற கடலைகளும் கீழே விழுந்து சிதறி ஓடின.


''பாவம், ஒன்றுக்கு ஆசைப்பட்டுப் பலவற்றை இழந்து விட்டதே!'' என்றார் அமைச்சர்.

''இப்படி நானும் ஒரு சின்ன நாட்டின் மேல் ஆசைப்பட்டு, என் பெரிய நாட்டை இழந்துவிடக் கூடாது'' என்று நினைத்த அரசன், உடனே, ''போர் வேண்டாம். ஊர் திரும்புங்கள்'' என்று உத்தரவிட்டான்.

காரணம் தெரியாதா?

ஓநாய் ஒன்று இறக்கும் சமயத்தில், தன் நண்பனான நரியிடம் சொன்னது:

''என்னைக் கொடியவன் என்று எல்லோரும் சொல்லுகிறார்களே, நான் செய்த நல்ல காரியங்களை யாரும் பாராட்டுவதில்லை. ஒரு தடவையா, இரண்டு தடவையா, பல தடவை நான் இரக்கத்துடன் நடந்து கொண்டிருக்கிறேன்... ஒருநாள் நான் ஓர் ஆட்டுக் குட்டியைப் பார்த்தேன். மந்தையிலிருந்து அது தனியாகப் பிரிந்து நின்றது. நான் நினைத்தால், அதை அப்படியே அடித்துச் சாப்பிட்டிருப்பேன். ஆனாலும், 'பாவம், சின்னக் குட்டி' என்று விட்டு விட்டேன்.''



''இன்னொரு தடவை ஆடுகள் எல்லாம் கூட்டமாக நின்று என்னை வாயில் வந்தபடி கேவலமாகப் பேசிக் கொண்டிருந்தன. அப்போது நான் ஒரு புதரின் பின்னால் நின்று கேட்டுக் கொண்டுதானிருந்தேன். எனக்கு மிக வருத்தமாயிருந்தும், 'பிழைத்துப் போகட்டும்' என்று விட்டுவிட்டேன்.''


ஓநாய் கூறியதைக் கேட்டதும், ''ஆமாம்,'' நீ சொல்வதெல்லாம் உண்மைதான். இந்த இரு சம்பவங்களையும் நான் என் கண்களால் கண்டேன்'' என்றது நரி.

''உண்மையாகவா?''

''ஆம். ஆட்டுக் குட்டியை நீ தனியாகப் பார்த்தும், அடித்துக் கொல்லாமல் விட்டதற்குக் காரணம் வேறொன்றுமல்ல; அன்றைக்கு உன் தொண்டையிலே ஓர் எலும்பு குறுக்காக மாட்டிக் கொண்டிருந்ததே...''

''அப்படியானால், ஆட்டு மந்தையை நான் சும்மா விட்டுவந்தேனே, அப்போதும் என் தொண்டையில் எலும்பா மாட்டிக் கொண்டிருந்தது?''

''அப்போது எலும்பு மாட்டிக் கொள்ளவில்லை. அந்த மந்தைக்குக் காவலாகப் பெரிதாக ஒரு முரட்டு நாய் இருந்ததே, அதனிடம் மாட்டிக் கொள்ளப் பயந்துதான் சும்மா இருந்தாய்'' என்றது நரி.



அவன் குற்றவாளியா?

மாவீரர் அலெக்சாந்தரின் தந்தையாராகிய பிலிப் அரசர், கொலு மண்டபத்தில் உட்கார்ந்திருந்தார். அவரின் எதிரே 'குற்றவாளி' என்று ஒருவனைக் கொண்டு வந்து நிறுத்தினார்கள், அரசாங்கக் காவலர்கள்.

பிலிப் அரசர் விசாரணை நடத்தினார். அவர் கேட்ட கேள்விக்கு 'நான் குற்றவாளி அல்ல. தவறாக என்னைப் பிடித்து விட்டனர்' என்றான் அவன்.

''அதற்குச் சாட்சி?''

''ஆண்டவன்தான் சாட்சி!'' என்று கூறி, தனக்கும் அந்தக் குற்றத்துக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்பதை விளக்கமாக எடுத்துச் சொல்லிக் கொண்டிருந்தான். அவன் பேச்சைக் கேட்டுக்கொண்டிருந்த அரசருக்குத் தூக்கம் கண்ணைச் சுற்றியது. உட்கார்ந்தபடியே கண் அயர்ந்து விட்டார். சற்று நேரத்தில் திடுமென விழித்துக் கொண்டார்.


''என்ன இருந்தாலும் நீ குற்றவாளிதான். உனக்குப் பத்து ஆண்டுக் கடுங்காவல் தண்டனை அளிக்கிறேன்'' என்றார், அரசர்.

''அரசே, உங்கள் தீர்ப்பு சரியல்ல. நான் இதை எதிர்த்து மேல்முறையீடு செய்யப் போகிறேன்.''

''யாரிடம் போய் மேல் முறையீடு செய்வாய்?'' என்று கோபமாகக் கேட்டார் அரசர்!

''உறங்கும் பிலிப் அளித்த தண்டனையை எதிர்த்து, விழித்திருக்கும் பிலிப்பிடம் முறையிடுவேன்.''

இதைக் கேட்ட அரசர் திகைத்தார். 'இவன் சொன்னதை முழுமையாகக் கேட்காமல் தண்டனை கொடுத்து விட்டோமே!' என்று எண்ணினார். மறுபடியும் தீர விசாரணை செய்து, அவன் குற்றவாளி அல்ல என்பதை அறிந்து அவனுக்கு விடுதலை அளித்தார்!



மிருகங்கள் என்றால் உங்களுக்கு மிகவும் பிடிக்கும். அதுவும் பலவகைக் காட்டு மிருகங்களும் இருக்கிற மிருகக் காட்சி சாலைகள் என்றால், கொண்டாட்டம்தானே! சென்னை, சென்ட்ரல் ரயில் நிலையத்துக்குப் பக்கத்திலிருந்த மிருகக் காட்சி சாலை, சென்னையிலிருந்து சுமார் 30 கிலோ மீட்டர் தூரத்திலுள்ள வண்டலூருக்கு மாற்றப்படுகிறது. ஓரளவு வேலைகள் முடிந்து, சில வகை மிருகங்களும், பறவை இனங்களும் அங்கே உள்ளன.

வண்டலூரில் உருவாகி வருகிற புதிய மிருகக் காட்சி சாலை பற்றிய தகவல்களை அறிந்து, கோகுலம் சிறுவர், சிறுமியர்க்குத் தெரிவிப்பதற்காக வண்டலூர் போனோம். அங்கே நாங்கள் பார்த்தவற்றை, கேட்டறிந்த தகவல்களை இப்போது உங்களுக்குச் சொல்லப் போகிறோம்.


வண்டலூரில் தயாராகி வருவதை, மிருகக் காட்சி சாலை என்று சொல்வதைவிட, 'உயிரியல் பூங்கா' என்று சொன்னால்தான் பொருத்தமாய் இருக்குமாம். இது மிகவும் பிரம்மாண்டமானது. மொத்தப் பரப்பு எவ்வளவு தெரியுமா? 1300 ஏக்கர்! இது மரங்கள் அடர்ந்த பகுதி. இப்பூங்கா சுமார் மூன்று கோடி ரூபாய் செலவிலே உருவாகி வருகிறது.

இப்போதைக்கு, இங்கே இருக்கிற மிருக இனங்கள் குறைவுதான். இரண்டு சிங்கங்கள், எழெட்டுப் புலிகள், எழு யானைகள், இரண்டு நீர் யானைகள்; இவை தவிர முதலைகளும் இருக்கின்றன.

குரங்குகளுக்கென்றே மூன்று, நான்கு தனிக் கூண்டுகள். அவற்றிலே ஏராளமான குரங்குகள்—அனுமார் குரங்குகள், நீலகிரிக் குரங்குகள், சிங்கவால் குரங்குகள் என்று பல வகைகளில் உள்ளன. பல வகை மான்களும், பெரிய பரப்பு ஒன்றிலே, சுதந்திரமாய்ச் சுற்றி வருகின்றன.

இப்போது, சிங்கங்களும், புலிகளும் கூண்டிலே அடைக்கப்பட்டுள்ளன. ஆனால், இந்தக் கூண்டு வாசம் இன்னும் கொஞ்ச காலம்தான்! அதன் பின் இவற்றையெல்லாம் சுதந்திரமாய்த் திரிய விடப் போகிறார்கள். என்ன! இது எப்படிச் சாத்தியம் என்று ஆச்சரியப்படுகிறீர்களா? இல்லை, பயப்படுகிறீர்களா? பெரிய பரப்பில் சிங்கங்களை உலவ விட்டிருப்பார்கள். ஆனால், அந்தப் பெரிய இடத்தைவிட்டு, சிங்கங்களால், வெளியில் வர முடியாது. காரணம், அந்த இடத்தைச் சுற்றி, நமக்கும் சிங்கங்களுக்கும் இடையிலே அகலமாய் ஒரு அகழி போல வெட்டி இருப்பார்கள். தடுப்புச் சுவரும் இருக்கும். மிருகங்கள் இருக்கிற இடத்தில், சிறுசிறு குன்றுகள், குகைகள், மரங்கள், செடிகொடிகள் எல்லாம் இருக்கும். பார்க்க அசல் காடு போலக் காட்சி தரும். நாம் காட்டுக்குள்ளே போய், சிங்கங்களைப் பார்ப்பது போல இருக்கும். புலிகளுக்கும் இதுபோல் தனியாய் ஓர் இடம் அமைக்கப்படும்.

வண்டலூருக்குப் போகலாமா?



இப்போது: வண்டலூரில் பெரியதும், குட்டிகளுமாய் ஏழு யானைகள் இருக்கின்றன. இவற்றுக்கும் முன்னாலே சொன்னது போன்ற அமைப்புத்தான்! இப்போதே அப்படித்தான் இருக்கின்றன.

நீர் யானைகள் இரண்டு இருக்கின்றன. இருந்தாலும், வருகிற பார்வையாளர்கள், இவற்றைப் பார்க்க முடிவதில்லை. ஏன் என்று கேட்கிறீர்களா? அவை எப்போது பார்த்தாலும், தண்ணீருக்கடியிலேயே இருக்கின்றன. எப்போதாவது வெளியில் வந்தால், சிறுவர் சிறுமியர் போடுகிற மகிழ்ச்சிக் கூச்சல் இருக்கிறதே! அப்பப்பா!

நிறையப் பறவை இனங்களும் இருக்கின்றன. மயில், பஞ்சவர்ணக் கிளி, வெள்ளைக்கிளி என்று பலவகையான கிளிகள், வாத்துக்கள், நாரைகள், பலவகையான பறவைகளும், கூண்டுகளுக்குள் அங்குமிங்கும், ஒலி எழுப்பிய படி பறக்கும்போது, பார்க்கிற நமது மனம் மகிழ்ச்சியில் துள்ளுகிறது.

ஒருபுறம் முதலைகள் இருக்கின்றன. இன்னும் நிறைய முதலைகள் வரப் போகின்றனவாம்!

ஒரு பக்கத்தில் பெரிய்ய்ய்...ய மலைப்பாம்பு! நீளம் சுமார் பத்துஅடி. பக்கத்திலே ஒரு ராஜநாகம். இதன் நீளமோ சுமார் பத்தரை அடி! இது சீறி, படம் எடுக்கிற போது, நாம் பார்க்க வேண்டுமே! ரொம்ப த்ரில்!

இன்னும் நிறைய மிருகங்கள் இங்கே வர இருக்கின்றன. இந்தியாவின் மற்ற ஊர்களிலும், வெளி நாடுகளிலும் இருக்கிற பல்வேறு மிருகக் காட்சி சாலைகளுடன், அரசாங்கம் தொடர்பு கொண்டு விதவிதமான மிருகங்களையும் பறவைகளையும் இங்கே கொண்டுவர





முயற்சிகள் செய்து கொண்டிருக்கிறது. அப்படி வெளிநாடுகளிலிருந்து வரப் போகிற மிருகங்கள் என்னென்ன தெரியுமா? ஆப்பிரிக்க யானைகள், கங்காரு, அமெரிக்கச் சிங்கம்.

இவை தவிர இன்னும் என்னென்ன வரப் போகின்றன தெரியுமா? மனிதக் குரங்கு, ஒட்டகம், ஒட்டகச் சிவிங்கி, சிறுத்தை, கரடி, நெருப்புக் கோழி, கழுதைப் புலி, காட்டுப்பன்றி, முள்ளம் பன்றி, காண்டாமிருகம், இன்னும் எத்தனை எத்தனையோ!

பூங்காவினைச் சுற்றிப் பார்க்க நடப்பதால், கால் வலிக்குமல்லவா? அப்போது, உட்கார்ந்து, ஓய்வெடுக்க, மரங்கள் அடர்ந்த ஒரு பூங்கா இருக்கிறது.

உயிரியல் பூங்கா முழுவதும், குடி தண்ணீர் வசதி செய்யப்பட்டுள்ளது. தாகமாய் இருந்தால், உடனே தண்ணீர் குடிக்கலாம். தண்ணீர் சுவையாகவே இருக்கிறது.

இன்னொரு தகவல் தெரியுமா? இங்கே இருக்கிற மாமிசம் சாப்பிடும் மிருகங்களுக்கெல்லாம், வாரம் ஒரு நாள் உணவு கிடையாது! அன்றைக்கு அவை விரதம். இது என்ன காரணத்தால் தெரியுமா? தினமும் மாமிசம் சாப்பிடுகிற இந்த மிருகங்களை ஒரு நாள் பட்டினி போட்டால்தான் இவற்றின் உடம்பு ஆரோக்கியமாய் இருக்குமாம்!





இந்தப் பூங்காவில், வண்ண வண்ண மீன்கள் கொண்ட, மீன் காட்சிசாலை ஒன்றையும் அமைக்கப் போகிறார்களாம். இங்கே சில அபூர்வமான மீன் வகைகளும், கடல்வாழ் உயிரினங்களும், ஆமை வகைகளும் வரப் போகின்றன.

தவிர, குழந்தைகள் மட்டுமன்றி பெரியவர்களும், ஜாலியாய்ச் சுற்றிவரக் 'குழநதைகள் ரயில்' விடப்போகிறார்கள். சந்தோஷமாய்ச் சுற்றிவரலாம்.

சென்னையிலிருந்து, வண்டலூருக்கு நிறைய பஸ்கள் இருக்கின்றன. மிருகக் காட்சி சாலை முழுமையாகத் தயாரானதும் பஸ் வசதி, இன்னும் அதிகரிக்கும். அப்போது, விடுமுறை நாட்களில், அம்மா, அப்பாவுடன் புறப்பட்டுப்போய், உயிரியல் பூங்காவை நன்றாகச் சுற்றிப் பார்த்து விட்டு, மாலையில் மகிழ்ச்சியாய் வீடு திரும்பலாம்.

அதெல்லாம் சரி!

இது எப்போது தயாராகும்?

இன்னும் ஓரிரு மாதங்களில்!

ஆனால் ஒன்று!

இப்போதுகூட நிறையப் பேர் தினமும் — குறிப்பாக சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் வந்து பார்த்துவிட்டுப் போகிறார்கள். நீங்கள்கூட, ஒரு தடவை, சந்தோஷமாய்ப் போய்ப் பார்த்துவிட்டு வரலாமே!

—எஸ். சந்திரமௌலி

போட்டோக்கள்; **விஜயகுமார்.**



சர். சி. வி. ராமன்

'இக்கழகத்தில் பார்வையாளர்கள் அனுமதிக்கப்பட மாட்டார்கள். தயவு செய்து எங்களைத் தொந்தரவு செய்யாதீர்கள்' என்று ஓர் ஆராய்ச்சிக் கழகத்தின் வாயிலில் காணப்பட்டது. பெங்களூரில் அமைந்துள்ள அந்தக் கழகத்தின்பெயர் தான் 'ராமன் ஆராய்ச்சிக் கழகம்.' இதை நிறுவியவர் உலகப் புகழ் பெற்ற விஞ்ஞானி சர். சி. வி. ராமன்.

ராமன், தமது 14—வது வயதிலேயே பி. ஏ. வகுப்பில் சேர்ந்து ஆசிரியர்களையும், மற்ற மாணவர்களையும் ஆச்சரியப் படச் செய்தவர்.

ராமன் எம். ஏ. தேர்வில் சென்னை மாநிலத்திலேயே முதலாவதாகத் தேறினார். அதேசமயம், உயர் பதவிக்காக அரசினர் நடத்திய நீதித்துறைத் தேர்வில் இந்தியாவிலேயே முதலாவதாக வந்தார்!

ஒரு முறை இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்குக் கப்பலில் வரும்போது, ராமன், மேல் தளத்தில் நின்று கடலையும், வானத்தையும் மாறி மாறிப் பார்த்தார். இரண்டும் நீல நிறத்தில் இருப்பதற்கு என்ன காரணம் என்று சிந்திக்கத் தொடங்கினார். ஊர் திரும்பியதும், அது குறித்து ஆராய்ச்சிகள் செய்தார்; வெற்றியும் கண்டார்!

ஒரு பொருள் எத்தகைய அணு அமைப்பைக் கொண்டது என்பதை அறியக் கூடிய இந்தக் கண்டுபிடிப்புக்கு 'ராமன் விளைவு' என்று பெயர் கொடுக்கப்பட்டது. பல்வேறு பொருட்களின் மூலக்கூறு மற்றும் படிக அமைப்புக்களை ஆராய இது பெரிதும் உதவியது.

ராமன் பெற்ற பட்டங்களும், பரிசுகளும் ஏராளம். பல்வேறு நாடுகளும் அவரை அழைத்து, அவர் பேச்சைக் கேட்டன. பல பல்கலைக் கழகங்கள் அவருக்குக் கௌரவ டாக்டர் பட்டம் வழங்கின. ஆங்கில அரசாங்கம் 'சர்' பட்டம் வழங்கியது. நம் நாட்டிலேயே மிக உயர்ந்த விருதான 'பாரத ரத்ன'வும், உலகின் தலைசிறந்த பரிசான நோபல் பரிசும் அவரை வந்தடைந்தன.



வீரமா முனிவர்

'பரமார்த்த குரு' என்னும் நகைச்சுவைக் கதையைப் படித்து நீங்களெல்லாம் விழுந்து விழுந்து சிரித்திருப்பீர்கள். அக்கதைகளை எழுதியவர் நம் தமிழ் நாட்டுக்காரரல்லர்; இத்தாலி நாட்டிலே பிறந்து, நம் தமிழ் நாட்டுக்கு வந்து, 37 ஆண்டுகள் தமிழ்த் தொண்டு புரிந்த வீரமா முனிவர்தான் அதை எழுதியவர்!

இவருடைய இயற்பெயர் கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி. தமிழ் நாட்டுக்கு வந்த பிறகுதான் வீரமா முனிவரானார்.

இவர் தமிழ் நாட்டுக்கு வருவதற்கு முன்பே பல மொழிகளை நன்றாக அறிந்திருந்தார். தமிழ்நாட்டிற்கு வந்த பிறகு, தமிழ் மொழியை ஆவலோடு கற்றுக்கொண்டார். தமிழில் நன்கு பேசவும், எழுதவும் தெரிந்த பிறகு, தமிழ் இலக்கிய நூல்களையும், இலக்கண நூல்களையும் கற்றார். பிறகு, இவரே தமிழில் பல நூல்களை இயற்றத் தொடங்கினார்.

இவர் காவி உடை அணிந்து, சந்தனப் பொட்டு வைத்துக்கொண்டார். மதுவையும், மாமிசத்தையும் தொடமாட்டார்.

விருத்தாசலத்திற்குப் பக்கத்திலுள்ள கோனான் குப்பம் என்ற ஊரில் தமிழ்நாட்டுப் பெண்மணி போல் தேவமாதாவின் உருவத்தை அமைத்தார். பெரியநாயகி அம்மையார் எனப் பெயர் கொடுத்து, அந்த அம்மையாரின் திருவருளை வேண்டி ஒரு காப்பியம் இயற்றினார். 'தேம்பாவணி' என்பது அதன் பெயர்.

கொள்ளிடக் கரையில் உள்ள ஏலாக்குறிச்சியில் உள்ள அடைக்கல மாதாவைக் குறித்து ஒரு செய்யுள் நூல் எழுதினார். 'திருக்காவலூர்க் கலம்பகம்' என்பது அதன் பெயர்.

செய்யுள் நூல்கள், உரை நடை நூல்கள், இலக்கண நூல்கள், அகராதிகள் எனப் பல நூல்களை இவர் தமிழ் மொழிக்குத் தந்தார். இவர் தந்த 'சதுர் அகராதி' பிற்காலத்தில் அகராதி தயாரித்தவர்களுக்கெல்லாம் வழிகாட்டியாக விளங்கியது.



நேரு மாமாவின் பீமனும் அர்ஜுனனும்

ஒருநாள் மாலை நேரம். நேரு மாமாவைக் காண 13 வயது அமெரிக்கச் சிறுமி ஒருத்தி அவர் வசித்த 'தீன் மூர்த்தி பவன்'த்திற்கு வந்தாள். நேரு மாமா அவளை அன்புடன் வரவேற்றார். சிறிது நேரம் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தார்; அவளுடன் சேர்ந்து சிற்றுண்டி அருந்தினார்.

பிறகு, ''மது...! பெபிடா...!'' என்று குரல் கொடுத்தார். உடனே, அவர் அன்பாக வளர்த்துவந்த இரண்டு நாய்கள் அங்கு ஓடிவந்தன. அவற்றை அவர் தட்டிக் கொடுத்தார். சில நிமிஷங்கள் அவற்றுடன் விளையாடினார்.

''இங்கே பீமன், அர்ஜுனன் என்று இரண்டு பேர் இருக்கிறார்கள். நீ அவர்களைப் பார்க்கவில்லையே! வா, காட்டுகிறேன்'' என்று கூறி அந்தச் சிறுமியை அழைத்துக்கொண்டு சென்றார். அர்ஜுனனும், பீமனும் யாராக இருக்கும் என்று அவள் யோசித்துக்கொண்டே சென்றாள்.


''இதோ பார்! இவன்தான் பீமன்! இவன்தான் அர்ஜுனன்!'' என்று கூறி, அங்கிருந்த இரண்டு புலிக்குட்டிகளைக் காட்டினார். அவற்றுடன் சிறிது நேரம் கொஞ்சி விளையாடினார். அப்புறம், சிறிது தூரத்திலிருந்த நாலைந்து பிராணிகளைக் காட்டினார். பார்ப்பதற்கு அவை விநோதமாக இருந்தன. பூனை முகமும், கரடி உடலும், நரி வாலும் அந்தப் பிராணிகளுக்கு இருந்தன.

''இவை இமயமலையில் வசிக்கும் பிராணிகள். பண்டா என்று பெயர்.'' என்றார் நேரு.

நேரு மாமாவையும், அவரது அன்புக்குரிய பிராணிகளையும் பார்த்ததில், அச்சிறுமிக்கு அளவில்லாத ஆனந்தம். அவள், ''நான் போய் வரட்டுமா?'' என்று கூறி விடைபெற்றபோது, நேரு மாமா, தம் உதவியாளரிடம் ஏதோ கூறினார். சிறிது நேரத்தில், ஒரு பெரிய புத்தகம் ஒன்றை அவர் கொண்டு வந்தார். அதை வாங்கி, அந்த அமெரிக்கச் சிறுமியிடம் கொடுத்தார். சிறுமி அந்தப் புத்தகத்தின் பெயரைப் பார்த்தாள்; 'உலகச் சரித்திரம்' என்று உரக்கப் படித்தாள். நேரு மாமா எழுதிய அந்தப் புத்தகத்தில், அவரைக் கையெழுத்திட்டுத் தரும்படி கேட்டாள். நேரு மாமா அவ்வாறே செய்தார்.

வரலாற்று விந்தைகள்.

கோவி.சஞ்சீவி



பங்களாதேஷின் 4 அடி உயரம் வரை வளரும் 'ஜென்பாலட்' இராக்கன் வாழ் மக்கள் வீடுகளுக்கு மழைப்பூவாக உபயோகிக்கின்றனர்.



பாரசீகக் கவி அப்துல் பைசி அக்பரின் 3 மகன்களுக்கு 15 ஆண்டுகள் பாடம் கற்பித்தார். ஒவ்வொரு ஆண்டும் அவர்களின் எடைக்கு எடை தங்கம் ஊதியமாக அளிக்கப் பட்டது.



ஆஸ்திரேலியா, என்ஸ்டனில் உள்ள இம்மாதா கோவில் 1913, ஜனவரி-4-ல் 120 தொண்டர்களைக் கொண்டு ஒரே நாளில் கட்டி முடிக்கப் பட்டது.



ஈக்வேடார் நாட்டில் சிரிமோயா பழத்துடன், அன்னாசி, வாழைப்பழம் சேர்த்து ஐஸ்கிரீம் போல சாப்பிடுகின்றனர்.

புதுமைப் போட்டி ① முடிவு

மொத்தம் வந்த விடைகள்: 2167
சரியான விடைகள்: 213

ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடைகள் இருந்ததால், சென்ற ஆகஸ்ட் மாதம் அறிவித்தபடி, அவற்றைக் குலுக்கிப் போட்டு முதலாவதாக வந்த விடைக்கு (116) முதல் பரிசும், 2-வதாக வந்த விடைக்கு (42) இரண்டாம் பரிசும் வழங்கப்படுகின்றன.



ஏ. பத்மநாபன்

முதற் பரிசு ரூ. 25:

ஏ. பத்மநாபன்,
28-பி, ஹட்கோ காலனி,
டாடா பேட்,
கோவை-21.



எஸ். ஸ்ரீராம்

இரண்டாம் பரிசு ரூ. 15:

எஸ். ஸ்ரீராம்,
6, 2-வது தெரு,
ஜட்ஜ் காலனி,
தாம்பரம் சானடோரியம்,
சென்னை-47.



ஜனனி

குலுக்கிப்போட்ட சீட்டுகளில் முதல் இரண்டு சீட்டுகளை எடுத்த குழந்தையின் பெயர் தத்வ **தர்ஷனா ஜனனி.** வயது ஆறு. 1978-ஆம் ஆண்டு நேரு மாமா பிறந்த நாளில் பிறந்தவள். ஸ்ரீலங்காவைச் சேர்ந்த இத்தமிழ்க் குழந்தை தற்போது சென்னை, சர்ச் பார்க் கான்வென்டில் முதல் வகுப்பில் படித்து வருகிறாள்.

சரியான விடைகள்:

கட்டம்	1:	பக்கம் 66: 'சிவனருட் சுந்தரர்' வண்ணப் படக்கதையில் வலது மேற்புறம் உள்ள பெண்ணின் கொண்டை.
கட்டம்	2:	பக்கம் 23: 'கார்டுன் மில்க் பிஸ்கட்ஸ்' விளம்பரத்தின் அடியில் பெரிய எழுத்தில் காணப்படும் 'கவிதை' என்பதில் உள்ள 'விதை.'
கட்டம்	3:	பக்கம் 35: 'கடத்தப்பட்ட சிறுவன்' கதையில் வரும் டேவிட் தலையில் அணிந்திருக்கும் தொப்பி.
கட்டம்	4:	பக்கம் 8: 'திருக்குறள் புதிர் 24-ல்' உள்ள அம்மாவின் வலது கால்.
கட்டம்	5:	பக்கம் 42: 'அனிதாவின் கண்ணீர்' தலைப்பிலுள்ள சிறுமியின் சடையின் ஒரு பகுதியும் ரிப்பனும்.
கட்டம்	6:	பக்கம் 63: 'கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர் பட்டியலில் 1757-வது உறுப்பினரின் முகவரியில் உள்ள 'குரிசிலாப்பட்டு' என்பதில் உள்ள 'சிலாப்'.
கட்டம்	7:	பக்கம் 89: 'வார்த்தை எதற்கு? வருமே சிரிப்பு!' என்ற பகுதியில் இடது கீழ்ப்புறமுள்ள கட்டடத்தின் ஒரு பகுதி.
கட்டம்	8:	பக்கம் 12: 'கழுதைத் தூக்கம்' என்ற துணுக்கில் கழுதையின் எதிரேயுள்ள குப்பைத் தொட்டி.

கட்டம் 9: பக்கம் 54: 'காவல் தெய்வம்' கதையில் வடிவம்மையின் இடது தோளிலுள்ள சேலை, தொட்டிலின் பகுதிகள்.

கட்டம் 10: பக்கம் 47: 'அரவிந்தன் கண்ட அதிசயம்' கதையில் மரத்தின் பின்புறமுள்ள கோணிச் சாக்கு.

கட்டம் 11: பக்கம் 30: 'எருதுக்குப் பதில்' குட்டிக் கதையில் ஏர்க்காலின் ஒரு பகுதி.

கட்டம் 12: பக்கம் 15: பிரில் இங்க்விளம்பரத்திலுள்ள 'தயாரிப்புகள்' என்பதில் உள்ள 'ரிப்பு.'

கட்டம் 13: பக்கம் 70: 'சிவனருட் சுந்தரர்' கதையில் வலப்புறம் கீழேயுள்ள படத்தில் காணப்படும் 'உதைத்துக்' என்ற சொல்லின் ஒரு பகுதி.

கட்டம் 14: பக்கம் 43: 'கடலைப் பற்றிய செய்தி'களில் 5—வது கேள்வியில் உள்ள எழுத்துக்கள்.

கட்டம் 15: பக்கம் 83: 'யானையும் பன்றியும்' பாடலில் பன்றியின் எதிரேயுள்ள புல் பூண்டுகளில் ஒரு பகுதி.

கட்டம் 16: பக்கம் 17: 'நல்விருந்து' கதையில் இளையான்குடி மாற நாயனாரின் மனைவிக்குப் பின்புறம் தெரியும் நிழல்.

* ஒரு கட்டத்தில் உள்ளது எந்தப் பக்கத்தில் காணப்படுகிறது என்பதைக் குறிப்பிடாவிட்டாலும், எந்த இடத்தில் இருக்கிறது என்பதைத் தெளிவாகக் குறிப்பிட்டு எழுதியிருந்ததை ஏற்றுக் கொண்டோம்.
* பெரும்பாலோர் கட்டம் 13—ல் உள்ள 'தைத்து' என்பதற்கு அதே அளவுள்ள எழுத்துக்கள் எங்கே இருக்கின்றன என்பதைத் தேடிக் கண்டுபிடிக்காமல், 16—ஆம் பக்கத்தில் உள்ள 'புதைத்து' என்பதிலும் 50—ஆம் பக்கத்தில் உள்ள 'உதைத்து' என்பதிலும் உள்ளதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள்.
* அதேபோல், இன்னும் பலர் ஏமாந்தது 14—வது கட்டத்தில். 9, 14, 18, 34, 40, 42, 95, 96 பக்கங்களில் காணப்படும் 'அதிக' என்ற எழுத்துக்களை அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். அ தி க என ஒவ்வொரு எழுத்துக்கும் சிறிது இடைவெளி இருப்பதைக் கவனிக்கவில்லை.

பரிசு பெற்றவர்களுக்கும், சரியான விடை அனுப்பிய மற்றவர்களுக்கும் மனமார்ந்த பாராட்டு. சரியான விடை அனுப்பாதவர்களுக்கு...? அவர்களுக்கும் அச்சாரமாக எங்கள் பாராட்டு. அடுத்த அடுத்த போட்டிகளில் அவர்கள் வெற்றி பெறுவார்கள் என்ற நம்பிக்கையில்!

—ஆசிரியர்.



ராதா - கிருஷ்ண

உடையலங்காரப் போட்டி

தர்மபிரகாஷ் கல்யாண மண்டபத்தில் கிருஷ்ண ஜெயந்தி விழாவையொட்டி விஸ்வ ஹிந்து பரிஷத் நிறுவனம் ஏற்பாடு செய்திருந்த, சென்னையில் உள்ள பள்ளிச் சிறுவர்களுக்கான 'ராதா கிருஷ்ண உடையலங்காரப் போட்டி'யில் (2—வது, 3—வது வகுப்புகளுக்கான பிரிவில்) முதல் பரிசு பெற்ற குழந்தைகள்: ஆதர்ஷ உயர்நிலைப் பள்ளியைச் சேர்ந்த

சௌமியநாராயணன் (கிருஷ்ணன்)

ரோஹிணி (ராதா.)



குட்டு வெளிப்பட்டது

எம். ஆர். ராஜன்

மாம்பட்டிப் பெருமாள் கோயில் பிரும்மோத்ஸவத் திருவிழா. ஊர் களை கட்டி விட்டது. பிரும்மோத்ஸவத்தை முன்னிட்டு கோவில் உள், வெளிப் பகுதிகளில் பந்தல் போடுதல், விளக்கு வசதி, மற்றும் காலணிகள் வைத்து விட்டுப் போகும் இடம் ஆகியவற்றை எல்லாம் திருநாள் துவங்க ஒரு மாதம் முன்பு ஏலம் விடப்படும். ஏலம் விடுவது தேவஸ்தான — நிர்வாக தர்மகர்த்தாக்கள், மற்றும் பரம்பரை தர்மகர்த்தாக்கள் ஆகியோரது பொறுப்பு. ஆனால், நிர்வாகஸ்தர்கள், அந்த அலுவலகத்துக் குமாஸ்தாவிடமே இந்தப் பொறுப்பை ஒப்படைத்து விட்டு, மேற்பார்வை மட்டும் பார்த்து வந்தார்கள்.

இந்த நிலையைச் சாதகமாக்கிக் கொண்டு குமாஸ்தா கோபாலன், தனக்கு வேண்டியவர்களுக்கு ஏலம் கிடைப்பது போலச் செய்து விடுவான். ஏலம் என்றும், சீட்டு எடுப்பு என்றும் சொல்லுவான். ஆனால், குலுக்குச் சீட்டில் தனக்கு வேண்டியவர்களுக்கு — குத்தகை கிடைப்பது போலச் செய்வான். இதற்கு அவன் நல்ல பணம் லஞ்சமாகப் பெற்றுவந்தான். யாராவது அவனைக் கேட்பார்களானால் —

''அட வாங்கண்ணே, தர்மகர்த்தாவாவது — புடலங்காயாவது! எல்லாமே நான்தான்! செய்துப்புடுவோம்—'' என்று சொல்லிக் கொண்டிருந்தான். அவ்வளவு தூரம் ருசி கண்டிருந்தான். மிதப்பில் இருந்தான்.

இந்த முறை எப்படியாவது நாம் குத்தகை எடுத்து விட வேண்டும் என்று நினைத்துப் போட்டி போடுபவர்களெல்லாம், குலுக்குச் சீட்டில் ஏமாந்து விடுவார்கள்.

எல்லோருக்குமே நிதர்சனமாய்த் தெரிகிறது — தாங்கள் ஏமாற்றப்படுவது — ஆனால், நிரூபித்தாலல்லவா நடவடிக்கை எடுக்கலாம்? — குத்தகை ஏல முறையை மாற்றி அமைக்கலாம்? யாருக்கு அப்படியொரு புத்திசாலித்தனம் இருக்கிறது?

இந்த முறை கப்பன், காதர், டேவிட் மூன்று பேர்களும் பெயர் கொடுத்தனர். யார் பெயருக்கு வந்தாலும், மூன்று பேருமே

பங்கு போட்டு வேலைகளை முடித்துக் கொடுப்பது எனத் தீர்மானித்தனர். பெயர் கொடுத்ததோடல்லாமல், சின்னுனைக் கண்டு பேசி யோசனை கேட்டனர்.

சின்னுன், குறிப்பிட்ட குலுக்குச் சீட்டு ஏல நாளன்று, கோயில் தர்மகர்த்தாக்களுடன் பஞ்சாயத்துத் தலைவர்களையும் அழைக்குமாறும், முறைகேடு நடக்கும் போலிருந்தால் அதனை உடனே பஞ்சாயத்தில் வழக்காக எடுத்துக்கொண்டு நியாயம் வழங்குமாறு கேட்டுக் கொள்ளலாமென்றும் சொன்னுன். அன்றைய தினத்தில் தானும் அந்த இடத்துக்கு வருவதாகவும் தில்லுமுல்லைக் கண்டுபிடித்து நியாயம் பிறக்க வழி செய்வதாகவும் தைரியமும் யோசனையும் கூறி அந்த மூவரையும் அனுப்பி வைத்தான் சின்னுன்.

சுப்பன், காதர், டேவிட் மூவரும் சின்னுன் சொன்னது போலவே செய்தார்கள். அவர்களே பந்தல் காண்டிராக்ட், மற்றும் விளக்கு அமைப்பு — எல்லாவற்றிற்கும் பெயர் கொடுத்திருந்தார்கள்.

குறிப்பிட்ட தினத்தன்று வழக்கத்தை விட நிறையக் கூட்டம்.

முதலில் குமாஸ்தா கோபாலன் பேசினுன்:

பந்தல் காண்டிராக்டுக்கான குத்தகைக்கு நான்கு பேர் பெயர் கொடுத்திருப்பதாகவும், நான்கு பேருமே குறைந்த பட்சத் தொகைக்கே கேட்டிருப்பதால் வேலையை யாரிடம் விடுவது என்பதைத் தீர்மானிக்கக் குலுக்குச் சீட்டு முறையில் பெயர் எடுக்கப் போவதாகவும் சொன்னுன். பிறகு, கையில் மடித்து வைத்திருந்த நான்கு சீட்டுக்களையும் காட்டி, ஒரு சின்ன டப்பாவில் போட்டான். கோயில் பட்டாச்சாரியாரை அழைத்தான். அவர் ஒரு சீட்டை எடுத்துக் கொடுத்தார். தான் முன்னரே ஏற்பாடு செய்திருந்தது போலவே, ''சேணியன்'' பெயர் வந்திருந்தது.

அதைப்பிரித்து எல்லோருக்கும் காட்டுவதற்கு முன், சின்னுன் தர்மகர்த்தாக்களிடம் ஒரு விண்ணப்பம் செய்து கொண்டான். ''தயவு செய்து, அந்தச் சீட்டை அப்படியே பட்டாச்சாரியார் வைத்துக் கொண்டு இருக்கட்டும். நான் ஒரு சீட்டை எடுக்கிறேன். தர்மகர்த்தாக்கள் இருவரும் ஆளுக்கொரு சீட்டாய் எடுக்கட்டும். பிறகு பட்டாச்சாரியார் எடுத்த சீட்டில் என்ன பெயர் வந்திருக்கிறதோ, அந்தப் பெயருக்கே குத்தகை கொடுப்போம்'' என்றுன்.

''ஏன், எதற்கு எடுக்க வேண்டும்? முதலில் பட்டாச்சாரியார் எடுத்த சீட்டுக்குக் குத்தகையை விடுவதானுல் மற்றவர்கள் ஏன் சீட்டு எடுக்க வேண்டும் — தேவையே இல்லையே!'' என்றுன் குமாஸ்தா கோபாலன். தர்மகர்த்தாக்களும் முதலில் ஆட்சேபித்தார்கள் — ஆனுல், பஞ்சாயத்துத் தலைவர் — நாட்டாண்மை — எல்லோரும் ''சின்னுன் ஒரு காரியம் செய்தால் அதில், ஏதாவது காரணம் இருக்கும். எனவே செய்து பார்க்கலாம்'' என்றுர்கள். கடைசியில் எல்லோரும் ஒப்புக் கொண்டனர்.

சின்னுன் எடுத்த சீட்டைப் படித்தான். 'சேணியன்' என்றிருந்தது!

தர்மகர்த்தாக்கள் எடுத்தார்கள்.

பெயரைப் படித்தார்கள் — அவைகளிலும் 'சேணியன்' என்றே இருந்தது.

இப்போது பட்டாச்சாரியார் எடுத்த சீட்டில் உள்ள பெயரைப் படிக்கச் சொன்னுன் சின்னுன். அதுவும், ''சேணியன்'' என்றிருந்தது. யார் பேருக்குக் குத்தகை கிடைக்கவேண்டுமென்று கோபாலன் தீர்மானம்செய்து லஞ்சம் வாங்கி விடுகிருனே, அவன் பெயரைஅத்தனை சீட்டுகளிலும் எழுதி விடுவான்.

குமாஸ்தா கோபாலன் முகத்தில் அசடு வழிந்தது.

இதுபோலவேதான் ஒவ்வொருமுறையும் முறைகேடு நடப்பதாகக் கூறிய சின்னுன் — உடனடியாக முறையை மாற்றியமைத்து எல்லோருக்கும் வாய்ப்புக் கிடைக்க வழிவகை செய்யுமாறு — கேட்டுக் கொண்டான்.

சேணியனையும் கூப்பிட்டான் சின்னுன்.

''நான் வாழ்ந்தால் போதும்'' என்ற எண்ணம் மாறினுல்தான் இந்த முறைகேடுகள் ஒழியும் — தனக்கு என்பதனுல், எதையும் செய்ய மனிதன் தயாரானுல், முறைகேடுகள் மலியத்தான் செய்யும். பரந்த மனப்பான்மையோடு செயல் பட்டால், நாட்டுக்கும் நல்லது; நமக்கும் நல்லது'' என்று புத்தி சொன்னுன் சின்னுன்.

குமாஸ்தாவின் குட்டு வெளிப்பட்டது கண்டு எல்லோருக்குமே மகிழ்ச்சி.

சிக்கலான வழக்குக்கு மட்டுமல்லாமல், சீர்திருத்தம் செய்வதற்கும் ஒரு சின்னுன் என்ற பெயரும் வந்து விடும் போலிருக்கிறது!

பிருந்தாவனம்

கால் உடைந்நால்?

1. தேர் கொடுத்த வள்ளல் பெயரில்
   கால் உடைந்தால்,
   தேர் இழுக்கும் மிருகமாகும்.
2. அறுசுவைகள் ஒன்றின் பெயரில்
   கால் உடைந்தால்,
   அணைக்க உதவும் ஓர் உறுப்பாகும்.
3. பற்று அற்றவர் அணியும் உடையில்
   கால் உடைந்தால்,
   பாவலர் எழுதும் இதுவாகும்.
4. நகர்ந்து செல்லும் ஓர் உயிரின்
   கால் உடைந்தால்,
   நாம் கையிலே வளர்ப்பதாகும்.
5. கோமாதா சுரந்தளிக்கும் இதன்
   கால் உடைந்தால்,
   கோபத்தில் நாம் கடிக்கும் உறுப்பாகும்.
6. குரங்கின் கையில் கொடுக்கக்
   கூடாத இதன்
   கால் உடைந்தால்,
   குமரன் வசிக்கும் இடமாகும்.

விடை: 1. பாரி; பரி, 2. காரம், கரம், 3. காவி, கவி, 4. நாகம்; நகம், 5. பால் பல், 6. மாலே; மலே.

—இரா. சத்தியநாராயணன் (201),
சென்னை—93.






என் பெயர்?

அப்பாவின் கடைசி எழுத்தும்
அம்மாவின் கடைசி எழுத்தும்
சேர்ந்தது என் பெயர் — பாமா.

—ரா. மது (1121), கோவை—2.



ஏன் விழவில்லை?

ஒரு பாலத்தின் வழியாக மாட்டு வண்டி சென்றது. மாடு, வண்டி, வண்டிக்காரன், சாட்டை எல்லாவற்றையும் சேர்த்து 80 கிலோ எடை இருந்தது. 80 கிலோ எடைக்கு மேல் சிறு கடுகு அளவு எடையிருந்தாலும் அந்தப் பாலம் விழுந்துவிடும். பாலத்தில் வரும்போது மாடு சாணம் போட்டது. ஆனாலும் பாலம் விழவில்லை. என்ன காரணம்?

விடை: மாட்டின் வயிற்றுக்குள்ளிருந்து தானே சாணம் வெளிவந்தது?

—ப. நிர்மலா (1980), ஊத்துக்குளி.

உழைப்பில் சிறந்த ஜப்பானியர்

ஒருசமயம் ஜப்பானியர் இருவர் சென்னைக் கடற்கரையைக் காணவந்தார்கள். அங்கு கரும்பு விற்றுக் கொண்டிருந்த ஒருவரிடம் ஒரு கரும்பு 60 பைசா வீதம் இரண்டு கரும்புகளை வாங்கினார்கள். அவற்றின் மேலிருந்த பட்டைகளையெல்லாம் நன்றாகச் சீவி விட்டுக் கரும்பைக் கடித்துத் தின்றார்கள். பிறகு, சீவிய பட்டைகளை இணைத்து அழகான இரண்டு விசிறிகளைச் செய்தார்கள். அந்த விசிறிகளை, கரும்பு விற்றவரிடமே, விசிறி ஒன்று ஒரு ரூபாய் வீதம் விற்று விட்டனர். நிகர லாபம் ரூ. 0.80. என்னே அவர்களது சாமர்த்தியம்!


—சி. குமார் (5190), நெய்வேலி—3.



ஆறு துண்டுகள்

இதோ இந்த நிலாவின் குறுக்காக இரண்டு கோடுகள் போட்டேன். ஆறு துண்டுகளாகி விட்டன!

—எம். ஆர். ராஜ்குமார் (2248), பச்சப்பட்டி, சேலம்—3.






உண்மையான பாராட்டு

தாமஸ் ஆல்வா எடிசன் மின்சார பல்புகளைக் கண்டுபிடித்தவுடன் அவரைப் பலரும் பாராட்டினர். அப்போது அவர் சொன்னார். ''நான் இதுவரை கண்டுபிடித்தவைகளைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்க இப்போது நேரமில்லை. எதிர்காலக் கண்டுபிடிப்புக்களைப் பற்றி நிறையச் சிந்திக்க வேண்டியிருக்கிறது. தயவு செய்து அதற்கு நேரம் கொடுங்கள். அதுதான் நீங்கள் எனக்கு அளிக்கும் உண்மையான பாராட்டு''.

—விஜயமணாளன் உரையிலிருந்து.
நெ. அன்புச் செழியன் (1727),
பண்ணுருட்டி.



ஆகஸ்ட் சுதந்திரம்

நம் தேசம் ஆகஸ்ட் 15—ஆம் தேதி சுதந்திரம் பெற்றது. அதே மாதத்தில் சுதந்திரம் பெற்ற நாடுகள்:

கொரியா	— ஆகஸ்ட் 15
பாகிஸ்தான்	— ஆகஸ்ட் 14
இந்தோனேஷியா	— ஆகஸ்ட் 17
ஸ்விட்சர்லாந்து	— ஆகஸ்ட் 1

—பழ. சாந்தி (5939) இராயவரம்.

மெழுகுவர்த்தி

மற்ற விளக்குகளை விட மெழுகு வர்த்தியின் வெளிச்சம் கண்ணுக்குக் குளிர்ச்சி அளிக்கிறது. அதன் ஒளியில் எவ்வளவு நேரம் படித்தாலும் கண் எரிச்சலோ வேறு கேடுகளோ ஏற்படாது. மெழுகுவர்த்தி சிக்கனமான தும்கூட. ஐரோப்பியர் மெழுகைப் புனிதப் பொருளாகக் கருதுகின்றனர்.

—அர. சிலுவாசன் (2192), பண்ருட்டி



காணமற்போன இரு எழுத்துக்கள்

கீழே உள்ள சொற்கள் சில புகழ் பெற்ற பெயர்களைக் குறிப்பிடுகின்றன. ஆனால், ஒவ்வொரு சொல்லிலும் இரண்டு எழுத்துக்களைக் காணோம்! கண்டுபிடித்து நிறைவு செய்யுங்கள்.

1. தாமல் —உலகப் புகழ் பெற்ற ஒரு கட்டடம்.
2. கரன் —ஒரு கிரகம்.
3. வடர் —சப்த ரிஷிகளில் ஒருவர்.
4. ரோபா —ஒரு பெரிய தீபகற்பம்.
5. சனம் —ஒரு வாசனைப் பொருள்.
6. கோம் —குழந்தைகளின் அறிவையும் பண்பையும் வளர்ப்பது.

விடை: 1. தாஜ்மகால், 2. சுக்கிரன், 3. வசிஷ்டர், 4. ஐரோப்பா, 5. சந்தனம், 6. கோகுலம்.

—த. அருள்சிவபாலன், (47), செங்கல்பட்டு.





காந்திஜி, நேருஜி, அறிஞர் அண்ணா ஆகிய பெரியவர்களுக்குள் உள்ள ஓர் ஒற்றுமையைப் பாருங்கள். காந்திஜிக்கு 20 வயது சிறியவர் நேருஜி. நேருஜிக்கு 20 வயது சிறியவர் அறிஞர் அண்ணா.

காந்திஜி பிறந்த ஆண்டு 1869
நேருஜி பிறந்த ஆண்டு 1889
அறிஞர் அண்ணா பிறந்த ஆண்டு 1909

—க. உலகநாதன் (1583) பொள்ளாச்சி.




நல்லோரின் அறிவுரைகள்

- ஜாதி எதுவாயினும் அதிலும் ஒரு ஞானி உருவாக வழி உண்டு. —புத்தர்.
- எவ்வளவுதான் கல்வியும், செல்வமும் இருந்தாலும், அடக்கம் இல்லாவிடில் பண்பாடென்பது இல்லை. —ராஜாஜி.
- படிக்கத்தக்க புத்தகங்களைக் குற்றம் இல்லாமல் படிக்க வேண்டும். படித்த பின் படிப்புக்கு ஏற்றபடி நடக்க வேண்டும். —வள்ளுவர்
- விழித்திடு, எழுந்திடு, இலட்சியத்தை அடையும் வரை எங்குமே நிற்காதே! -விவேகானந்தர்
- துணிவுடன் செயல் புரிபவரிடமே அடிக்கடி வெற்றி தேடி வருகிறது. கோழைகளிடம் அது ஒருபோதும் போவதில்லை.

—ஜவஹர்லால் நேரு.

-டி. ஆர். பாலாஜி பிரபு (4149), தஞ்சை.




ஒளிந்திருக்கும் ஊர்கள்?

ஒவ்வொரு கேள்வியின் கீழேயும் சில சொற்கள் இருக்கின்றன. அந்தச் சொற்களிலிருந்து ஒன்றோ இரண்டோ எழுத்துக்களை எடுத்துச் சேர்த்தால் விடை கிடைக்கும்.

1. கண்ணகியின் கணவர் பெயர்.
   (கோதாவரி, நிலம், மான்).
2. பறவைகளின் சரணாலயம்
   (வேட்டி, டமாரம், கோவிந்தன், தாழம்பூ, சங்கு, கல்.)
3. விலங்குகளின் சரணாலயம்
   (முறம், பந்து, மலை.)
4. தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டியவர்.
   (இலை, ராஜன், ராகவன், ஜனவரி, மகன்.)

விடை: 1. கோவலன், 2. வேடந்தாங்கல், 3. முதுமலை, 4. இராஜராஜன்

—மு. க. மோகனச்செல்வி (3305) பச்சூர்.



விடுகதைப் புதிர்

வாய் உண்டு ஆனால் சாப்பிட முடியாது!
கால் உண்டு: ஆனால் நடக்க முடியாது!
பற்கள் உண்டு: ஆனால் கடிக்கமுடியாது!
முகம் உண்டு. ஆனால் வாய் கிடையாது!


விடை: சோ, நாற்காலி, சீப்பு, கடிகாரம்.

—டி. ஆர். சீதாராமன் (515) திருச்சி-2.

அங்கே என்ன மணி?

இந்திய அளவுப்படி பகல் 12 மணியாகும் போது மற்ற இடங்களில் மணி என்ன?


லண்டன்	(காலை)	6.30
நியூயார்க்	(காலை)	1.34
மாஸ்கோ	(காலை)	9.00
பாரிஸ்	(காலை)	6.39
பெர்லின்	(காலை)	7.24
ரோம்	(காலை)	7.20



ரங்கூன்	(மாலை)	12.55
சிங்கப்பூர்	(மாலை)	12.30
டோக்கியோ	(மாலை)	4.15
ஹாங்காங்	(மாலை)	2.07

—ஏ. எல். விஜி (397), மதுரை.

கேள்வி 2; பதில் 1



செம்புத்தண்ணீர் குறைந்தது ஏன்?
சின்னச்சாமி உளறியது ஏன்?

கூட்டும் சாம்பாரும் மணப்பது ஏன்?
குபுக்கென ரத்தம் கொட்டுவது ஏன்?

குழந்தை தொடர்ந்து அழுவது ஏன்?
குப்பை தெருவில் குவிவது ஏன்?

விடைகள்: 1. குடிப்பதனால், 2. பெருங்காயத்தால், 3) எடுப்பாரில்லாததால்.

—ஆர். பாஸ்கரன் (882) பெருமகளூர்.

அட்டை வண்ணப் படம்
—தாமு

கோகுலம் சிறுவர் சங்கம் உறுப்பினர் பட்டியல்—தொடர்ச்சி
உறுப்பினர் எண், பெயர், முகவரி

2034. பி. என். தேவ் ஆனந்த், 20, மகாமகக் குளம் மேற்குத் தெரு, கும்பகோணம்.
2035. ஜெ. அரவிந்தன், 138, ராம மடத் தெரு, திருத்துறைப்பூண்டி, தஞ்சைமாவட்டம்.
2036. இரா. விஜயலக்ஷ்மி, பி–81, ராஜராஜ சோழன் நகர், தஞ்சாவூர்.
2037. எஸ். குமார், 102, மூன்றாவது குறுக்குத் தெரு, வெங்கட நகர், பாண்டிச்சேரி—605 011.
2038. இரா. சாரங்கராசன், சி–18, மாதர் சங்க சாலை, வட்டம்–9, நெய்வேலி–1.
2039. வி. மங்களபவானி, சி–12, அச்சுக்கார வீதி, வட்டம்–17, நெய்வேலி–1.
2040. இரா. அரவிந்தராஜா, ஆர். ஆர். சி. 270/சி, ஜாய் வில்லா, பார்த்தசாரதி தெரு, திருநகர், மதுரை–6.
2041. எச். சத்தியநாராயணன், 1/18, அக்ரகாரம் தெரு, மணப்பாறை–621 306.
2042. எச். ஐஸ்வரியலக்ஷ்மி, 1/18, அக்ரகாரம் தெரு, மணப்பாறை–621 306.
2043. வெ. சுதா, 6, ஸ்டேட் பாங்க் காலனி, லால்பகதூர் நகர், மயிலாடுதுறை–609 001.
2044. ஆர். ராஜப்பிரபாகரன், 28, தெற்கு கிருஷ்ணன் கோயில் தெரு, 3–வது சந்து, மதுரை–1.
2045. பா. கிரிகுமார், 1, பள்ளித்தெரு, இராசிபுரம்–637 408.
2047. பா. ஸ்ரீராமன், த/பெ. ஆர். பி. சாரதி, பேகளம்பாக்கம்–603 103.
2048. க. செல்வசொர்ணம், 10, தனுக்கோடியாபுரம், புதுத்தெரு, கோவில்பட்டி.
2049. டி. ராதாகிருஷ்ணன், 8, Goubert School St., Vazaikulam, Pondicherry-12
2050. என். கணேசன், 57, நெடுமாறன் நகர், தர்மபுரி.
2051. மீ. சித்ரா ராஜம், 4/67, மாரியம்மன் கோவில் வீதி, பாப்பநாயக்கன்பாளையம், கோவை–37.
2052. பா. இராமையா, 182–ஏ, பவுண்டு தெரு, கடம்பத்தூர்–631 203.
2053. ஜி. ஞானசேகர், 51–டி, பொன்னுகரம் ரோடு, குமாரசாமிப்பேட்டை, தருமபுரி –636 703.
2054. ஜி. சத்தியமூர்த்தி, 51–டி, பொன்னுகரம் ரோடு, குமாரசாமிப்பேட்டை, தருமபுரி –636 703.
2055. க. ரூபேந்திரகுமார், த/பெ. கோ. கணேசன், அருணகிரி இல்லம் பின்புறம், நெல்லி நகர், பிடமனேரி, தருமபுரி–636 703.
2056. எம். எம். திருவேங்கடம், 17, சிதம்பரம் காலனி, ஈரோடு–1.
2057. து. பாபு, கிளின்டேல் என். சி., உலிக்கல் போஸ்ட், நீலகிரி–643 234.
2058. சி. வெங்கடேசன், பழுவூர் கிராமம் 247, சித்தாமூர் அஞ்சல், செங்கை மாவட்டம்.
2059. பி. நந்தினி, த/பெ. வி. பிரகாசம், கூசஹூர்–638 313.
2060. பி. ஆண்டாள், 186–ஏ, என். ஜி. ஓ. 'ஏ' காலனி, பாளையங்கோட்டை, திருநெல்வேலி–7.
2061. எஸ். வி. வீரராகவன், 12, கே. ஆர். கோயில் தெரு (தெற்கு) மேற்கு மாம்பலம், சென்னை–33.
2062. A.R. Nirmala, D/o. S. Arunachalam, LIC of India (D.O) Bistupur Main Road, Jamshedpur, Bihar State
2063. வி. எஸ். சித்ரா, 71/சி, வி. எம். தெரு, கும்மிடிப்பூண்டி, 601 201.
2064. இ. முனிவேலு, 84/ஏ, வி. எம். தெரு, கும்மிடிப்பூண்டி–601 201.
2065. ஜி. ராகவேந்திரன், 15, தித்தாரப்பன் முதலி தெரு, சென்னை–5.
2066. ஜி. இராமகிருஷ்ணன், 15, தித்தாரப்பன் முதலி தெரு, சென்னை–5.
2067. ம. பரமேஸ்வரன், 94, மேலத்தெரு, பத்தமடை–627 453.
2068. வி. சுப்பராயலு, அம்பலம் பண்ணை, கீழ்பாகம், மூலைக்கரைப்பட்டி, திருநெல்வேலி மாவட்டம்.
2069. இ. சரளா, 20, வளத்தீஸ்வரன் கோவில் தெரு, காஞ்சிபுரம்–631 501.
2070. இ. வள்ளி, 20, வளத்தீஸ்வரன் கோவில் தெரு, காஞ்சிபுரம்–631 501.
2071. எஸ். கயல்விழி, 4, தெற்குத் தெரு, சிங்கராயர் காலனி, மதுரை–2.
2072. ஏ. எஸ். கௌதம், ஏ 94, எம். ஐ. ஜி. பிளாக், கே. கே. நகர், மதுரை–20.
2073. எல். அரவிந்த சாயிநாத், 37, வடக்கு ரதவீதி, வாசுதேவ நல்லூர்–627 758.
2074. பி. ஸ்ரீவித்யா, 1/74, 19–வது தெரு, நங்கநல்லூர், சென்னை–61.
2075. பி. ரவிசங்கர், 1/74, 19–வது தெரு, நங்கநல்லூர், சென்னை–61.
2076. அ. மனோகரன், 155, அரசினர் காலனி, பைக்காரா, மதுரை–17.
2077. பா. ஜெகந்நாத், த/பெ. கே. பாலசுப்ரமணியன், ஆசிரியர், கவண்டனூர்–635 202
2078. ஜெ. சுரேஷ்குமார், மேலமலையனூர், செஞ்சி தாலுகா, தெ. ஆ. மா.
2079. டி. முத்துச்செல்வம், த/பெ. தேவராஜ், நடுவக்குறிச்சி, சாயர்புரம்–628 251.
2080. P. Usha, T.C. 20/1913, S S. St, Karamanai, Trivandrum-2.
2081. ஏ.என். விஜயலக்ஷ்மி, 92/பி, பி. டபிள்யூ. டி. காலனி, காமராஜ் நகர், மதுரை–2.
2082. ஆர். முரளிதரன், 26, கோடியாந்தோப்புத் தெரு, பள்ளத்தூர்–623 107.

2083. இரா. சுகுமார், டி–7, ஞானசம்பந்தர் சாலை, வட்டம்–19, நெய்வேலி–3.
2084. ச. சுபலெக்ஷ்மி, 21, வன்னியடித் தெரு, மலைக்கோட்டை, திருச்சி–2.
2085. டி. ரவிச்சந்திரன், வடக்கு வீதி, தெய்வீகன் தெரு, மணம்பூண்டி.
2086. எஸ். லக்ஷ்மி, 2, ஐ. வி. பி. எம். இராணிப்பேட்டை.
2087. ஜி. ஜாவித், 59/ஏ, ஏகாம்பரம் வீதி, திண்டிவனம், 604 001.
2088. க. துரைக்கண்ணன், 1/98, நிலிதொட்டி தெரு, அவலூர்பேட்டை–604 201.
2089. கி. சுரேஷ், 89, கிழக்குத் தெரு, திருக்கோவிலூர்–605 757.
2090. ச. நைட்டிங்கேல், மே/பா. வான்முகில், அரசு கலைக்கல்லூரி, உதகமண்டலம்–
–643 002.
2091. எஸ். இராமன், 26, கோடியாந்தோப்புத் தெரு, பள்ளத்தூர்–623 107.
2092. பி. சுரேஷ், 35–பி, மாதா கோவில் 3–வது வீதி, கே. புதூர், மதுரை–7.
2093. து. சந்திரா, 30, சங்கையா நாயுடு தெரு, மம்சாபுரம்–626 110.
2094. ஏ. சரவணன், 15/10, காமராஜபுரம், 4–வது லேன், ஆர். எஸ். புரம், கோவை. 2.
2095. பி. சக்திவேல், சிங்காரத் தோட்டம் போலீஸ் லேன் 54/எப், பழைய வண்ணாரப்
பேட்டை, சென்னை–21.
2096. எம். விநோதலக்ஷ்மி, 19, பாலாஜி நகர், தொரப்பாடி, வேலூர்–632 002.
2097. டி. அசோகன், 11, 29–வது குறுக்குத் தெரு, இந்திராநகர், சென்னை–20.
2098. எஸ். சம்பத்குமார், ஏ–18, அண்ணாநகர், செங்கல்பட்டு.
2099. எம். எஸ். லாவண்யா, 1, கிருஷ்ணாஜி சுக்கல் தெரு, சென்னை–53.
2100. ஜி. கவிதா, 13/2–ஏ, முத்துசுவாமி காலனி, செல்வபுரம், கோவை–26.
2101. அ. அன்பரசு, 10/85–ஏ, தடாகம் ரோடு, சிவாஜி காலனி, கோவை–25.
2102. எல். சுரேஷ்குமார், 69, கிழக்கு அருணாசலம் வீதி, ஆர். எஸ். புரம், கோவை.
2103. ப. உமாமகேஸ்வரி, 32, மெடிகல் காலேஜ் ரோடு, தஞ்சாவூர்–7.
2104. க. இமானுவேல் பிரபு, சம்பூரணம் இல்லம், ராணிப்பேட்டை இண்டஸ்டிரியல்
எஸ்டேட், சத்யா நகர், ராணிப் பேட்டை–632 403.
2105. என். அனந்தராமன், 1, ராமா நிலையம், ஐயப்பா நகர், அயப்பாக்கம், சென்னை–77.
2106. ச. பி. பிரகாஷ், மாவட்ட முன்சீப் குவார்ட்டர்ஸ், திருப்பத்தூர்–635 601.
2107. அ. சிவகுமார், த/பெ. மு. அன்பழகன், கீழப்பெரும்பள்ளம், தஞ்சாவூர்மாவட்டம்.
2108. அ. ஜெயமாலா, த/பெ. மு. அன்பழகன், கீழப்பெரும்பள்ளம், தஞ்சைமாவட்டம்.
2109. எம். மோகன், வடக்கு மடவிளாகம், குடவாசல்–612 601.
2110. எம். மகேஸ்வரி, வடக்கு மடவிளாகம், குடவாசல்–612 601.
2111. ஆர். கண்ணன், 31–ஏ, தியாகராஜபுர அக்ரஹாரம், விஜயபுரம், திருவாரூர்.
2112. ஆர். சிவகுமார், 31, ஏ. டி. அக்ரஹாரம், விஜயபுரம், திருவாரூர்.
2113. ஜெ. பாலகிருஷ்ணன், 31, சன்னதித் தெரு, திருவாரூர்–610 002.
2114. சோ. இராஜராஜன், த/பெ. சோமசுந்தரம், வடக்குத்தெரு, திருமக்கோட்டை
614 017.
2115. எஸ். நாராயணன், த/பெ.டி. பி. சங்கரன், கீழத்தெரு, உமையாள்புரம்–614 209.
2116. எஸ். சூரியநாராயணன், 1/886, ஹரிபண்டிதர் குளம் கீழ்க்கரை, வெங்கடேசப்
பெருமாள் கோயில் தெரு, தஞ்சாவூர்–9.
2117. டி. உமா, 5/101, கணபதி அக்ரகாரம், – 614 202.
2118. இரா. வீரராகவன், 19, வாய்க்கால் கரைத் தெரு, பேரளம்–609 405.
2119. பி. பத்மாவதி, 5, பராங்குச அக்ரகாரம், மன்னார்குடி–614 012.
2120. கே. வி. இராமச்சந்திரன், சரஸ்வதி விலாஸ், உத்தமதானபுரம்–614 213.
2121. ஜெ. மேரிப்ரபல்லா, 13, அகஸ்தியர் தெரு, திரு. வி. க. நகர், சிட்லபாக்கம்,
சென்னை–64.
2122. சொ. இராமசாமி, 157, அ. ராம. வெ. தெரு. நா. புதூர், காரைக்குடி.
2123. க. செந்தில்குமார், 5/13, முதல் மெயின்ரோடு, ஒட்டேரி விரிவு பகுதி, வண்டலூர்
சென்னை–48.
2124. கே. ஜெகதீசன், 4, நம்பியூர் தெரு, பீளமேடு, கோவை–4.
2125. ஜி. வைதேகி, 3, 4 டி. எச். ரோடு, 3–வது சந்து, பழைய வண்ணாரப்பேட்டை.
சென்னை–21.
2126. R. Chitra, D-3, N.A.L. Colony, Bangalore-560017
2127. R. Medha, D-3, NAL. Colony, Bangalore-560017.
2128. க. ரகோத்தமன், த/பெ. சுதர்சன், சிங்காரப்பேட்டை.
2129. எல். சேஷாத்திரிநாதன், 29, தாண்டவராய முதலி தெரு. சென்னை–21.
2130. எல். அன்னபூரணி, 29, தாண்டவராய முதலி தெரு, சென்னை–21.
2131. ஸ்ரீ. ஸ்ரீகுமார், ஏ. ஜி. 120, அண்ணாநகர், சென்னை–40.
2132. ஸ்ரீ. ஸ்ரீதேவி, ஏ. ஜி. 120, அண்ணாநகர், சென்னை–40.
2133. எஸ். கௌரிசங்கரி, 278–எப், முத்துராமலிங்கத்தேவர் வீதி, மதுரை–2.

(இன்னும் வரும்:)

அம்மாவுக்கு உதவி



— வசந்தா கோவிந்தன்

அன்று சனிக்கிழமை. மாலை நேரம்.

''ராஜு. மூலைக் கடைக்குப் போய் ஒரு கிலோ புழுங்கல் அரிசி வாங்கி வாயேன். இட்லிக்கு ஊறப்போட வேண்டும். இந்தா பணமும், பையும்'' என்றாள் ராஜுவின் தாயார் மீனாட்சி.

''போ அம்மா. என்னால் முடியாது. இன்று மாலை பட்டம் விடற போட்டியில் நான்தான் ஜெயிக்கணும்னு இருக்கேன். அதனால் பட்டக் கயிற்றுக்கு மஞ்சா ஏத்தணும். அப்பத்தான் 'கூல்' விடச் சௌகரியமாக இருக்கும்'' என்றபடி ராஜு கயிற்றுக்கு மஞ்சா ஏற்றுவதில் மும்முரமாக இருந்தான். அதன்பின் பையனைக் கெஞ்சிப் பயனில்லை என்பதை உணர்ந்த மீனாட்சி பையைத் தூக்கிக்கொண்டு தெருவில் இறங்கி நடந்தாள்.

மறுநாள், ராஜு நெருப்புப் பெட்டியில் 'வாக்கி டாக்கி' செய்துகொண்டு இருந்தான். அப்போது அவனிடம் மீனாட்சி அவசரம் அவசரமாக ஓடி வந்து, ''ராஜுக் கண்ணு, ரேஷனில் பாமாயில் கொடுக்கிறாங்களாம். வீட்டில் துளி எண்ணெய் இல்லை. கொஞ்சம் க்யூவில் போய் நில்லு. இதோ நொடியில் சமையலறை வேலைகளை முடித்துக்கொண்டு பிறகு நான் வந்து உன் இடத்தில் நின்று எண்ணெய் வாங்கிறேன்'' என்று கெஞ்சினாள்.

வந்ததே பார்க்க வேண்டும் ராஜுவுக்குக் கோபம்!

''என்ன அம்மா, உனக்கு வேறு வேலையே இல்லையா? எப்பப் பாரு, அங்கே போய் அதை வாங்கி வா. இங்கே போய் இதை வாங்கி வா, க்யூவில் நில்லு, பால் பூத்துக்குப் போ. மிஷினுக்குப் போய் மாவரை —இப்படிச் சொல்லிச் சொல்லியே வேலை வாங்கறது உனக்குப் பொழுதாகப் போச்சு. என்னாலே முடியாது. நான் காமிக்ஸ் 'புக்' வாங்க லைப்ரரி போகணும்'' என்றவன் நெருப்புப் பெட்டிகளைப் பத்திரப்படுத்திவிட்டுச் செருப்பை மாட்டிக்கொண்டு வெளியே போய் விட்டான்.

''ஹூம், பன்னிரண்டு வயசுப் பையனுக்கு வரும் கோபத்தைப் பாரு'' என்று அலுத்துக் கொண்டாள் மீனாட்சி.

நடந்து கொண்டிருந்த ராஜு ஓர் இடத்தில் சட்டென்று நின்றான். வீதியின் ஓரத்தில் இருக்கும் பங்களா ஒன்றில் போகன்வில்லா செடிகளை வெட்டி அந்த வீட்டுத் தோட்டக்காரன் காம்பவுண்டுக்கு வெளியே தூக்கி எறிந்து கொண்டிருந்தான்.

அங்கே வெட்டி எறிந்த செடிகளை எல்லாம் ஓர் ஏழைச் சிறுவன்-ராஜுவின் வயதுதான் இருக்கும்—ஓர் இடத்தில் சேகரித்துக் கொண்டிருந்தான். போகன்வில்லா முட்கள் அவ்வப்போது அந்தச் சிறுவனின் உள்ளங்கைகளைப் பதம் பார்ப்பதும், அந்தச் சிறுவன் தன் கைகளை ஊதிக்கொண்டு பிறகு மீண்டும் போகன்வில்லாவைச் சேகரிப்பதுமாக இருந்தான்.

இந்தக் காட்சியைக் கண்ட ராஜுவின் மனத்தில் கேள்வி ஒன்று எழுந்

தது. 'அந்தப் பையன் ஏன் இப்படிக் கஷ்டப்பட்டு அந்த முள்ளுச் செடிகளை அடுக்கிக் கொண்டிருக்கிறான்?'

இறுதியில் ராஜு, விடுவிடென்று அந்தச் சிறுவன் அருகில் போய், ''ஏன், வெட்டிப் போட்ட இந்தச் செடிகளை அடுக்கிக்கொண்டு இருக்கிறாய்?'' என்று கேட்டான்.

''வீட்டுக்கு எடுத்துக்கிட்டுப் போகப் போகிறேன்'' என்றான் சிறுவன் நிதானமாக.

''வீட்டுக்கு எடுத்துக்கிட்டுப்போய் என்ன செய்யப் போகிறாய்?''

''இதைக் காய வைச்சு அடுப்பு எரிப்பதற்கு உபயோகப்படுத்துவோம்...''

''இப்படிக் கையில் முள் குத்தி ஒரே ரத்தமாக இருக்கே. இப்படி நீ செய்யறது உங்கம்மாவுக்குத் தெரியுமா? ஏன் உன் அம்மா இந்த வேலைக்கெல்லாம் உன்னை அனுப்பறாங்க?''

''அவங்க அனுப்பறதில்லை. நானாகத்தான் வரேன்.''

''நீயாகத்தான் வருகிறாயா! அப்படி நீயாக வந்து ஏன் இந்த வேலையெல்லாம் செய்யறே? நீ ஸ்கூல் போகிறதில்லையா?''

''கார்ப்பரேஷன் ஸ்கூல் போகிறேன். அதோட எங்கம்மாவுக்கு உதவியாக இந்த வேலையெல்லாம் செய்கிறேன். எங்கம்மா சில வீடுகளில் வீட்டு வேலை செய்யப் போயிடறாங்க. சாயங்காலம்தான் திரும்பி வருவாங்க. அப்படி வந்த பிறகுதான் எனக்கும் தம்பிக்கும் கஞ்சியோ, சோறோ ஆக்கி ஊத்துவாங்க. அவங்க வருவதற்குள்ளாற இதுபோல் விறகு, சுள்ளி இதெல்லாம் பொறுக்கிக்கிட்டுப் போய் வைச்சா, எங்கம்மா அடுப்பு மூட்டிச் சீக்கிரம் கஞ்சி காய்ச்சி ஊத்தும்.''

''ஏன் உங்கம்மாவே இதெல்லாம் பொறுக்கிக்கிட்டுப் போய் அடுப்பு மூட்டிச் சோறு ஆக்க முடியாதா?''

''எப்படி முடியும்? வீட்டு வேலை செய்துவிட்டு வரும்போதே, பாவம், எங்கம்மா களைச்சுப் போய் வருவாங்க. அவங்களுக்கு உதவியாய் என்னால் முடிஞ்ச இந்தச் சின்ன வேலையை நான் செஞ்சா அவங்களுக்குச் சௌகரியமாகவும் இருக்கும்; சந்தோஷமாகவும் இருக்கும். ஸ்கூலில் படிக்கிற நேரம் போக மீதி நேரத்தில் சுள்ளி பொறுக்குவது, தம்பியைப் பார்த்துக்கிறது, கடையில் போய் அரிசி, சீமை எண்ணெய் வாங்கி வைக்கிறது, இப்படிச் சின்னச் சின்ன உதவிங்களை எங்கம்மாவுக்கு நான் செய்வேன். அவங்க சந்தோஷப்படுவாங்க'' என்ற அந்தப் பையன், பொறுக்கி எடுத்த செடிகளையெல்லாம் கயிறு ஒன்றால் ஒரே கட்டாகக் கட்டினான். தன் கையில் இருந்த துணியைச் சும்மாடாகச் சுருட்டித் தலையில் வைத்துக் கொண்டு, அந்தக் கட்டைத் தூக்கிச் சும்மாட்டுக்கு மேலே லாகவமாக ஏற்றிக் கொண்டான். பிறகு ராஜுவைப் பார்த்துச் சிநேகபாவமாக ஒரு சின்னப் புன்னகையைக் காட்டிவிட்டு, ''வரேன்'' என்று விடைபெற்றான்.

ராஜுவின் மனக்கண்முன் அவன் தாயார் வந்து நிற்கிறாள். ''என்னால் முடியலைடா ராஜு. கொஞ்சம் போய் விட்டு வாடா'' என்று கெஞ்சுகிறாள். ''முடியாது போ'' என்று தீர்க்கமாக, மூர்க்கமாகத் தான் சொல்வதும் அவனுக்குத் தெரிகிறது. தலையைக் குலுக்கிக் கொண்டான் ராஜு. 'பாவம், எத்தனை முறை கெஞ்சியிருக்கிறாள் அம்மா! ஒரு முறையாவது அவளுக்கு நாம் உதவியிருக்கிறோமா? நான் முடியாது என்ற பின் மறுபேச்சு எதுவும் சொல்லாமல், அந்த வேகாத வெய்யிலிலும் கொட்டும் மழையிலும் அம்மா கடைகளுக்குப் போவாள்! பாவம் அம்மா'— முதல் தடவையாக ராஜுவின் மனம் தன் தாயாருக்காக வருந்தியது. அதற்கு மேல் நில்லாமல், விடுவிடென்று வீட்டை நோக்கி, விரைவாக நடந்தான்.

அப்போதுதான் மீனாட்சி கையில் எண்ணெய்த் தூக்கை எடுத்துக் கொண்டு வீட்டைப் பூட்டிவிட்டுத் தெருவில் இறங்கிக் கொண்டிருந்தாள்.

ராஜு ஓடிப் போய், ''அம்மா'' என்று அழைத்து, ''கொடு அம்மா, நானே போய் வாங்கி வரேன்'' என்று அம்மாவின் கையில் இருந்த தூக்கு, பணம், ரேஷன் கார்டு இவைகளைப் பிடுங்காத குறையாக வாங்கிக் கொண்டு, அம்மாவைப் பார்த்து வெட்கத்துடன் ஒரு சிரிப்பை உதிர்த்துவிட்டு ரேஷன் கடையை நோக்கி நடந்தான்.

இதுவரை எப்போதும் எது சொன்னாலும் தட்டிக் கழித்தே செல்லும் மகன், திடீரென்று முதல் தடவையாகக் கடைக்குச் செல்வதை ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டே நின்றாள் மீனாட்சி. அவள் உள்ளம் அன்று முதல் தடவையாக மகிழ்ச்சியால் பூரித்துப் போயிற்று!

கேள்வி இங்கே: பதில் எங்கே?

122. ஸ்ரீலங்காவில் மிகவும் புகழ் பெற்ற முருகன் கோயில் ஒன்று இருக்கிறது. எங்கே?

123. உலகிலுள்ள சிலைகளில் மிகப் பெரியது எது? எங்கே உள்ளது?

124. 'சோடியம் குளோரைடு'—இந்த ரசாயனப் பெயர் எதைக் குறிக்கிறது?

125. இராணுவத்தில் மூன்று வகைப் படைகள் உண்டு. அவை யாவை?

126. பிறர் செய்வதில் எது உனக்குப் பிடிக்கவில்லையோ, அதை நீ, மற்றவர்களுக்குச் செய்யாதே!' —இப்புகழ்பெற்ற பொன்மொழியைக் கூறியவர் யார்?

127. விக்கிரமாதித்தன் அரசாண்ட போது தலைநகராயிருந்த உஜ்ஜயினி இப்போது எந்த மாநிலத்தில் இருக்கிறது?

128. நம் தேசத்தில் நான்கு வகையான கரடிகளைக் காணலாம். அவைகளை எப்படி அழைக்கிறார்கள்?

129. புராணப் படங்களையெல்லாம் மிக அழகாக வரைந்தவர், பாரதியாரால் பாடப் பெற்றவர் யார்?

130. இனும் என்கிறோமே, இது தமிழ்ச் சொல் இல்லை. அப்படியானால், எந்த மொழிச் சொல்?

131. மரங்கொத்திப் பறவையில் இரு வகை உண்டு. எப்படித் தெரிந்து கொள்வது?



132. சின்ன வயதிலே இப்படித்தான் இருந்தார்; பிற்காலத்தில் உலகப் புகழ் பெற்ற அவர் பெயர் தெரியுமா?

133. தமிழ் மெய்யெழுத்து வரிசையில் 'ள' என்பது எத்தனையாவது எழுத்து? 'சட்'டென்று கூற வேண்டும்.

134. தமிழ்நாட்டில் மாடுகளுக்குப் பெயர் பெற்ற ஊர் 'ம' என்ற எழுத்தில் ஆரம்பமாகும். அது எந்த ஊர்?

135. கோவலனுக்கும் மாதவிக்கும் மகளாகப் பிறந்தவள் பெயர் என்ன?

136. 'பரமார்த்த குரு' கதை எழுதிய வீரமாமுனிவர் இத்தாலியிலிருந்து தமிழ்நாட்டிற்கு வந்ததும், தமக்கு என்ன பெயர் வைத்துக் கொண்டார்?

137. மிளகு — இதன் தாயகம் எது?

138. தமிழில் முதல் முதலாகத் தோன்றிய சில நாவல்களில் ஒன்றான 'கமலாம்பாள் சரித்திரம்' எழுதியவர் யார்?

139. கங்கை நதியின் நீளம் எத்தனை கிலோ மீட்டர்?

140. திருச்சிராப்பள்ளிக்கு அருகிலே உள்ள எண்ணெய்க்கிராமம் என்ற ஊரில் பிறந்து மகா வித்துவான் ஆனார் ஒருவர். அவர் பெயர்?

141. ஒலிம்பிக்ஸ் தொடக்க காலத்தில் ஒரே ஒரு பந்தயம் மட்டுமே நடந்து வந்தது. அது எந்தப் பந்தயம்?

142. கேரள மக்கள் ஓணம் பண்டிகையை மிகச் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள். இப்பண்டிகை எப்போது கொண்டாடப் படுகிறது?

143. கர்நாடகப் பகுதியில் ஆண்களே பாடி, ஆடி, வசனம் பேசும் நாட்டிய நாடகம் ஒன்று உண்டு. அதன் பெயர்?

144. 'சேலம் வீரர்', 'தென்னிந்தியாவின் சிங்கம்' என்றெல்லாம் போற்றப்பட்ட தேச பக்தர் சி. விஜயராகவாச்சாரியார் பிறந்த ஊர்ப் பெயர் தெரியுமா?

145. இங்கிலாந்திலுள்ள ஸ்ட்ராட்போர்டு — அன் — ஏவன் என்ற சிறிய ஊர் உலகப் புகழ் பெற்றது எதனால்?

-விடை 44 ஆம் பக்கம்

கருணை விழிகள்



பிறகு ராமபத்ரன் மாடிப்படியில் ஏறுவதற்கு வந்தார். அதற்குள், மோகன் விரைந்து கீழே வந்தான்.

''என்ன சார்?''

''சீக்கிரம் புறப்படு. போகிறப்போ சொல்றேன்''இரவு உடையை மாற்றிக் கொண்டு வருவதற்குள் மோகனின் மனம் பதைத்தது; கலங்கியது.

போர்டிகோவை விட்டு கார் சீறிக் கொண்டு கிளம்பியது. டாக்டர் வீட்டில் நின்றது. தூங்கிக் கொண்டிருந்த டாக்டரை எழுப்பி என்னவோ ஆங்கிலத்தில் சொல்ல அவரும் விரைந்து தயாரானார்.

'மோகன், கிராண்ட் மதர், சீரியஸ், ப்ளட், போன் 'இந்த வார்த்தைகள் பாட்டிக்கு என்னவோ என்பதை மோகனுக்கு உணர்த்தின.

''பாட்டிக்கு என்ன சார்?''மோகன் பதைப்புடன் கேட்டான்.

''மோகன், நீ தைரியசாலி... நான் சொல்றதைப் பதறாமக் கேட்கணும். உங்க பாட்டிக்கு வயசாச்சு. ஏதாவதானாலும், நாங்க உன்னைக் கைவிட மாட்டோம். பாட்டி காலையிலே பால் வாங்கப் போயிருக்காங்க... அப்போ ஒரு முரட்டு மாடு ஓடிவந்து கொம்பாலே குத்தியிருக்கு...'' ராமபத்ரன் முடிக்கவில்லை.

''ஐயோ பாட்டிக்கா... சார், பாட்டி எப்படி இருக்காங்க? நிஜத்தைச் சொல்லுங்க... இதுக்காகத்தான் நான் ராத்திரி எங்கேயும் தூங்கறதில்லே... பாட்டிக்குக் காலையிலே காபி வேணும்னு யார் வாங்கிக் கொடுப்பாங்க! யாரையும் கேட்க மாட்டாங்களே...'' மோகன் அரற்றத் தொடங்கினான்.

சர்ர்ர்ர்ர்ர்.... வீடு இருக்கும் தெரு வந்துவிட்டது.

இறங்கிச் சந்துக்குள் விரைந்தனர். மோகன் முன்னதாக ஓடினான்.

பாட்டியைக் கூடத்தில் கிடத்தி இருந்தனர். என்ன கோரம்...?

''பாட்டி!'' — அலறினான் மோகன்.

பாட்டி மிக மெல்லிய குரலில், ''மோகன் கண்ணு, பாட்டியோட கடைசி மூழிக்கு வந்துட்டியா? எங்கே உன்னைப் பார்க்காமல் பிராணன் போயிடுமோன்னு நினைச்சேன்'' என்று அன்புடன் மோகனைத் தடவ, அதற்குள் டாக்டர் வந்து சிகிச்சையைத் தொடங்கினார். ராமபத்ரனின் விழிகளில் நீர் நிறைந்தது.

—ஆர். பொன்னம்மாள்—

''டாக்டர், நான் செத்துப்போனா என்னோட கண்களை எடுத்து, பாபுவுக்குப் பொருத்திடுங்கோ... இந்த வயசிலேயும் ஊசியிலே நூல் கோப்பேன் நான்'' பாட்டிக்கு மூச்சுத் திணறியது.

''பாட்டி ரொம்பப் பேசப்படாது'' டாக்டர் எச்சரித்தார்.

''பாட்டியை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போகணும். தையல்போடணும். ப்ளட், க்ளுகோஸ் வாட்டர் ஏத்தணும். ரொம்ப வீக்கா இருக்காங்க'' டாக்டர் ராமபத்ரனைப் பார்த்துச் சொல்ல, ராமபத்ரன், ''என்ன வேணுமானாலும் செய்யுங்க. செலவைப் பார்க்காதீங்க'' என்றார்.

பாட்டி டாக்டரைச் சைகையால் அருகே அழைத்து மெதுவாக, ''நான் நிச்சயம் பிழைக்க மாட்டேன்னு எனக்கே தெரியும். ஏன் வீண் பிரயாசை...? காய்ந்த சருகு... உதிர வேண்டியதுதான்! காரணம் எதாயிருந்தாலென்ன? நான் வேண்டிக்கிறதெல்லாம் மோகனைக் கண்கலங்காமல் பெரியவனாக்கி விடுங்கோ... நன்றாய்ப் படிக்க வையுங்கோ'' எனவும், ராமபத்ரன் பாட்டியின் அருகில் நெருங்கி, ''அம்மா, நீங்க என் தாயார் மாதிரி.. மோகனைப் பத்திக் கவலைப் படாதீங்கோ,...அவன் வேறே, பாபு வேறே இல்லே எனக்கு. ஸ்கூல் திறந்தவுடனே அவனைச் சேர்க்கப் போறேன்'' அவர் முடிப்பதற்குள் பாட்டியின் முகத்தில் ஒரு திருப்தி. பாட்டியின் தலை சாய்ந்தது!

மோகன், ''பாட்டி!'' என்றலறியபடி மயக்கமானான்.

கண் ஆபரேஷனுக்கான ஏற்பாடுகளை டாக்டர் துரிதப்படுத்தினார். போன்கள் பறந்தன.

* * *





''மோகன், உன் பாட்டி சாகல்லே... பாபுவின் விழிகளிலே உன்னைப் பார்த்துண்டிருப்பா. அவங்களோட கருணை விழிகள் சரியாப் பயன்படணும்னு உன்னோட ஒத்துழைப்பு வேணும். நீ வந்தாத்தான் ஆபரேஷனுக்குச் சம்மதிப்பேன்னு பாபு அடம் பிடிக்கிறான். இத்தனை நாள் சிரமத்துக்கும் முத்திரை மாதிரி இப்பத்தான் நீ பொறுமையா அவனை ஆஸ்பத்திரிக்கு அழைச்சிட்டு வரணும். உன்னாலதான் அது முடியும். அவன் ஆபரேஷன் தியேட்டருக்குள்ளே போன பிறகு, இங்கே வந்து பாட்டி காரியத்தைக் கவனிக்கலாம். சீக்கிரம் செயல் படறது முக்கியம். மத்தவங்க எல்லா ஏற்பாடும் பண்ணி வைச்சிருப்பாங்க... உம்'' டாகடர் மோகனைத் தேற்றித் துரிதப்படுத்தினார்.

* * *

''என்கிட்டே சொல்லாமே ஏன் போனாய் மோகன்?'' பாபு அலப்பிக் கொண்டிருந்தான்.

''எங்கம்மாவுக்கு உடம்பு சரியில்லேன்னு போன் வந்தது. அதனாலே.'' மோகனுக்குக் கோவையாய்ப் பேச வரவில்லை.

''இப்போ எப்படி இருக்கு...என்ன உடம்பு?''

''மயக்கம்தான். தூங்கிட்டாங்க... இதோ பார்... நீ ரொம்பப் பேசக் கூடாது. திடீர்னு கண் கிடைச்சிருக்குன்னு முரண்டறியாமே? ஆபரேஷனுக்கு நேரமாச்சு... வா!''

''ஏதாவது ஜோக் கதை சொல்லேன்!''

''ஜோக் கதையா...!'' மோகனுக்கு என்ன சொல்வதென்றே புரியவில்லை. ஏதோ சொன்னான்.

ஆபரேஷன் ரூமுக்குள் பாபு அழைத்துச் செல்லப்பட்டதும் ராமபத்ரன் மோகனைக் கூட்டிக்கொண்டு பாட்டியின் இறுதி யாத்திரைக்கு விரைந்தார்.

* * *

ஆவலெல்லாம் ஒரே இடத்தில் குவிந்திருந்தது. டாக்டர் கண்கட்டை அவிழ்த்துக் கொண்டிருந்தார். மோகனின் கையைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருந்தான் பாபு. அடேயப்பா! அந்த விஷயத்தில் இவர்களின் 'பாச்சா' பாபுவிடம் பலிக்கவில்லை.

''எனக்கு நண்பனாய், வழிகாட்டியாய், தொண்டனாய், என்னுடைய முன்னேற்றத்திற்குக் காரணமாய் இருந்த மதனின் முகத்தில்தான் நான் முதன் முதலாக விழிப்பேன்'' என்று முடிவாகச் சொல்லி விட்டான் பாபு. எத்தனை நாள்தான் தள்ளிப் போட முடியும்? மோகன் வந்து பேசியும்கூட பாபுவுக்கு நம்பிக்கையில்லை. நீ ஓடி விடுவாய் என்று அவன் கைகளைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டிருக்கிறான்.

பாபு கண் திறந்ததும், பார்வை வர வேண்டுமே என்ற கவலையும், பிரார்த்தனையும் ஒருபுறம்.

'மோகனா எனக்கு நண்பனாய் இருந்தவன்? இப்படிஎன்னை ஏமாற்றப்போச்சா? எனக்குக் கண்ணே வேண்டாம்' — இப்படி ஒருவேளை பாபு தன் கண்களைக் கசக்கி, குத்தி... நினைக்கவே பயமாக இருந்தது. பாட்டியை இழந்த மோகனின் பிஞ்சு மனத்தை பாபு எப்படியெல்லாம் நோகடிக்கப் போகிறானோ என்ற பயம் மறுபுறம்! பட்டபாடெல்லாம் வியர்த்தமாகி விடுமோ என்ற வேதனை இன்னொருபுறம்! மறுபடி பழைய பாபுவாக மாறிவிட்டால் என்ற துயரம் ஒருபுறம்... சூழ்நிலை மௌனமாக இறுகி வந்தது.

''பாபு, மெதுவாக, மிக மெதுவாகப் பார்... ஒவ்வொருவர் பெயராகக் கூறு'' என்றார் டாக்டர். கண்ணை ஜலில் நனைத்த பஞ்சால் துடைத்தாள் நர்ஸ்.

''இதுவரை மதனாக நாடகமாடியவன் யார் தெரியுமோ? போன வருஷம் என்னோடு படித்த மோகனே தான்!'' — என்று கூறியபடி மெதுவாக எழுந்து மோகனின் கன்னத்தில் முத்தமிட்டான் பாபு!

எல்லோரும் திக்பிரமித்திருந்தனர். மோகனுக்குப் பேச்சே வரவில்லை.

''நீங்க டாக்டர்... அம்மா, அப்பா நர்ஸ், என்ன மோகன்... நான் உன் பாட்டிடா... 'ஆமாம், கொடூரப் பார்வை பார்த்த வாசு இல்லே... கருணையும், பாசமும், அன்பும் பொங்கி வழியும் உன் பாட்டியின் விழிகள் இவை! நீ எனக்குத் தந்த பரிசு... பொக்கிஷம்... புதையல். என் பார்வையிலேதான் நீ இனிமே இருக்கணும். முன்பே எனக்கு நீ யார்ன்னு தெரியும். எப்படித் தெரியும்னு யோசிக்கறியா? உன் பேச்செல்லாம் சமுத்திரம், மணல், ஏழ்மை, தமிழ் — இதைச் சுற்றியே போகும். எந்தெந்த வாத்தியார் எப்படி நோட்ஸ் கொடுப்

பாங்க, ஸ்கூல் பழக்கவழக்கங்கள் எல்லாம் உனக்கு அத்துப்படியா இருந்தது. ட்யூஷன் வாத்தியார் வர்ற நேரம் நீ ஓடி ஒளிஞ்சே... இதெல்லாம் என்னைத் துப்பறிய வைச்சது. இங்கே ஆஸ்பத்திரியிலேதான் பாட்டி, கண்... ஏழை எல்லாம் அடிபடுதே...! பாட்டியைப் பத்தி உன் பேச்சிலே அடிக்கடி வந்தது.


''துப்பு சொன்னது யாருன்னு மூளையைக் கசக்கிக்காதே! அஞ்சலைதான், பாவம். இல்லாமை... என்னுடைய மிரட்டல்... ஒத்துழைச்சாள்... நான் ஏன் உன்னை இப்போ வெறுக்கலே, பொய்சொன்னியேன்னு கத்தல்லேன்னு ஆச்சரியமாயிருக்கு. இல்லையா..?''

''அவள் தகவல் சொல்றதுக்கு முதல் நாள் நான் பித்த வாந்தி எடுத்து... நீ கொஞ்சம் கூட அருவருக்காம... ஞாபகமிருக்கா?''

''என்கிட்டே அடிவாங்கினவங்க என்னைத் திருப்பி அடிச்சிருக்காங்க... ஒதுங்கிப் போயிருக்காங்க... இல்லே, மேலிடத்திலே கோள் சொல்லி இருக்காங்க... நீ புது ரகமா இருந்தே! தேள் கடியை சக்கடின்னு ஒதுக்கினே.. உன்னை என் மனசு நிஜமாகவே நேசிக்க ஆரம்பிச்ச கட்டத்திலேதான் உண்மை தெரிஞ்சது... உனக்கு மட்டும்தான் நடிக்கத் தெரியுமா?

''தவிர, என் சுபாவம் உனக்கு நல்லாத் தெரியும். ராமு, கபாலி எல்லாம் உதிரிப் பூக்கள்... நான் ஹாரம். என் பார்வையிலேயிருந்து நீ இனிமே தப்பவே முடியாது... வா...'' பாபு கையை நீட்ட, மோகன் அவனை அணைத்துக்கொண்டு அவன் கன்னத்தில் முத்தமாரி பொழிந்தான். அனைவர் கண்களும் பனித்தன.

(முற்றும்.)





பொங்கி எழும் சிங்கங்கள் ③

—தங்கா ராமமூர்த்தி—

"அவரைப் போல ஒரு தியாகக் குழந்தையை எனக்கு, பாரதத் தாயே, நீ அருள வேண்டும்" என்று வேண்டிக் கொண்டாள் ஒரு தாய். அவள்தான் பாஞ்சாலத்தின் தியாகச் செம்மல் கிருஷ்ணசிம்மனின் மனைவி. ஆங்கிலக் கொடியை இறக்கி, பாரதக் கொடியை 1906-ல் பாஞ்சாலத்தில் ஏற்றி வைத்த வீரர் கிருஷ்ண சிம்மன். தேசபக்தியே உயிர் மூச்சாகக் கொண்டிருந்த அவரை ஆங்கில ஏகாதிபத்தியம் சிறையிலடைத்து வைத்திருந்தது.

கிருஷ்ணசிம்மனைச் சிறைவிட்ட போது, அவர் மனைவி பூரண கர்ப்பமாயிருந்தாள். அவள்தான் அவ்வாறு பாரத அன்னையிடம் வேண்டிக்கொண்டாள். அவள் வேண்டுதல் பலித்ததா? பலித்தது. கூர்மையான பார்வையோடு, சந்தனப் பதுமை போன்ற ஓர் ஆண் மகவு பிறந்தது.

சிறைக்குச் செய்தி அனுப்பினார்கள். கிருஷ்ணசிம்மன் மகிழ்ந்தார். "என் மகன் தனது மெல்லிய கரங்களால், பாரதத் தாயின் வன்மையான விலங்கை வெட்டி எறிவான்" என்று மகிழ்ச்சிக் குரல் கொடுத்தார்..

அந்தக் குழந்தைதான் பகத்சிங்!

பள்ளிப் படிப்பிலே முதலாவதாகத் திகழ்ந்தான். அடித்தவரைத் திருப்பி அடிக்கக்கூடத் தெரியாத 'சாது' என்று பள்ளிப் பருவத்திலே பெயரெடுத்தான்.

1902—ஆம் ஆண்டு காந்தியடிகள் அறப் போராட்டத்தை மேற்கொள்ளத் தீர்மானித்தார். வேண்டுகோள்கள், அறிக்கைகள் பறந்தன.

ஒத்துழையாமை இயக்கம். மாணவர்கள் கல்விச் சாலைகளை விட்டு வெளியேறினர். வழக்கறிஞர்கள் நீதி மன்றங்கள் செல்லவில்லை.

ஆங்கில ஆட்சியாளரின் கீழ்ப் பணி புரிந்தோர், தம் வேலைகளை விட்டனர். கிராமத் தொழிலாளிகள்கூட வெள்ளையரிடம் பணி செய்ய மறுத்தனர்.

பதின்மூன்று வயதுப் பாலகனின் உள்ளத்தில் தேச பக்தி — தந்தை—தாய் வழியாக வந்த பக்தி —பிள்ளைப் பருவத்திலே மலர்ந்தது. தேசத்திற்கு உழைக்க வேண்டும். அதுவே லட்சியம் என்ற உறுதி உரமாக விழுந்தது.

பகத்சிங் வாலிபப் பருவமடைந்தார். பெற்றோர் திருமணம் செய்விக்க விரும்பினர்.

"அம்மா, பாரத நாடு என்போன்ற பல்லாயிரம் வீரர்களின் தியாகத்தைப் பெற்றே சுதந்திரம் அடைய முடியும். தேசத்துக்குத்தான் உழைக்க என் உள்ளம் விரும்புகிறது. எனக்குத் திருமணம் வேண்டாம்" என்று தீர்மானமாகக் கூறிவிட்டார் பகத்சிங்.

"ஆங்கிலக் கொடியே, நீ ஒருநாள் கீழே இறங்கத்தான் போகிறாய். என் தாய் நாட்டுக் கொடி பட்டொளி வீசிப் பறக்கத்தான் போகிறது" என்று உரக்கக் கூறுவார் பகத்சிங்.

ஒருமுறை டில்லியிலே பயங்கரமான வெள்ளம். செங்கோட்டை நீரில் மிதந்தது என்றால் குடிசைகளைப் பற்றிக் கேட்கவா வேண்டும்? பகத்சிங்கும் அவரது தோழர்களும் உயிருக்கு அஞ்சாமல் பல உயிர்களைக் கரையேற்றினர்; உணவளித்தனர்.

தேச பக்தியோடு, மனிதாபிமானமும் கொண்டவர் பகத்சிங். ஆங்கிலேயரின் மிருகத்தனமான செய்கைகளைக் காணக் காண அவரது இளம் உள்ளம் கொதித்தது. புரட்சிப் பாதையிலே கால் வைக்கத் தொடங்கினார்.

சிறைச்சாலை வாசமும் தடியடியுமாக மக்கள் துன்பப் பட்டுக்கொண்டிருந்தனர். 'சைமன் கமிஷன்' என்ற

ஒன்றை அரசியல் சீர்திருத்தத்திற்காக இந்தியாவிற்கு அனுப்பியது இங்கிலாந்து அரசாங்கம். பஞ்சாபில் லாலா லஜபதிராய் தலைமையில் பலர் கூடி 'சைமன் கமிஷனே, திரும்பிப் போ' என்று கறுப்புக் கொடி காட்டினார்கள்.


1928–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 30–ஆம் நாள் அந்தக் கமிஷன் லாகூருக்கு வந்தது. லாகூர் முழுவதும் பெரிய ஆரவாரம்! எங்கும் கறுப்புக் கொடிகள்! தேச பக்தர்களின் ஊர்வலம்! அஞ்சா நெஞ்சத்துடன் லாலா லஜபதிராய் தலைமை தாங்கிச் சென்றார். ஊர்வலத்தைத் தாக்க வெள்ளை அதிகாரிகள், குறுந்தடிகளோடு காத்திருந்தனர்.

லஜபதிராயின் நெஞ்சிலே பலமாக அடித்தனர். அவர் உடனே சுருண்டு வீழ்ந்தார். பலர் அடிபட்டு மிதிபட்டனர். பாஞ்சாலமே கொதித்தது கோபத்தால். பகத்சிங்கின் இளரத்தம் சூடேறியது. அவர் தம்முடைய தோழர்களான ராஜகுரு, சுகதேவர், தத்தர் முதலிய வீரர்களோடு புரட்சியிலே இறங்கினார். திட்டங்கள் தீட்டப்பட்டன. ரகசியமாகக் கூடிப் பேசிக் கொண்டார்கள். முடிவில்...

பகத்சிங்கும் தத்தரும் 1929–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 8–ஆந் தேதி டில்லி சட்டசபைக்குள் நுழைந்தனர். உதட்டிலே பெரும் சிரிப்பு. திவான் பகதூர்களும், மற்ற உறுப்பினர்களும் குழுமிய சட்டசபையில் வெடிகுண்டெறிந்தனர். ஒருவரும் இறக்கவில்லை. உறுப்பினர்கள் மூலைக்கொருவராகச் சிதறினர். சிலர் காயமுற்றனர். பகத்சிங், சிங்கம் போல் சபை நடுவே நின்றார்: ''கோழைகளே, ஏன் ஓடுகிறீர்கள்? இந்தச் சட்டசபையால் சுயராஜ்யம் வராது என்றுதான் வெடிகுண்டெறிந்தேன். சுதந்திரம் தராமல் காலம் கடத்தினால், இதுதான் நடக்கும் இனிமேல், சுரண்டல் ஒழிக! என்னைத் தூக்கிலிட்டாலும் சரியே! புரட்சி ஓங்குக!'' என முழங்கினார்.

காவலர் அவரைக் கைது செய்தனர். வழக்கு நடந்தது. குற்றவாளிகள் சித்திரவதை செய்யப்பட்டனர். விசாரணை நீண்டது. ஒரு வருடத்திற்குப் பிறகு, தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

1930-ஆம் ஆண்டு அக்டோபர் 27-ஆம் தேதி பகத்சிங், சுகதேவ், ராஜகுரு ஆகிய மூவரும் – மூன்று இளம் சிங்கங்களும் நாட்டிற்காகத் தம் உயிரைத் தியாகம் செய்தனர்.



எதை இழுக்கிறார்கள்?

"என்ன இது. தீபாவளியும் அதுவுமா இப்படி, எதை இழுக்கிறீங்க?"

"அக்கா செஞ்ச ஜாங்கிரியைப் பாதியா பிரிச்சுக்கிறோம்."

-ஜெம்பு

குதிரை தடையோட்டப் பந்தயங்கள்

'குண்டுமணி'

குதிரைகள் தடைகளைக் கடந்து குதித்தோடும்: குதிரை வீரர் சாமர்த்தியமாகத் தடைகளைக் கடக்கக் குதிரைகளையோட்டும் லாகவம் 'Show Jumping' எனப்படும். இந்தத் தடையோட்டத்தில் பல தவறுகளை இழைக்காமல் அதிவேகமாகக் கடப்பவரே வெற்றி இலக்கை அடைவார்!

Show Jumping போட்டியில் ஒரு குழுவில் காப்டனும் ஆறு குதிரை வீரர்களும், பன்னிரண்டு குதிரைகளும் இருப்பார்கள். ஒலிம்பிக் போட்டியில் கலந்து கொள்ளும் நான்கு குதிரை வீரர்களும் நான்கு குதிரைகளும் பங்கேற்பதில் மூன்று அதிக எண்ணிக்கைகளே கணக்கெடுக்கப்படும். குதிரை தடைப் போட்டிகளில் தனி நபர் போட்டிகளும் உண்டு. இந்தத் தடையோட்டப் போட்டிகளை நிர்வகிக்க நீதிபதிகள், நேரக் கணிப்பாளர், கிளார்க்குகள், ஸ்டுவர்டுகள் இருப்பார்கள். எந்தக் குதிரையோட்டவீரர் குறைந்த அளவு குறைகளில் படுவேகமாகச் சென்று அதிக எண்ணிக்கைகளைக் குவிக்கிறாரோ அவரே வெற்றியாளராகக் கருதப்படுவார்.

போட்டி தொடங்கி விட்டால் போட்டியாளர்கள் மைதானத்துக்குள் நடந்து செல்வது கூடாது என்ற தடை உண்டு. அதோடு பந்தயம் நடக்கும் காலத்தில் பயிற்சிகளில் ஈடுபடக் கூடாது. தடையோட்டப் பந்தய மைதானத்தில் ஒவ்வொரு தடையும் நன்கு தெரியும்படியாகக் குறிக்கப்பட்டிருக்கும். மேலும் தடைகளுள்ள இடத்தில் வலப்பக்கம் சிவப்புக்கொடிகளும், இடப்பக்கம் வெள்ளைக் கொடிகளும் நடப்பட்டிருக்கும். அதோடு குதிரையோட்ட மைதான வரைபடம் போட்டியாளர்களுக்காகப் பந்தய மைதான முன் பகுதியில் வைக்கப்பட்டிருக்கும். ஆரம்பம், முடிவு பற்றிய விவரங்களை இதிலிருந்து போட்டியாளர்கள் தெரிந்து கொள்வார்கள்.

குதிரையோட்டப் பந்தயக்காரர்கள் குறைந்தது பதினெட்டு வயதுக்குள் இருக்க வேண்டும். அதோடு போட்டி





யாளர் அமெச்சூர் லைசென்ஸ் பெற்றிருக்க வேண்டும்.

தடையோட்டங்களின் போது தடைகள் விழுந்து விட்டால் பெனல்டி உண்டு.

குதிரைப் போட்டிகளில் 'Dressage' என்று ஒருவகை. இதனை ஐந்து ஜூரிகள் நிர்வகித்து வருவார்கள். Dressage என்ற பிரெஞ்சு வார்த்தைக்கு அர்த்தம்: 'ஒரு மிருகத்துக்குக் கற்றுக் கொடுப்பது' என்பதாகும். இத்தகைய போட்டிக் குதிரைகள் ஸ்பானிஷ் ரைடிங் ஸ்கூல், பிரெஞ்சு காவல்ரி ஸ்கூல், ஜெர்மன் காவல்ரி ஸ்கூல் ஆகியவற்றில் பயிற்சியளிக்கப் பட்டுள்ளன.

ஒலிம்பிக் போட்டிகளில் குதிரைத் தடைப் பந்தயம் சேர்த்துக் கொள்ளப் பட[illegible]ற்கு ஸ்வீடன் மன்னரிடம் [illegible]த் தலைவராகப் பணியாற்றிய க்ளாரன்ஸ் கோமகன் வான்ரோஸன் தான் காரணமாகும். 1908–ம் வருஷம் லண்டன் ஒலிம்பிக்கில் குதிரைத் தடைப் பந்தயங்கள் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டுமென்று கோரினார். ஆனால் அந்த ஒலிம்பிக்கில் அவர் எண்ணம் ஈடேறவில்லை. பிறகு 1912ம் ஆண்டு ஸ்டாக்ஹோம் ஒலிம்பிக் விளையாட்டுப்போட்டிகளின்போது இணைக்கப் பட்டது. மூன்று ஒலிம்பிக் போட்டிகளில் ஸ்வீடன் நாடு தனி நபர் Dressage பந்தயங்களில் வென்றது. இந்தத் தருணத்தில் கோஷ்டிப் போட்டிகள் சேர்க்கப்படவில்லை.

1912–ஆம் ஆண்டு கார்ல் பாண்டியும் 1920–ல் லூண்ட்டால்டும், 1924–ல் லிஸ்டரும் ஒலிம்பிக் வெற்றியாளர்களாகப் பரிணமித்தார்கள்.

1928–ம் ஆண்டில் நடைபெற்ற ஒலிம்பிக் போட்டியில் கார்ல் வான்ஸ் லாங்கன் தனிநபர் Dressage போட்டியில் வென்றார். கோஷ்டிப் பரிசும் இவர் குழுவுக்குத்தான். 1960–ம் வருஷத்தில்தான் ரஷ்யக் குதிரை வீரர் செர்கிபிலடோவ் தங்கப்பதக்கம் சூடினார்.

Dressage போட்டி குதிரையின் வளர்ச்சியையும், பயிற்சியையும் நிர்ணயிக்கும் பந்தயமாகும். இந்தப் போட்டியின் குறிக்கோள் குதிரையின் வலிவு, திறமையைச் சோதிப்பதாகும். குதிரையின் நிதானம், கூர்மை, தன்னைச் சவாரி செய்பவரோடு தரும் ஒத்துழைப்பு இந்தப் போட்டியில் துலங்கியது.

இந்தக் குதிரையோட்டப் பந்தயங்களில் ஆடவரும், பெண்டிரும் கலந்து கொண்டனர்.



பதில் இங்கே?

122. கதிர்காமம் என்ற ஊரில்
123. சுதந்திர தேவியின் சிலே. அமெரிக்காவில் நியூயார்க் துறைமுகத்தின் முன்னல் உள்ள ஒரு சிறு தீவில் உள்ளது.
124. உப்பைக் குறிக்கிறது.
125. தரைப்படை, கடற்படை, விமானப்படை.
126. கன்பூஷியஸ் என்னும் சீனத் தத்துவஞானி.
127. மத்தியப் பிரதேசத்தில்.
128. பழுப்புக் கரடி, தேன் கரடி கருங்கரடி, பன்றிக்கரடி.
129. ஓவியர் ரவிவர்மா.
130. அரபுச் சொல். ஆதரவு, பரிசு என்று பொருள்.
131. முதுகில் பொன்னிறம் இருப்பது ஒரு வகை. முதுகில் கறுப்பும் வெள்ளையுமாகச் சொக்கட்டான் பலகை போல் இருப்பது மற்றொரு வகை.
132. லெனின்.
133. 16—வது எழுத்து.
134. மணப்பாறை
135. மணிமேகலை
136. தைரியநாத சுவாமி — இதை மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் 'வீரமாமுனிவர்' என்று தமிழில் அழைத்தனர்.
137. கேரளம்.
138. பி. ஆர். ராஜம் ஐயர்.
139. 2 465 கிலோ மீட்டர்.
140. மகாவித்துவான் மீனுட்சிசுந்தரம் பிள்ளை — தமிழ்த் தாத்தா உ.வே சாமிநாதையரின் குரு.
141. ஓட்டப் பந்தயம்.
142. ஆவணி மாதம் திருவோண நட்சத்திரத்தில்.
143. யட்ச கானம்.
144. செங்கற்பட்டு மாவட்டத்திலுள்ள மதுராந்தகம்.
145. அந்த ஊரில் வில்லியம் ஷேக்ஸ்பியர் பிறந்ததனல்.

பிரிட்டனில் ஷோ ஜம்பிங் கழகம் தேசியப் போட்டிகளை 1947—ம் வருஷம் நடத்தியது. ஆலன் ஆலிவர் ஐந்து தடவை வென்று புகழ்பெற்றவர்.

குதிரைப் பயிற்சிகளில் மூன்றுநாள். நிகழ்ச்சிகள் ராணுவக் குதிரைப் படைகளின் வலுவைச் சோதிக்க நடத்தப்பட்ட போட்டிகளாகும். நீண்ட தூர ஓட்டங்கள் குதிரைப் படையினருக்கு நல்ல பயிற்சி அல்லவா? இந்தப் பந்தயங்கள் பாதைகளில், ஓட்டப் பந்தய மைதானங்களில் நடைபெற்றன. குதிரைகள் குதிக்கும் போட்டிகள் பதினெட்டாம் நூற்றுண்டில் பிற்பகுதியில் தான் வந்தது! மேலும் குதிக்கும் போட்டிகள், குதிரைகள் வேட்டைகளில் ஈடுபட்டதனல் வந்ததோ என்னவோ?

குதிரை வலிவுப் போட்டிகள், 1687—ஆம் ஆண்டிலேயே வியன்னுவிலிருந்து வியன்னர் நிருஷத் வரை நடந்ததைச் சரித்திரம் சொல்கிறது. 1892—ஆம் ஆண்டில் வியன்னுவிலிருந்து பெர்லின் வரை குதிரையோட்டப் பந்தயங்கள் நடந்துள்ளன.

பத்தொன்பதாம் நூற்றுண்டில் பிரெஞ்சு குதிரைப் படையினர் கிராஸ் கண்ட்ரீ பந்தயம் நடத்தியிருக்கிறூர்கள். 1902—ம் ஆண்டு பிரான்சில் குதிரைப் பந்தயப் போட்டிகளில் Dressage, ஸ்டீப்பிங் சேஸ், நீண்ட தூர ஓட்டம், ஷோ ஜம்பிங் ஆகியவை இடம் பெற்றன. வென்றவருக்குச் சாம்பியன் பட்டம் வழங்கப்பட்டது. இந்த யோசனை பல தேசங்களுக்குப் பரவி இந்தக் குதிரையோட்டப் பந்தயங்கள் பிரசித்தமாயின.

ஒலிம்பிக்கில் இந்தக் குதிரையோட்டப் பந்தயம் சேர்க்கப்பட்டபோது, 'ராணுவப் பந்தயம்' 'குதிரை மீதுபெண்டாத்லான்' என்று வர்ணிக்கப்பட்டன. ஒலிம்பிக் பந்தயத்தில், 55 கிலோ மீட்டர் தூரம் குதிரை வீரர்கள் ஓடிக் கடப்பது ஒரு போட்டியாகும்.

குதிரைப் பந்தயம் சூதாட்டமாகும் ஆனல் குதிரைத் தடையோட்டப் பந்தயங்கள் விளையாட்டுக் கலையில் ஓர் அங்கம் வகிக்கிறது. ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் போது இவ்வகைக் குதிரைத் தடையோட்டப் பந்தயங்கள் ரசிகர்களை வெகுவாகக் கவர்ந்தன. ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் நம் இந்திய நாட்டைச் சேர்ந்தவர் தங்கப் பதக்கம் சூடியது தனிச்சிறப்பு. இந்த ஆசிய குதிரையோட்டப் பந்தயங்களில் ராணியும் வந்து பங்கேற்றது வியப்புக்குரியது.

பிருந்தாவனக் கதையரங்கம்



கண்டெடுத்த நோட்டு

கந்தன் தன் நண்பர்களுடன் அரட்டை அடித்துவிட்டுத் தன் வீடு திரும்பிக் கொண்டிருந்தான். வழியில், பத்து ரூபாய்த் தாளொன்று கசங்கிய நிலையில் கீழே கிடப்பதைக் கண்டான். அதை அவன் எடுத்துப் பார்த்துத் தன் பாக்கெட்டுக்குள் போடுமுன் அந்த நோட்டைத் திருப்பித் திருப்பிப் பார்த்தான்.

'இந்தப் பத்து ரூபாய் கிடைத்த விஷயத்தை யார்கிட்டேயும் சொல்லாமல் ஜாலியாக இரண்டு நாளைக்குச் செலவு செய்யலாம்'' என்று கந்தன் தனக்குத் தானே கூறிக்கொண்டு, கையை வீசியபடி நடந்தான்.

வழியில் பெரியவர் ஒருவர் சாலையில் எதையோ போட்டுவிட்டுத் தேடிக் கொண்டு வந்தார். அவர் வேறு யாருமல்ல! அவனுடைய பக்கத்து வீட்டுத் தாத்தா பொன்னுசாமிதான்.

''ஏண்டா கந்தா, ரோட்டுலே ஏதாவது காசு கிடந்து பார்த்தியாடா? பத்து ரூபாய் நோட்டு ஒன்று எங்கேயோ கீழ விழுந்துடுத்து. அதைத் தேடிக்கிட்டே வர்றேன்! நீ பார்த்தியாடா?'' என்று கவலையுடன் கேட்டார்.

'பாவம் தாத்தா' என்று எண்ணி, தன் பாக்கெட்டிலிருந்த பத்து ரூபாயை எடுத்துக் கொடுத்தான் என்று நினைக்கிறீர்களா? அதுதான் இல்லை. ''தாத்தா, நானும் இப்பத்தான் வர்றேன். நான் பார்க்கல்லே'' என்று கூறி, தாத்தாவுடன் சேர்ந்து பணத்தைத் தேடுவது போல் நடித்தான். பணம் எங்கிருந்து கிடைக்கும்? பணம்தான் அவன் பாக்கெட்டில் பத்திரமாக இருக்கிறதே!

''அவளுக்கு என்ன பதில் சொல்லப் போகிறேனோ தெரியலியே!'' என்று முணுமுணுத்துக்கொண்டே பொன்னுசாமித் தாத்தா தம் வீடுநோக்கிச் செல்லாமல் வேறு எங்கேயோ சென்றார்.

கந்தன் மனம் குறுகுறு என்றாலும், தன் இஷ்டம் போல் உணவு விடுதி, திரைப்படங்கள் என்று ஜாலியாகப் பொழுதைப் போக்கிவிட்டு மாலையில் தன் வீடு திரும்பினான்.

வீட்டின் ஒரு மூலையில் அவன் அம்மா காய்ச்சலில் முடங்கிக் கொண்டிருந்தார்கள். கந்தன் தன் தாயிடம் சென்று, ''அம்மா, உடம்புக்கு என்னம்மா ஆச்சு? சொல்லம்மா. காலையில் கூட நல்லாத்தானே இருந்தாய்! இப்ப என்னம்மா வந்தது உடம்புக்கு?'' என்று துடித்துக் கொண்டே கேட்டான்.

''ஒன்றுமில்லையப்பா. காலையில் நீ போன பிறகு செப்புக் குடத்தை எடுத்துக்கிட்டுத் தண்ணி கொண்டார போது, அந்தக் கட்டை தடுக்கி விழுந்து விட்டேன் அப்பா. காலிலே ஒரே வலி'' என்று தன் துயரத்தைத் தனயனிடம் கூறினாள்.

''ஏம்மா, உன்கிட்டே மருந்து வாங்கக் கூடவா காசு இல்லை? அப்புறம் மருந்து வாங்கறதுதானே?'' என்று கேட்டான்.

''கேளப்பா. என்கிட்டே பத்து ரூபாய் இருந்தது. அதைப் பக்கத்து

வீட்டுப் பொன்னுசாமித் தாத்தா கிட்டே கொடுத்து மருந்தும் அரிசியும் பருப்பும் வாங்கி வரச் சொன்னேன். இன்னும் தாத்தாவையும் காணோம். மருந்தையும் காணோம்'' என்று கூறினாள்.

'பொன்னுசாமி எப்படி வருவார்? அவர்தான் பணத்தைத் தொலைத்து விட்டு வேறு எங்கோ போகிறாரே? இப்போது எப்படி வரப் போகிறார்?' என்று எண்ணியபடி உட்கார்ந்திருந்தான் கந்தன்.

''ஐயோ! நான் அப்பவே தாத்தாவிடம் அந்த நோட்டைக் கொடுக்காமல் போய் விட்டேனே! கொடுத்திருந்தால் இந்நேரம் அம்மாவிடம் மருந்து வந்திருக்குமே! அரிசியும் வந்திருக்குமே! வேறு யாரோ ஒருவரின் காசு கீழே கிடந்ததாக நினைத்து, அதை எடுத்து நான் சினிமா, ஓட்டல் என்று வீண் செலவு செய்து விட்டேனே! கடைசியில் அது என் அம்மா கொடுத்த காசுதான் என்று தெரியும் பொழுது எவ்வளவு வேதனையாக இருக்கிறது? இனி நான் மறந்துங்கூட யார் பொருளுக்கும் ஆசைப்படமாட்டேன். பொய் சொல்ல மாட்டேன். ஏமாற்ற மாட்டேன்'' என்று கந்தன் தன் மனத்துக்குள்ளேயே அழுது புலம்பினான்.

அந்த நேரம் பார்த்து, பொன்னுசாமித் தாத்தா உள்ளே நுழைந்தார். அவர் எங்கேயோ கடன் வாங்கி அரிசியும் மருந்தும் வாங்கி வந்தார்.

கந்தனின் அம்மாவிடம் பணம் காணாமல் போனதையும், கடன் வாங்கி வந்ததையும் கூறினார்.

கந்தன் தான் பணம் எடுத்ததைப் பொன்னுசாமித் தாத்தாவிடம் தனியாகச் சொல்லி அழுதான்; மன்னிக்கும்படி வேண்டினான்.

—கா. சிவசுப்பிரமணியன் (1284), ஏம்பலம்.

நிலவின் பொறாமை

ஒருமுறை நிலவு தன் நிலையை எண்ணி நொந்து கொண்டது.

'இது என்ன வாழ்க்கை! நம்மால் இந்த வானத்தை விட்டு எங்கும் செல்ல முடியவில்லையே!' என்று வேதனைப்பட்டது. அதற்குக் காரணம் இதுதான்.

ஒருநாள் வானத்தில் தவழ்ந்து கொண்டிருந்த போது, ஓர் அரசன் வேட்டையாடி விட்டு ஆனந்தமாயிருப்பதைக் கண்டது. பொறாமை கொண்டது.



'இவன் எவ்வளவு இன்பமாக இருக்கிறான்! இவனுக்குக் கைகளும், கால்களும் இருப்பதால்தானே இவ்வாறு செய்கிறான்! நமக்கும் இருந்தால் நாம் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கலாம்!' என எண்ணி அது மிகவும் வருத்தம் அடைந்தது.

மற்றொரு நாள், ஒரு கொழுத்த ஆடு இன்பமாக மேய்ந்து புல்லைச் சாப்பிட்டுக்கொண்டு இருந்ததைப் பார்த்தது. 'இந்த ஆடுகூட எவ்வளவு சுதந்திரமாகத் திரிகிறது! நாம் இந்த வானத்தையேதான் சுற்றிக் கொண்டிருக்க வேண்டியுள்ளது' என்று அலுத்துக் கொண்டது.

வேறொரு நாள், ஒரு சிறிய கோபுரத்தை மக்கள் பலர் விழாவுக்காக அழகுபடுத்திக் கொண்டிருந்ததைப் பார்த்தது.

''சே, என்னை இது போல யாரும் அழகுபடுத்துவது இல்லையே! இந்த நட்சத்திரங்கள் எல்லாம் இருக்கின்றன என்றுதான் பெயர். அவையெல்லாம் தத்தம் வேலையைப் பார்த்துக் கொண்டு போய் விடுகின்றன. என்னை யார் அழகுபடுத்துவது?'' என ஏக்கம் கொண்டது.

இவற்றையெல்லாம் நினைக்கும் போது, இறைவன் மேல் கோபமாக வந்தது நிலவுக்கு. தன்னைக் கையுமின்றிக் காலுமின்றி, இயற்கை அழகு இல்லாத வானத்தில் விட்டு விட்டதை எண்ணி இறைவன் மீது கடுங்கோபம் கொண்டது.

திடீரென்று வானம் இருண்டது. மின்னல் அடித்தது. கருமேகங்கள் தோன்றி நிலவை மறைத்துக் கொண்டன. அதைத் தொடர்ந்து பயங்கர இடிமுழக்கத்துடன் மழை பெய்யத் தொடங்கியது.

இரண்டு நாட்கள் விடாமல் பெய்த மழை மூன்றும் நாள் விட்டது. கருமேகங்கள் கலைந்தன. மெல்லக் கதி

ரவன் எட்டிப் பார்த்தான். அன்று மாலை நிலவு தன் முழு அழகுடன் ஒளிவீசி வானில் நடைபயின்றது.

திடீரென்று கீழே ஏதோ முழக்கங்கள் கேட்கவே கீழே உற்று நோக்கியது. ஊர்வலம் ஒன்று போய்க் கொண்டிருந்தது. தேர் போல ஒரு பாடை கட்டி அலங்கரித்து அதில் இறந்தவனை வைத்துத் தூக்கிச் சென்றார்கள்.

யாரென்று உற்று நோக்கியதில் அது அன்று வேட்டையாடிய அரசன் தான் என்று நிலவு தெரிந்து கொண்டது. அவன் இரண்டு நாட்களாகப் பெய்த மழையின் காரணமாக ஜுரம் வந்து இறந்தான் என மக்கள் பேசிக் கொண்டதிலிருந்து தெரிந்து கொண்டது.

''ப்பூ! இவ்வளவுதானா இவன் வீரம்! மழை அடித்ததாலேயே இறந்து போய் விடும் இவனையா பெரும் வீரன் என்று இத்தனை நாள் கருதிக் கொண்டிருந்தேன்'' என்று நினைத்து மனத்திற்குள் சிறிது பெருமை அடைந்தது.

சற்று நேரத்திற்கெல்லாம் ஆடு ஒன்று ''மே, மே'' என்று கத்தியபடி கசாப்புக் கடைக்காரன் ஒருவனால் இழுத்துச் செல்லப்பட்டது.

அது முன்பு சுதந்திரமாய்த் திரிந்து கொண்டிருந்த ஆடுதான் எனப் புரிந்து கொண்டது.

''இதன் வாழ்க்கை இவ்வளவு தானா? இதைப் பார்த்தா நாம் பொறாமை அடைந்தோம். ஒருநாள் வயிறார உண்டதுதான் இது பூமியிலே கண்ட சொர்க்கம். சுதந்திரமாக வாழ்ந்த இந்த ஆட்டின் ஆயுசு அற்பமானது. பாவம், கசாப்புக் கடைக்காரனால் கொல்லப்படப் போகிறது'' என எண்ணி ஆட்டுக்காக அநுதாபப்பட்டது.

இவ்வாறு எண்ணிக்கொண்டே இருந்த நிலவு திடீரென ஏதோ பெரிய கூட்டம் கீழே தென்படவே அங்கு என்ன நடக்கிறது என்று நோட்டம் விட்டது.

அங்கு ஒரு கோபுரம் மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப் பட்டு உடைந்து கிடந்தது. அங்கும், இங்கும் உடைந்த தூண்கள் சிதறிக் கிடந்தன. சிலைகள் எல்லாம் மண்ணில் புதைந்து கிடந்தன. தனது எழிலெல்லாம் இழந்து பரிதாபமாகக் கோபுரம் சாய்ந்து கிடந்தது.

மக்கள் அவற்றையெல்லாம் கூடி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர்.

நிலவு பார்த்தவுடனேயே, அது முன்பு தான் பார்த்துப் பொறாமை கொண்ட சிறு கோபுரம்தான் எனப் புரிந்து கொண்டது.

''என்ன இது! இரண்டு நாட்களுக்கு முன்பு அழகுடன் விளங்கிய கோபுரம் இன்று தன் அழகை இழந்து பாழ் பட்டுக் கிடக்கிறதே! நாம் இதைப் போலப் பிறந்து இருந்தால், இந் நேரம் இந்நிலையில் கிடந்திருப்போம். அய்யோ! பார்க்கவே இக்காட்சி கோரமாக இருக்கிறதே! நல்லவேளை; இதைப் போல நாம் பிறக்கவில்லை'' என எண்ணி மகிழ்ச்சி அடைந்தது.

''பூமி இயற்கை அழகோடு விளங்கினாலும், அதில் பிறக்கும் உயிரினங்களெல்லாம் அழிந்து போய்விடுகின்றன. உயிரற்றவைகளும் அப்படியே சிறிது நேரமே இன்பத்தை அனுபவிக்கின்றன. கடவுள் நம்மை வானிலேயே வைத்தாலும் அழியாமல் இருக்கும்படி செய்துவிட்டார். அத்தகைய கடவுளை நாம் தூற்றினோமே! அது மிகவும் பாவம். கடவுள் எல்லாவற்றையும் நன்மைக்கே செய்திருக்கிறார்'' எனக் கூறிக்கொண்டே பொறாமையை விட்டுவிட்டுப் பெருமையுடன் நட்சத்திரங்கள் புடைசூழ வானில் உலா வந்தது.

-ஆர். சிவகாமசுந்தரி. (6713) சிதம்பரம்.

ரோமங்களைத் தின்ற வெள்ளாடு!

ஷாஜஹான் சக்கரவர்த்தி, ஒரு நாள் கோடைக்காலத்தில் வேட்டைக்குச் சென்றார். வேட்டையாடிக் கொண்டு அவர் காட்டில் வெகுதூரம் சென்று விட்டார். அவருடன் இருந்தவர்கள் மிகவும் பின் தங்கி விட்டார்கள்.



திடீரென ஒரு புயல்காற்று வீசியது. கோடைக்காலம் ஆனபடியால்,

காற்று அதிக உஷ்ணமாயிருந்தது. காற்றின் வேகத்தில் உஷ்ணமான மணல் கலந்து வந்து ஷாஜஹானையும் அவர் குதிரையையும் தாக்கியது. அத்துடன் அவருக்குத் தாகமும் அதிகரித்து விட்டது. ஆனால், அந்தக் காட்டில் அருகில் எங்கும் தண்ணீர் கிடைக்கவில்லை. நாற்புறமும் பார்த்தார். மனித சஞ்சாரமே காணப்படவில்லை. வீடுகளும் இல்லை; வெகு தூரத்தில் ஒரு மரத்தடியில் ஓர் ஆடு மேய்ப்பவன் தன் ஆடுகளுடன் நிற்பதைக் கண்டார். அங்கு சென்று அவனிடம் தாகத்திற்குத் தண்ணீர் கேட்டார்.

ஆடு மேய்ப்பவன் உடனே தன் ஆடுகளின் பாலைக் கறந்து கொடுத்தான். ஷாஜஹான் அந்தப் பாலைக் குடித்தார். தாகம் தீர்ந்தது. களைப்பும் நீங்கியது. சந்தோஷப்பட்டு அந்த மனிதனுக்கு இனாம் கொடுக்க எண்ணினார். பக்கத்தில் கிடந்த ஓர் இலையை எடுத்து அதில் ஏதோ எழுதினார். எழுதுவதற்கு இலையைத் தவிர வேறு எதுவும் அப்போது அவரிடம் இல்லை.

''உன் பெயர் என்ன?'' என்று கேட்டார்.

''என் பெயர் பார்ஸி'' என்றான் ஆடு மேய்ப்பவன்.

''பார்ஸி! நீ தில்லிக்கு வா. அங்கு வெள்ளிக்கிழமைகளில் ஜும்மா மசூதியில் நான் இருப்பேன். இந்த இலையை என்னிடம் கொடு. உனக்கு இரண்டு கிராமங்கள் இனாமாகக் கொடுக்கப்படும்.'' இவ்வாறு கூறிவிட்டு ஷாஜஹான் அங்கிருந்து குதிரை ஏறிச் சென்று விட்டார்.

பார்ஸி அந்த இலையைத் தன் வீட்டிற்குக் கொண்டு போனான். அதைத் தன் கம்பளியின் கீழே வைத்துவிட்டுத் தூங்கி விட்டான். அவன் எழுந்திருக்குமுன் அந்த இலையை ஒரு வெள்ளாடு தின்று விட்டது!

பார்ஸி இலையை இழந்தான்; துக்கத்தில் ஆழ்ந்தான்.

''ஆடு இரண்டு கிராமங்களைத் தின்று விட்டதே!'' என்று கூறித் தலையில் அடித்துக் கொண்டான்! அழுதான்! வீட்டிலிருந்து வெளியே வந்தான்!

''ஆடு இரண்டு கிராமங்களைத் தின்று விட்டது!'' என்று சொல்லிக் கொண்டே தெருக்களில் ஓடினான். அவனுக்குப் பைத்தியம் பிடித்துவிட்டதென்று மக்கள் நினைத்தார்கள். அவனை உட்கார வைத்துத் தலையில் தண்ணீரை ஊற்றினார்கள். ஆனால், அவனுடைய பைத்தியம் குறையவில்லை.

வீட்டிற்குள் நுழைவான்.

''ஆடு இரண்டு கிராமங்களைத் தின்று விட்டது!'' என்பான். அங்கிருந்து தெருவிற்குச் செல்வான்.

''ஆடு இரண்டு கிராமங்களைத் தின்று விட்டது!'' என்று புலம்புவான். மக்கள் பரிதாபப்பட்டார்கள். அவன் ஏன் இவ்வாறு புலம்புகிறான் என்று அவர்களுக்கு விளங்கவில்லை.

இறுதியாக, ஒரு கிழவர் பார்ஸியிடம் வந்து அன்பாகப் பேச ஆரம்பித்தார். பல கேள்விகள் கேட்டார். பார்ஸியிடமிருந்து விவரத்தை அறிந்து கொண்டார். உடனே, அவனுடைய பைத்தியம் தெளிய மருந்து கண்டு பிடித்தார்.

''பார்ஸி! உன் துயரத்தின் காரணத்தை நான் நன்கு அறிந்துகொண்டேன். அதற்கு நான் நல்லதொரு பரிகாரமும் சொல்லுகிறேன் கேள்! என் சொற்படி நட! உனக்கு நன்மை உண்டாகும். என்னுடன் தில்லிக்கு வா. வெள்ளிக்கிழமை ஜும்மா மசூதி என்னும் பள்ளி வாசலின் முன்னால் நின்று கொண்டு, ''ஆடு இரண்டு கிராமங்களைத் தின்று விட்டது!'' என்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டே இரு. மக்கள் உன்னைப் பார்த்துச் சிரித்தால், அதைக் கவனியாதே! இதன் பொருள் ஷாஜஹான் சக்ரவர்த்தி ஒருவருக்குத்தான் தெரியும். அவர் இந்த வார்த்தைகளைக் கேட்டவுடன், உனக்கு உதவி செய்வார்'' என்று புத்திமதி கூறினார்.

''இது நல்ல திட்டம். இதுவரை எனக்கு ஒன்றும் தோன்றாமல் திகைத்தேன். நீங்கள் பெரிய உபகாரம் செய்தீர்கள். உங்களுக்கு என் நன்றி!' என்றான் பார்ஸி.

இருவரும் தில்லி சென்று ஜும்மா மசூதிக்குப் போனார்கள். தொழுகை முடிந்து எல்லோரும் திரும்பி வரும் பொழுது, ''ஐயா! இரண்டு கிராமங்களை ஆடு தின்று விட்டதே!'' என்று திரும்பத் திரும்பக் கூறினான், பார்ஸி. எல்லோரும் இதைக் கேட்டார்கள். ஆனால், கவனிக்காமல் போய் விட்டார்கள்.

ஷாஜஹான் சக்கரவர்த்தி இந்த வார்த்தைகளைக் கேட்டார். அதன் பொருளை அவரே உணர்ந்தார். பார்ஸியை அழைத்தார், பார்ஸி, ''ஐயோ! ஆடு இரண்டு கிராமங்களைத் தின்று விட்டதே!'' என்றான்.

பார்வியை அழைத்துவந்த கிழவர் நடந்த விஷயத்தைச் சக்கரவர்த்தியிடம் விவரமாகக் கூறினார்.

ஷாஜஹான் அவன்மேல் இரக்கம் கொண்டார். அவனுக்கு இரண்டு கிராமங்களை இனமாகக் கொடுத்தார். அதைத் தவிர வேறு பல வெகுமதிகளும் அளித்தார்.

ஷாஜஹானை மனமார வாழ்த்திக் கொண்டே பார்வி தனது வீட்டிற்குத் திரும்பிச் சென்றான்.

—கே. ஷர்மிலா (6850), மன்னார்குடி.

யார் புத்திசாலி?

ஓர் ஊரில் குருவும் இரண்டு சீடர்களும் இருந்தார்கள். அவர்கள் அடிக்கடி ஊர் ஊராகச் சென்று ஊர் மக்களுக்கு உபதேசம் செய்து கொண்டு இருந்தார்கள். இப்படியிருக்க ஒருநாள், குருவும், சீடர்களும் குமாரம்பட்டி என்கிற சிற்றூருக்கு மாலையில் வந்து சேர்ந்தார்கள். அங்கிருந்த பாழடைந்த கோயிலின் தாழ்வாரத்தில் தங்கினார்கள்.



அந்த ஊரில் இரவு உணவுக்கு எதுவும் கிடைக்காததால் குரு தமது சீடன் ஒருவனிடம் பால் வாங்கிவர, பணத்துடன் அனுப்பி வைத்தார். மேற்படி ஊர் சிறிய கிராமம். அங்கே ஒரு வயதான கிழவி, வீட்டில் எருமை மாடு வைத்துப் பால் விற்று ஜீவனம் செய்வதாகத் தெரிந்தது. சீடன் அக்கிழவியின் வீட்டிற்குச் சென்று பாத்திரத்தில் பால் கொடுக்கும்படி கேட்டான். அதற்குக் கிழவி, ''சற்று பொறு. பால் கறந்து தருகிறேன்'' எனக் கூறினாள்.

சிஷ்யன் அந்த எருமை மாட்டைப் பார்த்து ஆச்சரியம் அடைந்தான். அதன் கொம்புகள் அகலமாக வளைந்து எருமை மாடு இருந்த கொட்டகையின் வாயிற்படி கொள்ளாத அளவிற்கு இருந்தது.

உடனே அவன் கிழவியைப் பார்த்து, ''பாட்டி, எனக்கு ஒரு சின்ன சந்தேகம். இந்த எருமை மாட்டின் கொம்பு வாயிற்படி பிடிக்காத அளவுக்கு இருக்கிறதே, ஒருவேளை இது செத்துப் போய் விட்டால் எப்படி வெளியில் எடுத்து வருவீர்கள்?'' எனக் கேட்டான்.

கிழவிக்குக் கெட்ட கோபம் வந்து, ''பால் வாங்க வந்தாயா? இல்லை, என் பிழைப்பில் மண்ணைப் போட வந்தாயா?'' என்று கோபத்துடன் அவனை விரட்டியடித்தாள்.

குருவிடம் திரும்பி வந்த சீடன் விவரத்தைச் சொல்லாமல், அடுத்த சீடனைப் பால் வாங்கி வர ஏற்பாடு செய்து விட்டான்.

இரண்டாவது சீடன் பால் வாங்கி வர அதே வீட்டிற்குப் போனான்.

கிழவியிடம் பால் வாங்க வேண்டும் எனக் கேட்டான். கிழவி அவனை முறைத்துப் பார்த்துவிட்டு, ''உட்கார், பால் கறந்து தருகிறேன்'' என்று உள்ளே சென்றாள். இரண்டாவது சீடன், ''என்ன பாட்டி, யார் மீது கோபமாக இருக்கிறீர்கள்?'' எனக் கேட்டான்.

அதற்குப் பாட்டி ''உன்னைப் போல் ஒருவன் பால் வாங்க வந்தான். அவன், 'எருமை மாட்டுக் கொம்பு அகலமாக இருக்கிறதே! அது செத்து விட்டால் எப்படி வெளியே கொண்டு போவீர்கள்?', என்று கேட்டான். மாட்டை வைத்து நான் ஜீவனம் நடத்துவதைக் கெடுத்து விடுவான் போல இருக்கிறது என்று எண்ணி அவனைக் கோபத்துடன் விரட்டி விட்டேன்'' என்றாள்.

அதற்கு இரண்டாவது சீடன் சிரித்து விட்டு, ''பாட்டி, அவன் என் குருவிடம் ஞானத்தைத் தெரிந்து கொள்ளச் சிஷ்யனாக இருக்கிறான். மடையன். இந்த அற்ப விஷயத்தைப் போய் உங்களிடம் கேட்டானே! எருமை மாடு செத்துப் போன பிறகு, கொம்பை வாளால் அறுத்து விட்டால், அதற்கு வழியா தெரியப் போகிறது? பிறகு அதை வெளியே சுலபமாகக் கொண்டு வரலாமே!'' என்றான்.

கிழவி இதைக் கேட்டதும், அதிகமான கோபத்துடன், ''போடா வெளியே!'' எனத் துரத்தி விட்டாள். திரும்பி வந்த இரண்டாவது சீடன் குருவிடம், எதையும் சொல்லாமல், பால் பாத்திரத்தையும் பணத்தையும் குருவின் முன்னால் வைத்தான்.

குரு கோபத்துடன், ''நானே பால் வாங்கி வருகிறேன்'' என்று கிழவி வீட்டிற்குச் சென்றார்.

கிழவி குருவைப் பார்த்து ஆச்சரியப்பட்டு உங்கள் சிஷ்யர்கள் என்று ஆரம்பித்து நடந்ததை விவரித்தாள்.

அதற்கு குரு கிழவியிடம், ''என் சிஷ்யர்கள் மகா மூடர்கள். எவ்வளவோ கற்றுக் கொடுத்தும் ஞானம் பிறக்கவில்லை. இறந்து போன மாட்டின் கொம்பை எதற்காக அறுக்க வேண்டும்? அதை எதற்காக வெளியிலே கொண்டு வரவேண்டும்? அங்கேயே குழி தோண்டிப் புதைத்து விட வேண்டியதுதானே! இதுகூடத் தெரியாத ஞான சூனியங்கள்!'' என்றாரே பார்க்கலாம். கிழவி மூர்ச்சை அடைந்து, அது தெளிய வெகு நேரமாகியது!

இப்படிப்பட்ட போலி குருவை நம்பிச் சீடர்களை அனுப்பலாமா?

—நா. வேங்கடேஸ்வரன் (4088), திருப்பத்தூர் (வ. ஆ.).

மந்திரக் கல்

ஓர் ஊரில் கந்தன் என்ற குடியானவன் இருந்தான். அவன் மிகவும் ஏழை. அனாதை. அவன் நாள்தோறும் காட்டிற்குச் சென்று விறகு வெட்டி அதை விற்று வாழ்ந்து வந்தான். ஒருநாள் வழக்கம்போல் காட்டிற்குச் சென்றான், கந்தன். விறகு வெட்டிக் கொண்டே இருக்கும்பொழுது அவன் எதிரே ஒரு பாம்பு படமெடுத்து ஆடியது. உடனே கந்தன் தன் கையிலுள்ள கோடரியால் பாம்பை இரு துண்டாக்கினான். அப்போது—

அதிலிருந்து ஒரு தேவதை தோன்றி, ''எனக்குச் சாப விமோசனம் அளித்த வாலிபனே! என் பரிசாக இப்பொருள். வைத்துக் கொள்'' என்று கூறி ஒரு மந்திரக் கல்லைக் கொடுத்தது.

பின்னர் அத்தேவதை,

''வாலிபனே! இந்தக் கல் நீ எது கேட்டாலும் கொடுக்கும். ஆனால், இதைத் தீய செயல்களுக்குப் பயன்படுத்தினால் அதைச் செய்யச் சொன்னவர்களையே அழித்து விடும்'' என்று கூறி மறைந்துவிட்டது.

கந்தன் அந்த மந்திரக் கல்லோடு குடிசைக்குச் சென்றான். அங்கு அவனுக்கு ஓர் ஆச்சரியமான நிகழ்ச்சி காத்திருந்தது. அவன் குடிசை அரண்மனை போலாகியது. செய்தி அறிந்த மக்கள் அவன் வீட்டிற்குச் சென்று அவனை வாழ்த்தினர். அவர்கள் எல்லோருக்கும் விருந்தளித்து மகிழ்ந்தான் கந்தன்.

இதனைக் கேள்வியுற்ற அந்நாட்டின் அமைச்சன் பொறாமை கொண்டான். எங்கும் கந்தனைப் பற்றியே மக்கள் பேசிக் கொண்டிருப்பதைக் கண்டான். 'கந்தனிடம் உள்ள மந்திரக் கல்லைக் கைப்பற்றி விட்டால், கந்தனின் புகழ் மறைந்து விடும். பிறகு, மந்திரக் கல்லின் மூலம் அரசனைக் கொன்று, தானே இந்நாட்டை ஆளலாம்' என்று எண்ணினான், அந்தக் கொடிய அமைச்சன். அதற்கான திட்டம் ஒன்று அவன் மனத்தில் தோன்றியது. அவன் நேராக அரசரிடம் சென்று,

''மன்னா! கந்தன் என்னும் விறகு வெட்டியிடம் மந்திரக்கல் ஒன்று உள்ளது. அதன் மூலம் அவன் நாட்டு மக்களைத் தன் பக்கம் இழுத்து நம் அரசை எதிர்க்கச் சூழ்ச்சி செய்கிறான். அதனால் அவனை, முளையிலே கிள்ளி எறிந்து விடுவது நல்லது'' என்றான்.

அமைச்சனின் சூழ்ச்சியை அறியாத மன்னன், கந்தனை மந்திரக் கல்லுடன் கைது செய்து அழைத்துவர உத்தரவிட்டான். அமைச்சன் தன் திட்டம் நிறைவேறியது கண்டு மகிழ்ந்தான். கந்தனைக் கைது செய்து மந்திரக் கல்லைக் கந்தனிடமிருந்து பிடுங்கி அரசனிடம் கொடுத்தான். பிறகு மன்னனின் கையில் இருந்த மந்திரக் கல்லை அமைச்சன் வாங்கித் தன் கையில் வைத்துக் கொண்டு, ''மன்னா! இவன் உயிரோடு இருந்தால் ஆபத்து! இவனைக் கொன்று விடுவது நல்லது'' என்றவாறு, ''கந்தன் சாகவேண்டும்!'' என்று நினைத்து, மந்திரக் கல்லைக் கையில் பிடித்தான். ஆனால், கந்தன் சாகவில்லை. மாறாக, தேவதை கூறியது போல், தீய செயலுக்குக் கல்லைப் பயன்படுத்திய அமைச்சனை அது அழித்தது! பிறகு உண்மையைப் புரிந்துகொண்ட மன்னன், மந்திரக்கல்லைக் கந்தனிடமே கொடுத்து நல்லநாளில் கந்தனுக்கே அமைச்சர் பதவியை அளித்தான்.

—மு. கா. நெடுமாறன் (660), காவேரிப்பட்டணம்.



திப்பிலி ராஜாவின் எலி வேட்டை

வாண்முகில்



திப்பிலி ராஜா பசியுடன் மாடியிலிருந்து 'சர்'ரெனச் சறுக்குப் பலகையில் வழுக்கியபடியே இறங்கி வந்தார். சறுக்குப் பலகையின் கீழ் முனையில் மெத்தை நாற்காலி. எதிரே உணவு மேஜை. மேஜையின் மேல் ஒரு வெள்ளிக் கிண்ணத்தில், 'வெள்ளை யானை இட்லி' ஒன்று சாம்பாரில் நீந்திக் கொண்டிருந்தது. இட்லியை வெட்டப் போன ராஜா, திடீரென்று —

''சாம்பார்'' — எனக் கூவினார்.

பரிமாறுபவன் சாம்பார் வாளியையே பக்கத்தில் வைத்தான்.

''இந்தச் சாம்பாரைக் கேட்கவில்லை. சமையல் படைத் தலைவர் சாம்பாரைக் காணோமே!''

இந்தக் கூச்சல் கேட்டு விழித்துக் கொண்ட 'சாம்பு. ஆர்'' ஓடிவந்தார்.

''தலைவரே! இந்த 'யானை இட்லி'யின் தந்தங்கள் எங்கே?''

''சாம்பாரிலேயே மிதக்கும் அரசே!'

''தேடிப் பாருங்கள்! தென்படவில்லையே!''

''ஓ! இது பெண் யானை இட்லி!'' என்று சமாளித்தார் சாம்பார். அவர் தலைமையேற்ற பின் ஏதாவது புதுமை செய்ய வேண்டுமென்று, யானை வடிவத்தில் தட்டு செய்து, அதில் 'யானை இட்லி' செய்ய ஏற்பாடு செய்தார். அப்படிச் சுடப்பட்ட 'யானை இட்லி'யில்தான் தந்தங்களைக் காணோம்!

''அந்த இட்லி வேண்டாம் அரசே! இந்தக் 'கப்பல் தோசையைச் சாப்பிடுங்கள்'' — வழக்கம் போல் வட்ட வடிவமாகத் தோசை சுடாமல், கப்பல், காக்காய், காண்டாமிருகம், கத்தரிக்காய்-என்றெல்லாம் கண்டபடி தோசை சுடுவதில் அவர் நிபுணர்.

''என்ன இது?'' — என்று கேட்டார் ராஜா.

''கப்பல் தோசை.''

''என்ன கப்பல்?''

''பாய்மரக் கப்பல்.''

''என்ன பாய்?''

''மாவுப் பாய்.''

''என்ன தலைவரே! விளையாடுகிறீர்! பாயுமில்லை. படுக்கையுமில்லை! இட்லியில் தந்தத்தையும், கப்பலில் பாய் மரத்தையும் எடுத்தது யார்? யார்?''

''அது!... அது...''

''எது? உண்மையைக் கூறுங்கள்.''

''மன்னிக்க வேண்டும் மன்னவா? எலி கடித்து விட்டது.''

''எலியா?'' — என்று அலறிய ராஜா, ஒரே துள்ளலில் மேசையின் மீது உட்கார்ந்து கொண்டார்.

''என்ன அநியாயம்! இட்லியைக் கடித்துத் தோசையைக் கடித்துக் கடைசியில் என்னையே இந்த எலி கடித்துவிடும் போலிருக்கிறதே!''

''ஆம் அரசே! நீங்கள் உடனே எலி வேட்டைக்குப் புறப்பட வேண்டும்!''

''எலி வேட்டையா! நானா?'' என்ற ராஜா கால்களை மடக்கிக் கொண்டார்.

''புலி வேட்டையென்றால் புறப்படுவேன் தயக்கமின்றி! எலி வேட்டை என் குலத்துக்கே அவமானம்!'' என்று ராஜா விளக்கினார்.

''புலிகளை யாரும் வேட்டையாடக் கூடாது என்று சட்டம் உள்ளது. எதையாவது நீங்கள் வேட்டையாட வேண்டுமென்றால் அதற்கு எலிதான் கிடைக்கும் அரசே!''

''கிடைக்கும்! கிடைக்கும்! நம் அரண்மனை எலி, ஒருவேளை எலிநாட்டு இளவரசனாகக்கூட இருக்கலாம்.''

''...கலாம்! அல்லது யாராவது சாமியாரின் தாடியைக் கடித்துச் சாபம் பெற்ற எலி இளவரசியாகவும் இருக்கலாம். உங்கள் கையினால் சாப விமோசனம் பெற்று, உங்களையே

கல்யாணம் கூடச் செய்து கொள்ளலாம்... லாம்.''

''அய்யோ! இன்னொரு கல்யாணமா?'' என்று அலறிய ராஜா மயங்கி விழுந்தார். சாம்பார் உடனே காபியைக் கொண்டு வந்தார். காபி வாசனையிலேயே அவர் மயக்கம் தெளிந்தது.

''சரி! ஏழு நாள் எலி வேட்டைக்கு ஏற்பாடு செய்யுங்கள்'' — என்று சொல்லிவிட்டு ஏழு தோசைகளை வெட்டத் தொடங்கினர், ராஜா.

எலி வேட்டை!

முதல்நாள் — ''முரசறிவிப்பு!''

''டம — டம— டம— இதனல் சகலமான திப்பிலியூர் வாசிகளுக்கும் ராஜா தெரிவிப்பது என்னவென்ருல்... இன்றிலிருந்து சரியாக ஏழாம் நாள் எலி வேட்டை நடைபெறும். அன்று அனைவருக்கும் ''எலி டே'' விடுமுறை... டம — டம — டம.''

இரண்டாம் நாள் — ''வேண்டுகோள்.''

''அன்புள்ள அரண்மனை எலிஜி,

வணக்கம் பல. நலம். நலம் அழிய அவா. 'புலித் தொல்லை என்ருல் பொறுத்துக் கொள்வோம். இனி பொறுக்க இயலாது எலித் தொல்லை!' என்று அரண்மனைவாசிகள் அலறுகின்றனர். உங்களுக்கு எதற்கு அரண்மனை? வேண்டுமென்ருல் கட்டித் தருவேன் எலிமனை — 24 மணி நேரத்துக்குள் வெளியேறிவிட்டால்.''

அன்புள்ள,
திப்பிலி ராஜா.

இப்படியொரு வேண்டுகோள் அரண்மனைக் கதவில் ஒட்டப்பட்டது.

மூன்ரும் நாள் — ''எச்சரிக்கை.''

''முரசறிவிப்பையும், வேண்டுகோளையும் எலி அலட்சியம் செய்துவிட்டதால் எலிவேட்டை நடைபெறும்.''

—என்ற 'எச்சரிக்கை' வேண்டுகோள் தாளின் மீதே ஒட்டப்பட்டது.

நான்காம் நாள் — ''இரகசிய ஆலோசனை.''

ராஜாவும், சமையல் படைத் தலைவரும் இரகசியமாகத் திட்டம் தீட்டினர்.

ஐந்தாம் நாள் ''ஆயத்தம்.''

இரகசியத் திட்டத்தின் படி எலி வேட்டைக்கான முன்னேற்பாடுகள் செய்யப்பட்டன.

ஆரும் நாள்: ''செய்தியாளர் கூட்டம்.''

கூட்டத்தில்செய்தியாளர்களின்''பட் பட்'' — என்ற கேள்விகளுக்கெல்லாம் ராஜா ''டப் — டப்'' என்று பதில் சொன்னர்.

''ராஜாவுக்கும் எலிக்கும் பரம் பரைப் பகையா?''

''இல்லை. எலியார் இதுவரை நட்புடன்தான் பழகி வந்தார். திடீரென்று அவர் அரண்மனைச் சொத்துக்களை நாசம் செய்யத் தொடங்கி விட்டதால்—''

''—விலை உயர்ந்த சொத்துக்களா?''

''வெள்ளை யானைத் தந்தங்கள்?''

''வெள்ளை யானையா?'' — என்று விழித்தனர்செய்தியாளர்கள். ''வெள்ளை யானை வடிவில் இருந்த இட்லிகள்'' என்று சாம்பார் விளக்கினர். ராஜாவின் பேட்டி தொடர்ந்தது.

''இதுபற்றிக் கலக நாடுகளின் மன்றத்தில் நீங்கள் ஏன் புகார் செய்யவில்லை?''

''எலிநாடு இன்னும் அம்மன்றத்தில் உறுப்பினர் ஆகவில்லை.''

''இப்படித் திடீர்ப் போர் தொடுப்பது நியாயமா?''

''திடீரல்ல. அறிவிப்பு, வேண்டுகோள் — எச்சரிக்கைஎல்லாம் கொடுத்துவிட்டோம். பயன் இல்லை.''

இந்தப் பரபரப்பான பேட்டி அன்று மாலையே சுறுசுறுப்பான ஏடுகளில் வெளிவந்து விட்டது.

ஏழாம் நாள்: வேட்டை.

ஏழாம் நாள் விடியற்காலை 8.00 மணிக்கே ராஜா எழுந்து விட்டார். அன்றுதான் வேட்டைநாள். வேட்டைக்குத் தயாராஞர் ராஜா. செய்தியாளர்களும்,தொலைக்காட்சி, வானெலி நேர்முக வர்ணனையாளர்களும் அங்கும், இங்கும் ஓடிக்கொண்டிருந்தனர்.

அரசரின் அறைக் கதவு மெல்லத் திறந்தது. அரண்மனை மருத்துவர் மெல்ல வெளியே வந்தார். வர்ணனையாளர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு கேள்விகள் கேட்டனர்.


''ராஜா தயாராகி விட்டாரா?''

''...டார்! எலித்தடுப்பு ஊசி போட்டு விட்டேன். எலி எதிர்ப்புக் களிம்பினை உடலில் பூசிக் கொண்டுள்ளார்.''

இவ்வாறுமருத்துவர் பதில் சொல்லிக் கொண்டிருக்கும் போதே, சாம்பார் ஒரு விந்தையான தலைக் கவசத்தினை எடுத்துக் கொண்டு அரசரின் அறை நோக்கிச் சென்ருர். வர்ணனையாளாகள் மருத்துவரை விட்டு விட்டுச் சாம்பாரைச் சூழ்ந்து கொண்டனர்.

''தலைவரே, இது என்ன?''

''ஐந்தறைத் தலைக் கவசம். இத்தனை நாள் சமையலறையில் கிடந்தது.



வேட்டையாடச் செல்லும் அரசர்கள் வழி தவறி விட்டால் இது பயன்படும்.''

''முதல் அறையில்...''

''சிக்கி — முக்கிக் கல் — நெருப்புண்டாக்க.''

''இரண்டாம் அறையில்.''

''தங்கப் பல்குச்சி. சிறு துரும்பும் பல் குத்த உதவும். ராஜா ஏதாவது விஷத் துரும்பினை எடுத்துக் குத்திக் கொள்ளக் கூடாதல்லவா? — அதற்காக—''

''மூன்றில்.''

''ஓலைச் சுருள் — செய்தி அனுப்ப.''

''நான்காம் அறையில்.''

''வெள்ளி எழுத்தாணி.''

''கடைசி அறையில்...''

''கல்கண்டு. தாகத்திற்கு.''

சாம்பார் பேட்டி முடிவதற்குள்— 'கிர்' 'கிர்' என்று அரசர் அறைக் கதவுகள் திறந்தன. 'கர்' 'கர்' —என்று சறுக்கிக் கொண்டு ராஜா கூடத்தில் பாய்ந்தார். அவரால் ஓடியாடி வேட்டையாட முடியாது. எனவே காலில் சக்கரங்களைக் கட்டிக்கொண்டிருந்தார், சாம்பார், ராஜாவின் தலையில் ஐந்தறைக் கவசத்தை மாட்டினார். கண்கொள்ளாக் காட்சி! இடையில் வாள்! தோளில் வில்! இருப்புப் பட்டையில் கைத்துப்பாக்கி! ஒரு கையில் கேடயம். இன்னொரு கையில் குண்டாந்தடி!

கூடத்தில் ராஜா 'சர், சர்' என்று சுழன்றார். காமிராக்கள் 'விர்—விர்' என்று சுழன்றன. அரண்மனைக்குள் எங்கிருந்தாலும் எலியை அக்கூடத்துக்கு விரட்ட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. ஆனால் எங்கும் எலியைக் காணோம்!

''இன்னும் ஒரே நிமிடம்'' — வானொலி வர்ணனையாளர் திடீரெனக் கூவினார்.

அக்கூச்சலைக் கேட்டு அதிர்ந்து போனார் ராஜா! எலி வேட்டையில் ஏமாற்றமா? மனம் உடைந்தார். தடுமாறினார். சக்கரங்கள் சுவரை நோக்கி அவரை இழுத்தன.

சுவரில்—

ஐந்தறைக் கவசம் மோதியது.

'படீர்' — என்று கவச அறையொன்று திறந்தது.

'குபீர்'— என்று அதன் உள்ளே இருந்து சுண்டெலி வெளியே தாவியது.

தாவிய எலி தரையில் ஓடியது. எங்கும் பரபரப்பு. தடுமாறிய ராஜா சக்கர நடனமாடினார்.

கூடத்தின் குறுக்கே எலி வந்த போது—

'சர்' — என்று ராஜா நெடுக்கே வந்தார்.

'சதக்' — என்று அவர் கால் சக்கரம் எலியின் மீது ஏறியது. எலி நசுங்கியது. துடிதுடித்துச் செத்தது!

அந்த அதிர்ச்சியில் ராஜா கீழே விழப் போனார். நல்ல காலம்! சுவரில் மாட்டியிருந்த புலித்தலை ஒன்றைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டார்.

'ஐந்தறைக் கவசத்தில் எலி எப்படி வந்தது?' என்று அரண்மனையில் எல்லோரும் கலங்கிக் கொண்டிருந்தனர்.

ஐந்தறைக் கவசத்தைச் சமையலறையில் ஐந்தறைப் பெட்டியாகப் பயன்படுத்திய சாம்பார், அதில் மசால் வடையை ஒளித்து வைத்ததை யாரிடமும் சொல்ல விரும்பாமல், கீழே கிடந்த ராஜாவைத் தூக்க ஓடினார்.

பிருந்தாவனக் கவியரங்கம்

குறும்புக்காரன்

எங்கள் வீட்டு அறைக்குள்ளே
இருந்தான் குறும்புக் காரன்அவன்.
அங்கும் இங்கும் ஓடிஅவன்
அனுதினம் தொல்லை கொடுத்திடுவான்.

முத்துவின் பாடப் புத்தகத்தை
முப்பது இடங்களில் கடித்துவிட்டான்.
தத்தும் பாப்பா தூங்குகையில்
தலையில் ஏறித் தாவிடுவான்.


வீட்டில் உணவுப் பண்டமெலாம்
விருந்தினர் போல உண்டிடுவான்.
ஓட்டைகள் போட்டு உடைகளிலே
உள்ளம் கொதிக்கச் செய்திடுவான்.

இத்தனை தொல்லைகள் அளித்துவந்த
இந்தக் குறும்புக் காரனையே
எத்தனை நாட்கள் பொறுப்பதுவோ
என்றே திட்டம் தீட்டிவிட்டேன்!

தேங்காய்த் துண்டை ஒருபொறியில்
தெரியும் படிநான் வைத்திருந்தேன்.
பாங்காய் வந்தான் பொறிக்குள்ளே;
'பட்'டென ஓசை கேட்டதுவே!

குறும்புக் காரன் யாரென்றே
புரிந்தது அன்றோ இப்பொழுது?
அரும்பு மீசை உடையவனே!
அவன்தான் சிறிய சுண்டெலியே!

—த. அருள்சிவபாலன் (47) செங்கற்பட்டு.





குரங்குக் குட்டி

குரங்குக் குட்டி ஆடுது;
கும்பல் சுற்றிக் கூடுது!

இலங்கைத் தீவைத் தாண்டுது;
இராமர் பாதம் வேண்டுது;
சலங்கை போட்ட கைகளால்
சலாம் போட்டுத் தீண்டுது.

சாமி யார்போல் போகுது;
சாதம் கேட்டுக் கூவுது;
மாமி யார்க்கு நீர்எடுத்து
மகிழ்ச்சி யாக நடக்குது!

தட்டை எடுத்து வருகுது;
சலாம் போட்டு நீட்டுது;
துட்டுக் கேட்டு நெருங்குது;
தூரப் போனால் அழைக்குது!

குரங்குக் குட்டி ஆடுது;
கும்பல் சுற்றிக் கூடுது!

—ஆர். சாந்தி (568), சிதம்பரம்.



நேரு மாமா

நேரு மாமா நம்மாமா — அவர்
நேர்மை மிகுந்த திருமாமா.

ரோஜா மலரைச் சூடியவர் — இதய
ராஜா வாக மாறியவர்!

தலைவர் அவரின் வழிநடப்போம் —
வாழ்வில்
தலைசிறந் தோங்கிப் புகழ்படைப்போம்.

—கே. அறிவுமணி (5229), எலவம்பட்டி.

உழவன்

பசிப்பிணி மருத்துவன் உழவனடா! —
—அவன்
பாரத நாட்டின் தலைவனடா!
எதிர்ப்புக ளில்லா வீரனடா — அவன்
எவர்க்கும் உதவும் நண்பனடா!

ஏரினைத் தோளில் தூக்கிஅவன்,
இறைவன் பரசு ராமனைப் போல்,
பூமியைப் பிளக்கப் புறப்படுவான்;
புன்னகை புரிந்தே வழிநடப்பான்!

பாலையும் தேனையும் பிறர்உண்ண-அவன்
கூழை, கஞ்சியைக் குடித்திடுவான்;
பட்டையும், சில்க்கையும் பிறர்உடுத்த:
—அவன்
பாவம், கந்தையைக் கட்டிடுவான்!


—நல்லாத்தூர் வே. நடராஜன் (5099)
நல்லாத்தூர்.





பிரதமர் இந்திராகாந்தி பிறந்ததும் நவம்பர் மாதம்தான் (தேதி-19)–மணிப்புரி நடனப் பெண்களுடன்

தெரியாது போனால் தெரிந்து கொள்ளுங்கள்



❊ உலகிலேயே மிகப் பெரிய கோபுரங்கள் அதிகமான அளவில் கொண்ட கோவில் எது தெரியுமா? ஸ்ரீரங்கம்தான். மொத்தம் இக்கோவிலில் 21 கோபுரங்கள் இருக்கின்றன!

❊ 'செயின்ட் பால் கதீட்ரல்' லண்டனிலுள்ள உலகப் புகழ்பெற்ற 'சர்ச்'சாகும். இதைக் கட்டி முடிக்க 35 வருடங்களாயின. இந்த முப்பத்தைந்து வருடங்களில் கட்டட வேலையில் கலந்து கொண்ட எவர்க்கும் எந்தவித விபத்தோ, ஆபத்தோ, நோயோ ஏற்பட்டதில்லை.

❊ பண்டைய ரோமானிய விளையாட்டு வீரர்களுக்கு வெற்றிக் கேடயமாக லாரல் இலைகளையே கிரீடம்போல் சூட்டும் வழக்கம் இருந்தது.

❊ ஆண் கழுதையை ஆங்கிலத்தில் Donkey என்கிறோம். பெண் கழுதைக்கு என்ன பெயர்?

விடை: ஜென்னி (Jenny)

❊ இந்திரப்பிரஸ்தம், லால்கட், சிரி, ஜாகன்பஹ், துக்ளபாத், பெரோசாபாத், பூர்ணகலா, ஷாஜஹான்பாத் இவை எல்லாம் டில்லியின் பழைய பெயர்களாகும்.


❊ முதன் முதலாக மின்சார ரயில் 1881—ஆம் வருடம் ஜெர்மனியில் ஓடியது.

❊ ஆடும் நாற்காலியை முதன் முதலில் கண்டுபிடித்தவர்: பெஞ்சமின் பிராங்ளின்.

❊ பறவை இனங்களிலேயே மிக அதிசயப் பறவை 'புஷ் துருக்கி' என்ற பறவை. இது ஆஸ்திரேலியாவில் உள்ளது.

இப்பறவை முட்டையிலிருந்து வெளிவந்தவுடனே, அந்த விநாடியே தானே பறக்க ஆரம்பித்து விடுகிறது! மற்றொரு அதிசயம், தன் உணவையும் அப்போதே, தானே தேடிக் கொள்கிறது!

தொகுத்தவர்: **எஸ். ஜெயஸ்ரீ** (1254), திருச்சி—14.



ஓசியிலே ஒரு லட்டு



அழகாபுரி அழகப்பன்

மாலையிலிருந்து கண்ணனுக்கு மனம் சரியில்லை.

தாய் என்பவள் கருணையின் வடிவம் என்று ஆசிரியர் சொன்னார். அப்படியிருக்க, பெற்றவளே பிள்ளைக்கு வஞ்சனை செய்வாளா?

செய்தாளே! அவன் தன் கண்களால் பார்த்தானே! காதுகளால் கேட்டானே!

அன்று கடைசி வகுப்புக்கு ஆசிரியர் வரவில்லை. எனவே, கண்ணன் வழக்கத்துக்கு முன்னதாகவே வீட்டுக்கு வந்தான்.

வாசலில் அவன் செருப்புகளைக் கழற்றிக் கொண்டிருந்தபோது, வீட்டுக்குள் அவன் அண்ணனிடம் அம்மா சொல்லிக் கொண்டிருந்த வார்த்தைகள் காதில் விழுந்தன.

''முகுந்தா! பக்கத்து வீட்டுக்காரம்மா ஒரு லட்டு கொடுத்தாங்க. தின்னு.''

''கண்ணனுக்கு?'' என்று முகுந்தன் கூடக் கேட்டான்.

ஆனால் அம்மா, ''அவனுக்கு வேண்டாம். நீயே தின்னுடு!'' என்று சொன்னாள்.

அவ்வளவுதான்; முகுந்தன் முழு லட்டையும் வாய்க்குள் திணித்துக் கொண்டுவிட்டான்.

அதைப் பார்த்த கண்ணன் அதிர்ச்சியடைந்துவிட்டான்.

அவர்கள் ஏழைகள். அவர்களால் லட்டு செய்ய முடியாது. பக்கத்து வீட்டிலிருந்து ஏதோ ஒரு லட்டு ஓசியாகக் கிடைத்தது. அம்மா, அதைப் பிட்டு, தன் இரண்டு பிள்ளைகளுக்கும் ஆளுக்குப் பாதியாகக் கொடுத்திருக்க வேண்டாமோ? முகுந்தனுக்கே அவ்வளவையும் கொடுத்துவிட்டு, கண்ணனுக்கு எதுவுமே கொடுக்காமல் ஓர வஞ்சனை செய்து விட்டாளே! யாராவது தனது ஒரு கண்ணுக்கு வெண்ணெயும், மறு கண்ணுக்குச் சுண்ணாம்பும் தடவுவார்களா? ஒரு கண் வேண்டாமென்று ஒதுக்குவார்களா?

ஆனால், அம்மா அவனை ஒதுக்கினாளே!


அவனிடம் அவ்வளவு பாசமாகப் பேசும் அம்மாவுக்கு உண்மையில் அன்பே இல்லையா? அவள் காட்டுவதெல்லாம் போலி அன்பா! ஒவ்வொரு தேர்விலும் அவன் முதல் மார்க் வாங்கி வரும்போது, அவனை உச்சி மோந்து, 'என் மகன் டாக்டராக வரப் போகிறான்! இஞ்சினியராக வரப் போகிறான்!' என்று பாராட்டும் அம்மா உண்மையில் நடிக்கிறாளா! அவள் பாசமெல்லாம் மூத்த மகன் மீதுதானா?

இத்தனைக்கும் முகுந்தன் நல்ல பிள்ளைகூட அல்ல; மக்குப் பயல்! பள்ளிக்கூடம், பாடம் என்றால் அறவே பிடிக்காது; பள்ளிக்குப் போவதாகச் சொல்லிவிட்டு, பகல் காட்சி சினிமாவுக்குப் போவான். இந்த ஆண்டும் தேர்வில் தோற்றுப் போனான். எவ்வளவோ சொல்லியும், இனிமேல் பள்ளிக்கே போக மாட்டேனென்று ஊரைச் சுற்றிக் கொண்டிருக்கிறான்.

இந்த லட்சணமான பிள்ளையின் மீதுதான் அம்மாவின் பாசம்! கெட்டிக்காரப் பிள்ளைக்கு ஓரவஞ்சனை செய்துவிட்டு உருப்படாத பிள்ளைக்குச் சலுகை காட்டுகிறாளே! இது என்ன நியாயம்?

கண்ணனுக்குப் புரியவில்லை. செருப்புகளை மாட்டிக்கொண்டு, ஓசைப் படாமல் மீண்டும் வெளியே போய் விட்டான்.

✲ ✲ ✲



அன்றிரவு கண்ணனும், முகுந்தனும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள்.

முகுந்தன், ''கூட்டு நல்லா இருக்கம்மா. ரசம் இன்னும் கொஞ்சம் ஊத்து!'' என்று கேட்டுக் கேட்டு வாங்கிச் சாப்பிட்டான்.

கண்ணன் வாய் பேசாமல் சாப்பிட்டுக் கொண்டிருந்தான்.

அவன் உம்மென்றிருந்ததை அம்மா கண்டுபிடித்து விட்டாள். ''ஏன், கண்ணா, ஒரு மாதிரி இருக்கே?''

அவனுக்கு அவளோடு பேசவே விருப்பமில்லை. ''ஒன்றுமில்லை'' என்றான்.

''இல்லை; உன் மனசுக்குள் என்னவோ இருக்கு. எதுவானாலும் சொன்னாத்தானே தெரியும்? சொல்லு'' என்று வற்புறுத்தினாள் அம்மா.

அதற்குமேல் கண்ணனால் பொறுக்க முடியவில்லை. ''எனக்கு ஒரு சின்னச் சந்தேகம். என் அம்மா யார்?''

அம்மா சிரித்தாள். ''நான்தான் உன் அம்மா. அதிலே என்ன சந்தேகம்?''

''அப்புறம் ஏன் அந்த லட்டை எனக்கும் கொடுக்காமல், அண்ணனை மட்டும் தின்னச் சொன்னே? நல்ல பிள்ளையா இருந்தாலும் நான் உன் பிள்ளையா இல்லாததால் தானே அப்படிச் சொன்னே?'' என்று கோபமாய்க் கேட்டான் கண்ணன்.

''நான் அப்படிச் சொன்னதற்குக் காரணம் இருக்கு, கண்ணா. நீ நல்லாப் படிக்கிறே. இன்னும் கொஞ்ச நாளிலே, நான் நினைக்கிறபடி, பெரிய டாக்டரா வந்துடுவே. காரும், பங்களாவுமா வாழ்வே. உன் வீட்டிலே காலை டிபனுக்குக் கோதுமை அல்வா செய்வாங்க; ராத்திரி டிபனுக்கு ரவா கேசரி கிண்டுவாங்க. ஆனா, முகுந்தன் படிக்கலை. அவன் எப்படிப் பெரிய வேலைக்குப் போக முடியும்? கூலி வேலைக்குத்தான் போவான். அவன் குடிசையிலே கஞ்சியும், ஊறுகாயும் தான் இருக்கும். அல்வாவும், லட்டும் அவனுக்கு எட்டாத பொருளாக இருக்கும். அதனாலேதான் இப்போதாவது தின்னட்டும்னு கொடுத்தேன்!'' என்றாள் அம்மா.

கண்ணன் அம்மாவைப் புரிந்து கொண்டான்.

அது மட்டுமல்ல; முகுந்தனும் தன் தவற்றைப் புரிந்து கொண்டு, மீண்டும் பள்ளியில் சேர்ந்துவிட்டான்!


மகுடி எதற்கு?

''ஏண்டா மகுடியைப் பிடுங்கிட்டுப் போறே?''

''ஒரு பாம்பு வாணம்கூடப் படம் எடுக்கமாட்டேங்குது. அதையெல்லாம் படம் எடுக்க வைக்கத்தான்''

-ஜெம்பு





பாரியின் திருப்பணி

தணிகை உலகநாதன்

பாலன் செங்கற்பட்டுக் கோகுலச் சிறுவர் சங்கத்தின் திலகம் போல விளங்கினான். அவன் செய்து வந்த 'பிழை திருத்தும் தொண்டு'க்கு உற்ற துணைவன் ஒருவன் கிடைத்தான். அவன்தான் பாரி. பாரி அழகாக எழுதுவதிலும் ஓவியம் வரைவதிலும் வல்லவன்.

பாலன் கடைக்காரர்களிடம் சென்று தவறான விளம்பரங்களைத் திருத்திக் கொள்ளுமாறு வேண்டிய போது, கடைக்காரர்கள் சிறுவனாக இருந்தாலும் அவன் சொல்வது சரிதானே, என்று ஒப்புக்கொண்டு அவன் சொன்னபடியே விளம்பரங்களைத் திருத்திக் கொண்டார்கள். ஆனால், வசதியில்லாத சில கடைக்காரர்கள் திருத்தம் செய்வதற்குச் செலவு ஆகுமே என்று தயங்கினார்கள்.

பாரி அந்த வகையில் பாலனுக்குத் துணையாக நின்றான். இலவசமாகவே விளம்பரங்களை நல்ல தமிழில் எழுதிக் கொடுக்க முன் வந்தான்.

ஓய்வு நேரங்களில் இருவரும் கடைத் தெருப் பக்கமாகச் சென்றார்கள்.


ஒருநாள் பால்கடைக்காரர் ஒருவரின் கடையில் மாட்டி இருந்த விளம்பரத்தைப் பார்த்தார்கள்.

கடைமுகப்பில், 'இங்கே **பசும் பாலும் எறுமைப்பாலும் விர்க்கப் படும்**' என்று விளம்பரம் வரையப் பட்டிருந்தது.

பாலனும், பாரியும் கடைக்காரரிடம் சென்று வணக்கம் செய்தார்கள்; பாரி, ''ஐயா! பசும்பாலும் எறுமைப்பாலும் விர்க்கப்படும் என்று எழுதியுள்ளீர்களே. **பசும்பால்** என்பதற்குப் பச்சை நிறமான பால் என்பது பொருள். உங்கள் பால் என்ன, பச்சை நிறமாகவா இருக்கிறது? எந்தப் பாலுமே வெள்ளை நிறமானது தானே? பசுமை+பால் = பசும்பால். பசுவினுடைய பால் என்பதற்குப் **பசுப்பால்** என்றே எழுதவேண்டும். இது பலருக்கும் தெரியாததால், இப்படி எழுதி வருகிறார்கள். நீங்களாவது சரியாகத் திருத்திக் கொண்டால், உங்களைப் பார்த்து மற்றவர்களும் திருத்திக் கொள்வார்கள். பால்காரர் சங்கத் தலைவராகிய நீங்கள் பலருக்கும் எடுத்துக் காட்டாக இருக்க வேண்டாமா? **விர்க்கப்படும்** என்பது **விற்கப்படும்** என்றே இருக்கவேண்டும். விற்பனை செய்யப்படும் என்பதுதான் விற்கப்படும் என்று எழுதப்படுகிறது. விர்க்கப்படும் என்பதற்குப் பொருளே இல்லை. **எறுமை** என்பது தவறு. **எருமை** என்றே எழுதவேண்டும். எருமைக்குப் பேசத் தெரிந்தால் இந்நேரம் தன் பெயரைத் தவறாக எழுதியதைப் பற்றி உங்களிடம் முறையிட்டிருக்கும். பாவம், அதற்குத்தான் பேசத் தெரியாதே!'' என்று சிரித்துக் கொண்டே சொன்னான்.

கடைக்காரர் சிறிதுநேரம் யோசித்தார். ''தம்பி! நீ சொல்வது சரிதான். ஆனால், விளம்பரப் பலகையைத் திருத்துவதற்கு இப்போது எனக்கு வசதி இல்லை. பிறகு பார்க்கிறேன்' என்றார்.

''பிறகு என்ன ஐயா! நான் இருக்கப் பயமேன்? விளம்பரத்தில்



உள்ள பசுவையும், கன்றையும் அழகிய ஓவியமாகத் தீட்டித் தருவேன். வண்ண எழுத்துக்களையும் இலவசமாகவே எழுதித் தருவேன். போதுமா?'' என்றான், பாரி.

''நல்லது தம்பி! இதோ, விளம்பரப் பலகையைக் கழற்றித் தருகிறேன். நீங்கள் வீட்டுக்கு எடுத்துச் சென்று தவறு இல்லாமல் எழுதிக் கொண்டு வாருங்கள்'' என்றார் கடைக்காரர்.

நண்பர் இருவரும் அந்த விளம்பரப் பலகையை எடுத்துச் சென்று மறு நாளே தவறு இல்லாமல் எழுதிக் கொண்டு வந்து கடைக்காரரிடம் சேர்த்தார்கள். கடைக்காரர் அவர்களுக்கு என்றும் மறவா நன்றி கூறினார்.

அடுத்து ஒருநாள் நண்பர் இருவரும் தெருவழியாகச் செல்லும் போது பிள்ளையார் கோயில் ஒன்றில் 'வர சித்தி **வினாயகர்** கோயில் என்று எழுதி இருப்பதைப் பார்த்தார்கள்; உடனே கோயில் அதிகாரியிடம் சென்றார்கள்.

கோயில் அதிகாரி அவர்களை அகம் குளிர — முகம் மலர வரவேற்றார். இருவரும் அவரைப் பார்த்து, ''ஐயா, நாம் வணங்கும் முழுமுதற் கடவுள் பிள்ளையார். அவரை **விநாயகர்** என்று குறிப்பிடுவதற்குப் பதிலாக **வினாயகர்** என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள்! வி + நாயகர் என்பதற்குத் 'தமக்கு மேல் தலைவர் இல்லாதவர்' என்பது பொருள். வினாயகர் என்பதற்குப் பொருளே இல்லை. விநாயகர் **என்னும் கடவுளின்** பெயரையே இப்படித் தவறாக எழுதுவது பாவமில்லையா?'' என்று கேட்டார்கள்.

''பாவமா? அப்படியானால் இப்போதே மாற்றி எழுதி விடலாமே!'' என்றார் கோயில் அதிகாரி.

''உங்களுக்குச் சிரமம் இல்லை; செலவும் இல்லை. விநாயகருக்காக இலவசமாக இந்தத் திருப்பணியைச் செய்ய இசைவு அளியுங்கள். நாங்களே செய்கின்றோம்'' என்றான், பாரி.

கோயில் அதிகாரி, அவர்களின் விருப்பத்துக்கு ஒப்புக் கொண்டார். பாரி பிழை திருத்தி எழுதினான். வினாயகர், விநாயகர் ஆனார். இருவரும் கோயில் அதிகாரியிடம் விடைபெற்றுச் சென்றார்கள்.

மற்றொருநாள் பாரியும், பாலனும் ஒரு மருந்துக் கடையில், 'இங்கே கக்குவான் இரும்பல்லுக்கு மருந்து கிடைக்கும்' என்று எழுதப்பட்டிருந்ததைப் பார்த்தார்கள்.

உடனே கடைக்காரரிடம் சென்றார்கள்; ''ஐயா, '**இரும் பல்**' என்றால் 'பெரிய பல்' என்பது பொருள். இரும் என்னும் சொல்லுக்குப் பெரிய என்பது பொருள். உங்கள் மருந்தைச் சாப்பிட்டால் பல் பெரிதாகி விடுமோ?'' என்று கேட்டான், பாலன்.

கடைக்காரர், ''என்ன தம்பி! நீ சொல்வது ஒன்றுமே புரியவில்லையே!'' என்றார்.

''உங்கள் விளம்பரத்தில் **இருமல்** என்பதற்குப் பதிலாக **இரும்பல்** என்று குறிப்பிட்டிருக்கிறீர்கள். இருமல் என்பது ஒரு நோய். 'இரும்பல்' என்பது எந்த நோயும் இல்லையே!'' என்றான் பாலன்.

மருந்துக் கடைக்காரருக்கு விளம்பரத்தில் உள்ள பிழை நன்றாகப் புரிந்தது. பாரியின் உதவியால் விளம்பரச் செய்தியை இருமலுக்கு என்று சரியாகத் திருத்திக் கொண்டார்.

மேலும் அவர்கள் விளம்பரங்களில் செய்த திருத்தங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

பிழை	திருத்தம்
மமுட்டி	மண்வெட்டி
லெச்சுமி நிலையம்	இலட்சுமி நிலையம்
கொடக்கூலி	குடிக்கூலி
புட்டு	பிட்டு
குருக்குத் தெரு	குறுக்குத் தெரு
வருவல்	வறுவல்
வத்தல்	வற்றல்
புண்ணாக்கு	பிண்ணாக்கு
சில்லரை	சில்லறை

வரவேற்பும் வணக்கமும்

புவனா நடராஜன்

''வணக்கம்! என்ன சார் நலமா?'' தன்னையும் அறியாமல் இயல்பாகவே கைகள் மேலே குவி கின்றன. உதட்டில் புன்னகை மலர்கின்றது. இது இந்திய பாணி!

''ஹல்லோ! ஹௌ ஆர் யூ?'' விரிந்த புன்னகையுடன் இருவர் கைகள் மேலும் கீழும் குலுங்குகின்றன. — இது ஐரோப்பிய பாணி.



இப்படி ஒவ்வொரு நாட்டுக்கும், ஒவ்வொரு வகையான நாகரிக மக்களுக்கும், ஒவ்வொரு வித மான மகிழ்ச்சி தெரிவிக்கும் பாணி உண்டு.

ஐரோப்பியர் ஆண்களுடன் கைகுலுக்கித் தம் மகிழ்ச்சியைத் தெரிவிக்கின்றனர். பெண்களைக் கண் டால் தலையில் அணிந்திருக்கும் தொப்பியை எடுத்துவிட்டுத் தலையைச் சற்றே தாழ்த்தி மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

ஆனால், அதையே சைனாவில் செய்தால் அவ மரியாதையாக நினைப்பர். சைனாவில் இருக்கும் போது தலையை நன்றாகத் தாழ்த்திவிட்டு, நமது கைகளை நாமே குலுக்கிக் கொள்ள வேண்டும்.



ஆனால், தென் சைனாவில் நண்பர்களைச் சந்திக்கும்போது, நமது மூக்கின் நுனியினால் மற்ற வரின் கன்னத்தை லேசாகத் தொடும் பழக்கம் இருந்து வருகிறது!

இது சற்று மாறி ஒருவர் மூக்கை மற் றொருவரின் மூக்கினால் தொட்டு மரியாதை, மகிழ்ச் சியைத் தெரிவிப்பது நியூஸிலாந்தில், மேயோரிஸ், எஸ்கிமோக்ஸ் குலத்தவரிடம் இருந்து வருகிறது. இதுவே பின்னர் மகிழ்ச்சியைத் தெரிவிக்க முத்தம் கொடுக்கும் பழக்கமாக வந்திருக்கலாம்.

இங்கிலாந்தில் அரச குலப் பெண்களிடமும், உயர்குலப் பெண்களிடமும் மரியாதை தெரிவிக்க ஒரு காலை மண்டியிட்டு, கீழே சற்றே அமர்ந்தாற் போலச் சாய்ந்து, கையைப் பிடித்து, பின்னங் கையில் லேசாக முத்தமிடுவது பழக்கமாக இருக் கிறது. ஆஸ்திரியாவிலும் பின்னங்கையில் லேசாக முத்தமிடுவதே சரியான மரியாதைக்கான அடை யாளம்.



சூடானில் கிராமத்துப் பக்கங்களில் கிராம வாசி தன் மரியாதையைத் தெரிவிக்க உங்கள் கன்னத்தில் எச்சில் துப்புவது போலப் பாவனை செய்து வரவேற்கிறார்.

கைகளைக் குலுக்கும் முன், கைகள் மீது எச்சில் துப்பி வரவேற்கும் பழக்கமும் இருக்கிறது. விஷயம் புரியாத ஐரோப்பியனை இப்படி வர வேற்றால் வம்புதான்!

ஆப்கானிஸ்தானத்திற்குப் போனால், அங் குள்ள 'பதான்' தனது வலது கையைத் தலையில்







கட்டியிருக்கும் முண்டாசு வரை கொண்டு போய் சல்யூட் அடிப்பது போல் செய்வான்.


ஆப்பிரிக்காவில் எத்தனை விதமான நாடுகளும், மக்கள் பிரிவுகளும் உண்டோ அத்தனை விதமான வரவேற்புக்கள், மரியாதைகள் இருக்கின்றன.

கானாவிலும், நைஜீரியாவிலும் விரல் நுனிகள் ஒன்றையொன்று தொட்டவாறே வாயருகில் கொண்டு போய் வரவேற்கிறார்கள். ஹௌஸாஸ் என்ற ஜாதியினர் வலதுகை முஷ்டியைக் காட்டி நம்மை வரவேற்கும்போது நமக்கு முகத்தில் பீதி படர்ந்தாலும், அவர்கள் நட்புடனேயே செய்கிறார்கள்.

மேற்கு ஆப்பிரிக்க ஹௌஸா பிரிவினர் கிராமப் புறங்களில், சந்திக்கும்போது கீழே நன்றாக மண்டியிட்டுத் தலையை எவ்வளவு தாழ்த்த முடியுமோ அத்தனை தாழ்த்தி வணங்கி, மரியாதை செலுத்துவர்.

முகம்மதியரின் ஆ ஸலாம் – ஓ – ஆலிகும் என்ற உற்சாகமான வரவேற்பும், கைகுவித்துப் பிரார்த்தனை செலுத்துவது போன்ற இந்துக்களின் வரவேற்பும் நாம் தினம், தினம் காண்பதே! தாய்லாந்தில் ஒருவர் மற்றொருவர் தலையைத் தட்டினால் அதைவிடப் பெரிய அவமரியாதை இருக்க முடியாது. அதற்காக ஆத்திரப்பட்டுக் கொலையும் செய்யத் தயங்க மாட்டார்கள்,

குழந்தைகளாகிய நீங்கள் பல மக்களின் பழக்க வழக்கங்களைத் தெரிந்து வைத்திருப்பது நல்லது தானே! நீங்கள் பெரியவர்களாகிப் பல விதமான மக்களையும் சந்திக்க நேர்ந்தால், அசம்பாவிதம் ஏற்படாமல் தடுக்கலாம் அல்லவா?





இரட்டை மாட்டு வண்டியில்,
ஏறி வந்த பெரியவர்,
இரவு நேரம் வந்ததால்,
இனியும் செல்லத் தயங்கினர்.

''வண்டி ஓட்டும் முனியனே,
மாட்டை அவிழ்த்துக் கட்டிடு.
இன்று இரவு நாமுமே
இங்கே தங்கிச் செல்லலாம்.

''திருடர் நமது மாட்டையே
திருட வருவார்; ஆதலால்
இரவு முழுதும் விழித்துநீ
இருக்க வேண்டும்'' என்றனர்.

வண்டி உடனே நின்றது.
மாட்டை அவிழ்த்து முனியனும்
முன்னே உள்ள நுகத்தடி
தன்னில் நன்கு கட்டினன்.

வண்டிக் குள்ளே பெரியவர்
வசமாய் நீட்டிப் படுத்தனர்.
முன்பு றத்தில் காவலாய்
முனியன் அமர்ந்து கொண்டனன்.

(இடையிடையே பெரியவர் கேட்க, முனியன் பதில் கூறுகிறான்.)

இரவு 11 மணி:

''முனியா, என்ன செய்கிறாய்?
விழித்துத் தானே இருக்கிறாய்?''

''இளநீ ருக்குள் கொண்டுபோய்
இனிக்கும் நீரை வைத்தவர்
உலகில் எவரோ என்றுதான்
யோசனைதான் செய்கிறேன்.''

2 மணி:

''முனியா என்ன செய்கிறாய்?
விழித்துத் தானே இருக்கிறாய்?''

''கடலில் உப்பைக் கொட்டியே
கலக்கி விட்ட மனிதரை
உடனே கண்டு பிடித்திட
யோசனைதான் செய்கிறேன்.''

4 மணி:

''முனியா, என்ன செய்கிறாய்?
விழித்துத் தானே இருக்கிறாய்?''

''வானில் ஏறி அவ்விடம்
வைரம் போல மின்னிடும்
மீன்கள் வைத்த மனிதரை
விரைந்து காண நினைக்கிறேன்.''

5 மணி:

''முனியா, என்ன செய்கிறாய்?
விழித்துத் தானே இருக்கிறாய்?''

''வண்டி நுனியில் கட்டிநான்
வைத்த மாடு இரண்டையும்
கொண்டு சென்றார் யாரென
எண்ணிக் கொண்டே இருக்கிறேன்.''

பழைய கதை; புதிய பாடல்

பலகாரம்



பஞ்சு போல முத்துச் சேர்த்து
பாங்காய்ப் பிடிச்ச லட்டு.
கொஞ்சம் வாயில் போட்டால் இன்னும்
கொஞ்சம் கேட்பான் கிட்டு.

கண்டக் காய்ச்சிப் பாலில் செய்த
சுவைக்கும் பால் திரட்டு.
விண்டு போட்டால் ஜாங்கி ரியில்
விழுமே ஜீரா சொட்டு.

தேங்கா யோடு சீனி சேர்த்த
தித்திப் புமே பர்ப்பி.
பாங்காய்த் துண்டு போட்டு வைத்தால்
பாமா ஒருகை பார்ப்பாள்.

அரிசி மாவும் பாகும் சேர்ந்து
அதி ரசமாய்ப் போச்சு.
பொரித்த பயிற்றின் அரைத்த மாவில்
பொரி விளங்காய் ஆச்சு!

வேக வைத்த அரிசி மாவில்
வெந்து வந்தது பிட்டு.
பாகில் கலந்த கடலை மாவில்
மைசூர்ப் பாகு எட்டு!

கோவா வோடு மைதா மாவும்
குலோப் ஜாமுனு மாச்சு!
நாவால் சொல்லிப் பார்க்கும் போதே
நல்ல ருசியு மாச்சு.

வட்ட வட்ட முறுக்கைப் பார்த்தால்
பிட்டுத் தின்னத் தோன்றும்.
தட்டை, சீடை கூட இன்னும்
தாரா ளமாய்த் தின்னும்.

எத்தனை தான் இனிப்பி ருந்தால்
இனிக்கும் நேரம் கொஞ்சம்.
அத்தனைக்கும் மேலி னிக்கும்
அருமை எங்கள் தமிழாம்!

— மதிஒளி —





தங்க மாம்பழம்
கதை: ராஜி
சித்திரக் கதை வடிவம்: ஆனந்தி
படம்: வினு
பல மந்திர வாதிகள் உதவியுடன் மாயாமகேந்திர புரத்தை கொடுங் கோலன் வீரசிம்மன் தன் இஷ்டப் படியெல்லாம் ஆண்டு வந்தான்.
தலை நகரிலிருந்து பல மைல் தூரத்தில் வயற்காடு என்ற ஏகாந்தப் பகுதியில் ஒரு பெரிய பாழடைந்த பங்களா. அதில் ஒரு மந்திரவாதிக் கிழவி வசித்தாள்.
ஒரு நாள் கிழவி வெளியே போயிருக்கும் போது இரு திருடர்கள் அவள் பங்களாவுக்குள் நுழைந்து...
கிழவி புதையல் காப்பதாகக் கேள்வி... தேடித் தேடிப் பார்த்தும் ஒன்றுமே காணோமே!
இந்த அறையைத் திறந்து பார்ப்போம்.
சே! இந்த ஒரு பெட்டி தான் இருக்கிறது. இதற்குள் ஒரு மாம்பழம்.. அதுவும் நிஜமில்லை பொம்மை..
சே! கஷ்டப்பட்டு கன்னம் வைத்தது எல்லாம் வீண். வா போகலாம்.
திருடர் சென்றதும் ஒரு திரை மறைவிலிருந்த உமாவும் பிரபாகரனும் வெளிப்பட்டு....
திருடர்கள் நம்மைக் கவனிக்கவில்லை நல்லவேளை அண்ணா!
நம் அதிர்ஷ்டம் திருடர்கள் கதவைத் திறந்து போட்டுப் போய் விட்டார்கள்!


மந்திரவாதிக் கிழவியிட மிருந்து தப்ப இதைவிட வேறு நல்ல சந்தர்ப்பம் கிடைக்காது... வா, ஓடி விடலாம்!
எதற்கும் இந்தத் தங்க மாம் பழத்தை எடுத்துக் கொண்டு வருகிறேன்!
சீக்கிரம்! கிழவி திரும்பி விட்டால் நம்மை மறுபடி சிறைப்படுத்தி விடுவாள்.
வெகு தூரம் ஓடிக் களைத்த போது குதிரைக் குளம்படி சத்தம் தொடர்வது கேட்க ஒளிந்து கொள்கிறார்கள்.
வீரப்பா! எவ்வளவு தேடியும் அந்தப் பையனையும் பெண்ணையும் காண வில்லையே...?
மகாராஜாவுக்குக் கிழவி மேல் ரொம்பக் கோபம். தப்பிக்க விட்டு விட்டாளே... அந்த அசடு... சரி நாம் திரும்புவோம்...
வீரப்பனும் மற்றொருவனும் போன பிறகு...
அண்ணா! நமக்கும் மகா ராஜாவுக்கும் என்ன சம்பந்தம்? அவருடைய ஆட்கள் நம்மை ஏன் தேடுகிறார்கள்?
தெரியவில்லையே... கிழவி நம்மை எதற்காகச் சிறை வைத்திருந்தாள் என்றும் தான் புரியவில்லை...
சற்று தூரத்தில்...
உமா! அதோ பார்! ஒரு வெள்ளைக் குதிரை! அதில் ஏறிப் போய் விடலாம்!
ஆனால் அதிசயம்! குதிரை மீது ஏறியதும் அது உயரே பறக்க உமா சரிந்து நழுவினாள்...
உமா! கெட்டியாகப் பிடித்துக் கொள் விட்டு விடாதே! தைரியமாய் இரு!


மந்திரக் கிழவி பங்களாவில்.....
கிழவி! மகாராஜா உன்னைக் கடுமையாய்த் தண்டித்து விடப் போகிறார்...
கவலைப்படாதே வீரப்பா! பறக்கும் குதிரையை அனுப்பியிருக்கேன்... ஹி ஹி ஹி...
அதன் மேல் அவர்கள் ஏறுவார்கள் என்பது என்ன நிச்சயம்?
ஏறியாச்சு... இதோ பார்!
ஐயோ! அந்தப் பெண் விழுந்து செத்து விட்டால்..?
போகட்டுமே... தங்க மாம்பழம் திரும்பக் கிடைச்சுடுமே..!
கிழவி! அவர்கள் இறந்தால் நம் மன்னர் கதி என்ன ஆகும் தெரியாதா உனக்கு... தங்க மாம் பழமும் வேண்டும்; அவர்களும் உயிருடன் திரும்ப வேண்டும்... இல்லை யென்றால்... உன்னைத் தொலைத்து விடுவேன்!
இதற்கிடையில்... பிரபாகரன் குதிரையின் சேணத்தில் ஒரு விசையை யதேச்சையாய்த் திருக... குதிரை மெல்லக் கீழே இறங்கியது...
உமா! பூமிக் கருகே வரும் போது குதித்து சற்று தூரம் ஓடு!
நீயும் குதித்து விடு அண்ணா!


அவர்கள் குதித்ததும் குதிரை மாயமாய் மறைந்து போனது... ஆனால் கிழவியின் மாளிகையை விட்டு வெளியேறி தலைநகர் சென்ற வீரப்பனும் அவன் உதவியாளனும் வழியில் அவர்களைப் பார்த்து விட...
நில் அங்கே!
காட்டு விலங்குகளை அடைக்கும் கூண்டில் குழந்தைகளை அடைத்து விட்டு வீரப்பன் தன் சகாவுடன் மன்னனிடம் விரைந்தான்.
அகப்பட்டு விட்டார்களா! பேஷ்! அவர்கள் உயிருக்கு ஆபத்தில்லையே...? மறுபடி கிழவியிடமே அவர்களை ஒப்படைத்து விடு!
சித்தம், பிரபோ!
வீரப்பன் போனதும் அரசனைக் காண ராஜகுரு வித்யாசாகர் வந்தார்.
வீரசிம்மா! என் எச்சரிக்கை நினைவிருக்கிறதா? அந்தக் குழந்தைகளுக்கு ஆபத்து நேர்ந்தால் உன் சிரம் வெடித்து விடும் என்று விதித்திருக்கிறது!
உங்களுக்கு அந்த கவலை வேண்டாம்! ஹா! ஹா! ஹா!
இதற்கிடையில்...
அண்ணா! இதிலிருந்து எப்படித் தப்புவது? நம்மை ஏன் கஷ்டப்படுத்துகிறார்கள்?
எனக்கும் புரியவில்லை உமா!
அப்போது தோன்றினார் ஒரு துறவி...
குழந்தைகளே! பயப்பட வேண்டாம்! நான் உதவுகிறேன்... ஓம்! ஹ்ரீம்! வஷட்!.. ஆ மந்திரக் காளி!
அண்ணா! என்ன அதிசயம் கூண்டுக் கம்பிகள் பட்டாம் களாகி விட்டன!


சீக்கிரம்! இரண்டு கம்பிகளைக் கடித்துத் தின்று விட்டுத் தப்புங்கள்!
சுவாமி தாங்கள் யார்?
சமயம் வரும் போது சொல்கிறேன்.
கூண்டை விட்டு வெளியேறியதும்...
அண்ணா! துறவி என்ன ஆனார்?
மாயமாய் மறைந்து விட்டாரே! ஒரு கூஜாவை விட்டுச் சென்றிருக்கிறார். இதை எடுத்துக் கொண்டு வீரப்பன் திரும்பி வருமுன் ஓடி விடுவோம்!
உமாவும் பிரபாகரும் தப்பி விட்டதைக் கண்ட வீரப்பன் பயத்துடன் அரசனுக்குத் தகவல் கூற...
முட்டாளே! மறுபடி ஏமாந்து விட்டாயே!
அவர்களைப் பிடிக்க முடியாவிட்டாலும் என்ன தந்திரமாவது செய்து அந்தத் தங்க மாம்பழத்தையாவது மீட்டு வரவேண்டும்!
உத்தரவு, அரசே!
தப்பியோடிய பிரபாகரனும் உமாவும் ஆற்றைக் கடக்க ஒரு பரிசல் ஓட்டி உதவினான். நட்டாற்றில்...
தம்பி! உன்னிடம் ஒரு தங்க மாம்பழம் இருக்கிறதாமே கொடுத்து விடு! இல்லாவிட்டால் இந்தப் பெண்ணை ஆற்று வெள்ளத்தில் தள்ளி விடுவேன்..!
ஐயோ, அண்ணா!
பிரபாகரன் பையிலிருந்து மாம்பழத்தை எடுத்து ஆற்றிலே வீசி விட...
படவா பயலே! மூழ்கிக் குளித்தாவது அந்தத் தங்க மாம்பழத்தை அடையாமல் விடமாட்டேன்!


பரிசலை பிரபாகரன் செலுத்த கரை சேர்ந்து மறுபடி ஓட்டம் பிடித்தனர்.
தங்க மாம்பழம் போய் விட்டதே அண்ணா!
இல்லை உமா! அது பசிக்குப் புசிக்க நான் முன்னெச்சரிக்கையாகக் கொண்டு வந்திருந்த நிஜ மாம்பழம்! இதோ இருக்கு தங்க மாம்பழம்!
இதற்கிடையில்... வயற்காடு பங்களாவில் மந்திரக் கிழவியும் வீரப்பனும் சந்தித்து...
நம் தந்திரத் துக்கு மாற்றுத் தந்திரம் செய்து தப்பி விட்டான் பிரபாகரன். பரிசல் காரன் கொண்டு வந்து தந்தது தங்க மாம் பழம் அல்ல...
அவர்கள் கல்லறைத் தீவு நோக்கித்தான் போகிறார்கள். எப்படியாவது தடுத்து நிறுத்தி விடுவேன்...
பசியும் களைப்பும் உமாவை வாட்ட...
அண்ணா! ரொம்ப தாகமாய் இருக்கிறது.
உமா, அதோ ஒரு கிணறும். கூஜாவைக் கொடு. கயிறு கட்டி தண்ணீர் மொள்கிறேன்...
பிரபாகரன் தண்ணீர் சேந்தி எடுத்த மறுகணத்தில்...
அண்ணா! குதிரை வீரர்கள்!
அதோ! அந்த வாண்டுகள்! விடாதே! பிடி!
உமா பயத்தில் மயங்கி விட பாய்ந்து வந்த வீரர்கள் பிரபாகரைப் பிடித்துக் கட்டிப் போட்டு விட்டனர்.
இவளைப் பற்றிக் கவலை இல்லை. அவனை இறுக்கி கட்டு! பொல்லாத பயல்! மறுபடி தப்பிக்கப் பார்ப்பான்!


பயணக் களைப்பு தீர ஓய்வெடுத்தனர் வீரர்கள்.
அண்ணே! பசி பிராணன் போகுது. வீட்டுக்காரி தோசை சுட்டுத் தந்தாள். சாப்பிட்டு விட்டு இவர்களை இழுத்துக் கொண்டு கிளம்பலாம்.
சரி, கூஜா நிறைய நமக்குத் தயாரா தண்ணீர் வேறு சேர்த்து வைச்சிருக்கான் இந்தப் பையன்.
தோசைகள் தின்றதும் தாகம் எடுக்கவே இருவரும் தண்ணீர் குடித்தார்கள். குடித்து முடித்ததும் ஒருவன் முதலில் காகத்தைப் பார்த்தான்; இன்னொருவன் குதிரையைப் பார்த்தான்...
ஹி ஹி ஹி... நான் ஒரு குதிரை.
கா, கா, கா, கா!
உமா கண் விழித்தாள்...
உமா! தப்பினோம்! அந்தக் கிணற்று நீர் மந்திர ஜலம். என் கட்டுக்களை அவிழ்த்து விடு!
அண்ணா! இவர்கள் குதிரைகளிலேயே ஏறிப் பறந்து விடலாம்!
மிட்டாயாக உருமாறிய கூண்டிலிருந்து சில பகுதிகளை ஒடித்துக் கைக்குட்டையில் கட்டி எடுத்து வந்திருந்தான் பிரபாகரன். அதையும் அங்கங்கே சிலர் பரிதாபப்பட்டுத் தந்த உணவையும் காட்டு வழியே செல்கையில் கனிகளையும் உண்டு ஏழெட்டு நாள் நெடுந்தொலைவு பயணப் பட்டனர். ஒரு நாள்...
இது பெரிய நகரமாய் இருக்கிறது...
கோபுர தரிசனமாகிறது. இந்தக் குளத்தின் படித்துறையில் இளைப்பாறலாம்...




அப்போது அங்கே தோன்றினார் துறவி...
அடேடே! எங்களை விலங்குக் கூண்டிலிருந்து விடுவித்தவரல்லவா நீங்கள்!
மாயமாய் மறைந்து மறுபடி தோன்றுகிறீர்கள்!
எல்லாம் கடவுள் தந்த சக்தி. அதை நல்லன வற்றுக்கே பயன் படுத்துவேன்... சாப்பிடுவீர்களா? இதோ பழங்கள்...
பிரபாகரனும் உமாவும் பசியாற உண்ட படியே...
சுவாமி உங்களை என்றும் மறக்க மாட்டோம்... திடீர் திடீரென்று தோன்றி உதவு கிறீர்கள்.
இன்னொரு பெருதவி செய்ய வேணுமே...
என்ன?
கல்லறைத் தீவுக்கு வழி கூற வேண்டும்...
ஐயோ! அங்கு போகாதீர்கள்! மகா பயங்கர இடம். உயிருக்கே ஆபத்து!
துறவியிடம் ஏற்பட்ட நம்பிக் கையில் பிரபாகரன் தங்கள் கதை முழுவதும் கூறினான்...
கிழவியின் பேச்சை ஒருநாள் ஒட்டுக் கேட்டதிலிருந்து இந்தத் தங்க மாம்பழத்துக்கும் கல்லறைத் தீவுக்கும் ஏதோ தொடர்பு இருப்பதாக எண்ணுகிறேன்..
கிழவி என்ன சொல்லிக் கொண்டிருந்தாள் வீரப்பனிடம்?...


... இன்னொரு தடவை சொல்லு!
கல்லறைத் தீவில் உள்ள நாயின் கழுத்தில் இருக்கும் சாவியால்தான் தங்க மாம்பழத்தைத் திறக்க முடியும்! அதனுள் இருக்கும் கண்ணாடிக் கூடுகளால் தான் அவர்களை உயிர் பெறச் செய்ய முடியும்! என்றாள்... சுவாமி அவள் குறிப்பிட்ட அந்த 'அவர்கள்' யார்?
சமயம் வரும்போது தானே தெரிகிறது... எங்கே... தங்க மாம் பழத்தைக் காட்டு... ஆ! இதில் ஒரு சாவித் துவாரம் இருக்கிறதே...
துறவி கல்லறைத் தீவு பற்றியும் அதிலுள்ள பயங்கர நாய் பற்றியும் சொன்னார்...
அதற்கு உணவும் தண்ணீரும் தேவையில்லை! அதன் மூச்சே விஷக் காற்று. அதன் கண்களைப் பார்ப்பவர் கல்லாகிப் போவார்கள்...
எனக்குப் பயமில்லை. வெற்றி பெறுவேன். அல்லது கல்லாகிப் போகிறேன்...
உன் வீரத்தை மெச்சுகிறேன். யாரோ முன் பின் தெரியாத "அவர்களை"க் காக்க இத்தனை பாடு படுகிறாயே...!



துறவி வழி கூறியதோடு மந்திர சக்தி மிக்கதொரு வில்லும் அம்பும் பெறும் உபாயமும் கூறினார். அதைக் கேட்டுக் கொண்டு பயணம் தொடர்ந்தனர்....
அண்ணா! துறவி குறிப்பிட்ட ஏரிக்கரையை அடைந்து விட்டோம்... அதோ துறவி சொன்னபடியே ஒரு குடிசை!
குடிசையிலிருந்து வெளிப்பட்டார் ஒரு தவ முனிவர்.
சுவாமி! கடவுள் தந்த சக்தியை நல்லனவற்றுக்கே பயன் படுத்த வேண்டும் என்று நம்பும் ஒரு சன்னியாசி உங்களிடம் எங்களை அனுப்பி வைத்தார்.
ஓ! அவரா! அவருக்காக நான் எதுவும் செய்யத் தயார்!
துறவி கூறியிருந்தபடியே இந்த முனிவர் வில்லும் அம்பும் பரிசளித்தார்.
குங்குமம் தடவித் தருகிறேன். ஏற்றுக் கொள்! கிழக்குத் திசையில் செல்! மன்னன் பீமவர்மன் வில் வித்தைப் போட்டி நடத்துகிறான். அதில் கலந்து கொள்.
பல நாள் பயணத்துக்குப் பிறகு பீம வர்மன் நாட்டை அடைந்தனர்.
மன்னவா! இந்தச் சிறுவன் அயல் நாட்டினன். வில் வித்தைப் போட்டியில் கலந்து கொள்வேன் என்று அடம் பிடிக்கிறான்.
என்னது... இந்த வாண்டுப் பயலா? ஹ ஹ ஹா!
என் உருவத்தைக் கொண்டு என் திறமையைக் கணிக்காதீர்கள். வாய்ப்புக் கொடுங்கள். ஆற்றலைக் காட்டுகிறேன்.
நன்றாகப் பேசுகிறான். அதிதி மாளிகைக்கு அழைத்துப் போ. போட்டி இரு தினங்களில் தொடங்கும்.


இதற்கிடையில் வில் வித்தைப் போட்டி பற்றி மந்திரக் கண்ணாடி உருண்டையில் பார்த்துத் தெரிந்து கொண்டாள் வயற்காட்டு மாயக் கிழவி. அவள்..
... வீரசிம்மனிடம் விஷயத்தைக் கூற அவள் பிரபாகரனையும் உமாவையும் கைப்பற்ற நல்லதொரு உபாயத்துடன் தானே புறப்பட்டாள்...
பீமவர்மன் நாட்டுக்கு வந்து சேர்ந்தான் வீரசிம்மன்.
வீரசிம்மரே வருக! வில்லாதி வில்லரல்லவா நீர்?
பீமவர்மரே வில் வித்தைப் போட்டியில் கலந்து கொள்ளவே வந்திருக்கிறேன்!
சந்தோஷம்.
அச்சமயம் பிரபாகரனும் உமாவும் அரசவையில் இருக்கவே வீரசிம்மன் வஞ்சனையாக...
ஒரு நிபந்தனை பீமவர்மரே! நான் வென்றால் இதோ இந்தப் பிரபாகரனையும் உமாவையும் எனக்குப் பரிசளிக்க வேண்டும்.
பீமவர்மன் தயக்கத்துடன் பிரபாகரனைப் பார்க்க....
நிபந்தனையை ஏற்கிறேன் பீமவர்மரே! ஆனால் நான் வென்றால் கல்லறைத் தீவுக்குப் போக நீங்கள் எனக்கு உதவ வேண்டும்... சம்மதமா?
அப்படியே ஆகட்டும்!
வெகு தூரத்தில் ஒரு சவுக்குக் கம்பை செங்குத்தாக நட்டு அதன் மீது ஒரு சுண்டைக்காய் வைக்கப்பட்டுள்ளது.
காயை வீழ்த்தியவர் வென்றவராவார்
இது என்ன பிரமாதம். என் போன்ற வில்லாதி வில்லனுக்கு.


கூட்டத்தினரிடையே இருந்த துறவி கையை உயர்த்தி மந்திரம் ஜபிக்கவும் வீரசிம்மன் எய்த அம்பு வளைந்து வளைந்து சென்று...
பிரபாகரன் எய்த அம்பு சண்டைக்காயை அடித்து வீழ்த்தியது. ஒரே கோலாகலம்..
பிரபாகரன் வாழ்க!
ஆஹா!
அபாரம்!
பீமவர்மன் பிரபாகரனை பாராட்டி தன் வீரவாளைப் பரிசளித்தான்.... வீரசிம்மன் தலைகுனிவுடன் நாடு திரும்பினான்.
நிபந்தனைப்படி கல்லறைத் தீவுக்குப் போக பிரபாகரன் - உமாவுக்கு உதவினான் பீமவர்மன். பரிவாரங்களுடன் அனுப்பி வைத்தான். பல காத மலைகளைக் கடந்து...
..பாதை முடிவில் ஒரு பெரிய ஏரி. அதன் மத்தியில் ஒரு தீவு. அதில் ஒரு மாளிகை.
பிரபாகரா! அதோ கல்லறைத் தீவு. இதற்குமேல் நாங்கள் உங்களுடன் வர பயப்படுகிறோம். விடை கொடு!
போய் வாருங்கள்.
பரிவாரங்கள் திரும்பிப் போனதும்...
கரையிலிருந்த ஒரு படகிலேறினர். மனம் திக் திக் என்று அடித்துக் கொள்ள துடுப்புப் போட்டான் பிரபாகர்....
அண்ணா! இங்குமங்குமாக கற்சிலைகள் இருப்பதைக் கவனித்தாயா?



ஆமாம். ஆனால் சிலைகள் அணிந்துள்ள துணிமணி நிஜமாயிருக்கிறது. துறவி குறிப்பிட்டாரே நினைவிருக்கிறதா?
நாயின் கண்களைச் சந்தித்து கல்லாய்ச் சமைந்தவர்களாய் இருக்க வேண்டும் இவர்கள்.
திடீரென்று உமா அலறினாள்...
ஐயோ! அண்ணா என் முகம் ஏன் இப்படி விகாரமாகி விட்டது?
உன் முகம் சரியாக இருக்கிறது உமா! நிலைக்கண்ணாடி தான் கோணல்! பயமுறுத்தவே வைக்கப்பட்டுள்ளது.
அக்கரை சேர்ந்ததும்...
உமா! என்னவானாலும் கண் கட்டை அவிழ்க்காதே; எதையும் பார்க்காதே! என் சட்டை முனையைப் பிடித்துக் கொண்டு வா. விட்டு விடாதே!
ஆகட்டும் அண்ணா.
மாளிகையினுள்ளே....
உமா! தீப்பிழம்புகளுக்கு மேலாகக் குறுகிய பாலத்தின் மீது நடக்கிறோம்... ஜாக்கிரதை!
சரி அண்ணா!.. படகிலிருந்து நிலைக்கண்ணாடியைக் கொண்டு வந்திருக்கிறேன். கோணல் கண்ணாடி என்றாவது சமயத்துக்கு உதவும்.


ஆ! உன் யோசனை எனக்குப் புரிகிறது..
ஊ ஊ ஊ
அன்னை நாயின் ஊளைச் சத்தம்.
அப்பாடா! அனல் குழியைக் கடந்து விட்டோம்.
லொள் லொள்.. கிர்.. கிர்... லொள்!
சரேலென்று திரும்பி வாள் 'வீசும் போதே நிலைக் கண்ணாடியைக் கேடயமாக்கிக் கொண்டான் பிரபாகரன்.
டணங்
டணங்
உமாவின் கண் கட்டை அவிழ்த்தான் பிரபாகர்.
உமா! உன் யோசனை பிரமாதம். நாய் நிலைக் கண்ணாடியில் தன்னைத் தானே பார்த்துக் கொண்டு கல்லாகி விட்டதால் பிழைத்தோம். வாள் வீசி அதை வென்றிருக்கவே முடியாது!


நாயின் கழுத்தில் சங்கிலியில் கட்டித் தொங்கிய சாவியையும் பையிலிருந்து தங்க மாம்பழத்தையும் எடுத்து...
மாம்பழத்தின் சாவித்துவாரத்துக்கு இந்த சாவி பொருந்துகிறதா பார்ப்போம்.
அண்ணா! தங்க மாம்பழத்தின் மர்மம் தெரிந்து விடும்.
...திறக்க உள்ளே... இரட்டை மாம் பழ வடிவில் இரு கண்ணாடிப் பெட்டிகள்... மேலும் ஒரு கடிதம்...
வெள்ளைப் பெட்டியில் அரசர் ஆனந்த கீர்த்தரின் உயிர். நீலப்பெட்டியில் ராணி சியாமளா தேவியின் உயிர். கல்லறைகளைத் திறந்து....
கடிதத்தில் கண்டபடி அரசர், ராணி ஆகியோர் கல்லறைகளைத் திறந்து வெள்ளை, நீலப் பெட்டிகளை அரசர், ராணி ஆகியோர் மூக்கருகே வைத்துத் திறந்ததும்.. ....
அரசனும் அரசியும் தூக்கத்திலிருந்து எழுவது போல் உயிர் பெற்றனர்.
குழந்தைகளே. எங்களைக் காப்பாற்றினீர்கள்! உங்களுக்கு எப்படி நன்றி தெரிவிப்போம்!
கல்லறைத் தீவை விட்டு வெளியேறியதும் ஏரிக்கரையில் காத்திருந்தார் குலகுரு.
அட, வித்யாசாகரரா?
ஆம் மன்னவா! இவ்விருவரும் உங்கள் குழந்தைகள்தான்!


பாசத்துடன் அணைத்துக் கொண்டனர் மன்னரும் அரசியும்
அடையாளம் தெரியாதபடி வளர்ந்து விட்டீர்கள்!
பத்து வருஷங்கள் ஓடிச் சென்று விட்டனவே!
அரசர் ஆனந்ததீர்த்தருக்கு குலகுரு வித்யாசாகரர் நடந்ததை எல்லாம் கூறினார்.
உங்கள் சிற்றப்பன் வீரசிம்மன் பெயர்காது மாயக்கிழவி உதவியோடு உங்களைக் கல்லறைத் தீவில் அடைத்ததுடன் குழந்தைகளையும் அவனிடமே சிறை வைத்திருந்தான். குழந்தைகள் உயிருக்கு ஆபத்து நேர்ந்தால் அவன் தலை வெடித்து விடும் என்று பயமுறுத்தி வந்தேன். குழந்தைகள் மாயக்கிழவியிடமிருந்து தப்பிய பிறகு இவர்கள் வீரத்துக்கு என்னிடமிருந்த மந்திர சக்தியால் அவ்வப்போது துணை செய்து வந்தேன்...
அப்பா! வீரசிம்மனை வெல்வேன்!
தர்மமே வெல்லும்.
வீரப்பனையும் மாயக் கிழவியையும் சிறைப் படுத்துவோம்.
உன் வீரத்துக்குப் பரிசாக உனக்கு இளவரசுப் பட்டம் கட்டுகிறேன்!

காட்டுமிராண்டி



வி.ர.வசந்தன்

ஒரு விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டு, ஊர் திரும்புவதற்காக அந்த விரைவுப் பேருந்து நிலையத்தை அடைந்தனர் இரத்னாகரனும், கிரியும். வெளியே காலியாக இருந்த ஓர் இருக்கையில் சென்று அமர்ந்தார்கள். அவர்கள் ஊர் செல்ல வேண்டிய பஸ் வருவதற்கு இன்னும் ஒரு மணி நேரமிருந்தது. இரத்னாகரன் தன் பெட்டியைத் தனக்கு அருகில் இருக்கையின் மீது வைத்திருந்தான். நண்பர்கள் இருவரும் பேசிச் சிரித்துக் கொண்டிருந்தார்கள்.

அப்போது அங்கு வந்து சேர்ந்தான் அந்தச் சிறுவன். ஒழுங்காக வாராத தலை, எண்ணெயைப் பார்த்து ஒரு வாரமாகியிருக்கும் போலிருந்தது. அழுக்காக ஒரு கால் சட்டையும், பல இடங்களில் கிழிந்து போன ஒரு பழைய மேல்சட்டையும் அவன் அணிந்திருந்தான். கையில் ஓர் அழுக்குப்பை. அதற்குள் என்னென்னவோ பழைய துணிகளைத் திணித்து வைத்திருந்தான். அவனைப் பார்த்தால் வெகுதூரம் நடந்து, களைத்து வந்திருப்பவனைப் போலிருந்தது. உடம்பெல்லாம் வியர்வை. இவர்களைப் பார்த்து அவன் விழித்தவாறு சற்று ஓரமாக ஒதுங்கி நின்றான்.

இரத்னாகரனும் கிரியும் அவனைச் சட்டை செய்யாமல் தங்கள் உரையாடலைத் தொடர்ந்தார்கள்.

சற்று நேரம் அமைதியாக நின்று கொண்டிருந்த அந்தச் சிறுவன், அவர்களைப் பார்த்து, ''இந்தப் பெட்டியை எடுத்துக் கீழே வச்சிட்டு, கொஞ்சம் தள்ளி உக்காருங்க. ஒரே களைப்பா இருக்கு'' என்றான்.

நண்பர்கள் இருவரும் அவனைத் திரும்பிப் பார்த்தார்கள். அவன் பரிதாபமாக இவர்களைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

இரத்னாகரன் கிரியின் காதில் மெதுவாக, ''அவன் முழிக்கிற முழியைப் பாரு, சரியான திருட்டுப்பயல் போலிருக்கிறது... பஸ் ஸ்டாண்டுல இப்படித்தான் சுத்திக்கிட்டு இருப்பானுக. கொஞ்சம் நாம அசந்தாப் பெட்டியைத் தூக்கிட்டுப் போயிடுவானுக'' என்றான்.

பின், பெட்டியை எடுத்துக் கிரியின் பக்கமாக நகர்த்தி வைத்துவிட்டு மிகவும் நன்றாக ஒதுங்கிக் கொண்டான். அவன் பக்கமாக உட்காரவே இரத்னாகரனுக்குப் பிடிக்கவில்லை. அந்தச் சிறுவன் ஒரு ஓரமாக ஒண்டிக் கொண்டு அமர்ந்தான்.

கிரி அவனிடம், ''நீ எங்கிருந்து வருகிறாய்? எங்கே உனக்குப் போக வேண்டும்?'' என்று கேட்டான்.

''எனக்குச் சொந்த ஊரு தஞ்சாவூருக்குப் பக்கத்துல ஒரு கிராமம். இங்கே கட்டட வேலை செய்துக்கிட்டு இருந்தேன். வேலை முடிஞ்சு போச்சு, வேற வேலையும் கிடைக்கல... அதுதான் சொந்த ஊரைப் பாத்துப் போறேன். பொழுதோட தஞ்சாவூர் போய்ச் சேர்ந்துட்டேன்னா டவுன் பஸ் புடிச்சு இருட்டறதுக்குள்ளே வீடு போய்ச் சேர்ந்துடுவேன்'' என்றான் அவன்.

இரத்னாகரன் கிரியின் காதில், ''அவனிடம் என்ன பேச்சு?'' என்றான் சிடுசிடுப்புடன்.

சற்றுநேரம் கழிந்ததும், நண்பர்கள் இருவரும் பயணத்தின் போது சாப்பிட ஏதாவது பழங்கள் வாங்கிவரலாம் என்று எழுந்தார்கள்.

அவர்கள் எழுந்ததுதான் தாமதம்; அந்தச் சிறுவன் இருக்கையில் முழுவதுமாக நீட்டிப் படுத்து விட்டான். பாவம், எவ்வளவு தூரம் நடந்து வந்தானோ? என்ன களைப்போ?

அதைப் பார்த்ததும் இரத்னாகரன் ஒருவித வெறுப்புடன், ''சரியான காட்டுமிராண்டிப் பயல்'' என்று முணுமுணுத்தான்.

''அப்படிச் சொல்லாதே இரத்னாகரா. அவனைப் பார், மிகவும் களைத்துப் போய் இருக்கிறான். யாரையும் தோற்றத்தை வைத்து நாம் மதிப்பிடக் கூடாதல்லவா?'' என்றான் கிரி.

''உனக்குத் தெரியாது. இதுபோல் தான் பார்க்கப் பரிதாபமாக அலைந்து கொண்டிருப்பான்கள் இந்தத் திருட்டு ராஸ்கல்கள். போலீஸில் பிடித்து ஒப்படைக்க வேண்டும். அவனைப் பார் தூங்குவது போலப் பாவனை செய்து கொண்டு, நம்மைத்தான் கவனிக்கிறான்'' என்று உறுமினான் இரத்னாகரன்.

கிரிக்கு உண்மையிலேயே அந்தச் சிறுவனைப் பார்க்கப் பரிதாபமாய் இருந்தது. மேற்கொண்டு அவன் எதுவும் பேசவில்லை.

அவர்கள் பழம் வாங்கப் போன நேரத்தில் பஸ் வந்து விட்டது. அதைத் தொடர்ந்து ஒலிபெருக்கியில் அறிவிப்பு கேட்டது.

'தஞ்சாவூர் வழியாகச் செல்லும் விரைவுப் பேருந்து பஸ் நிலையத்தில் இருக்கிறது. அந்த மார்க்கமாகச் செல்ல வேண்டியவர்கள் ஒன்றாவது கவுண்டரில் வரிசையாக நின்று டிக்கட் பெற்றுக் கொள்ளவும்.''

அவ்வளவுதான்; அங்கங்கே நின்றவர்கள், அமர்ந்திருந்தவர்கள் எல்லாம் ஓடிப் போய் வரிசையில் நின்றார்கள். வரிசை மிக நீளமாக நீண்டிருந்தது. அந்தப் பரட்டைத் தலைச் சிறுவன் வரிசையின் முன்புறத்தில் இடம் பிடித்திருந்தான்.

இரத்னாகரனும் கிரியும் பழம்வாங்கிக் கொண்டு வந்த போது நீண்டு நின்ற வரிசையைப்பார்த்துத் திகைத்தார்கள். வரிசையின் கடைசியில் போய் நிற்பதைத் தவிர வேறு வழியில்லை. இருவரும் கடைசியாகப் போய் நின்றார்கள். பயணச் சீட்டுக் கிடைக்குமா என்பதே சந்தேகமாய் இருந்தது.

கிரிக்கும், இரத்னாகரனுக்கும் முன்னால் ஒரு வயதான கிழவர் நின்று கொண்டிருந்தார். அவர் தமக்குமுன்னால் நின்றவரிடம், ''ஐயா, இந்த பஸ் ஏழு மணிக்குள்ளே தஞ்சாவூர் போயிடுமா? என் மகன் ஆஸ்பத்திரியிலே இருக்கான்! இருட்டறதுக்குள்ள போய்ச் சேர்ந்துடணும். இல்லேன்னா உள்ளே விட மாட்டாங்களே'' என்று அங்கலாய்த்துக் கொண்டிருந்தார்.

''கவலைப்படாதீங்க பெரியவரே, ஏழு மணிக்குள்ளே தஞ்சாவூர் போயிடலாம்'' என்றார் முன்னால் நின்றவர்.

அந்தப் பெரியவர் திரும்பி இரத்னாகரனைப் பார்த்து, ''ஏம்பா தம்பி, இந்த பஸ் ஏழு மணிக்குள்ள தஞ்சாவூர் போயிடுமா?'' என்றார்.

இரத்னாகரனுக்கு எரிச்சல் வந்தது. ''அதுதான் அவர் சொன்னாரே, மறுபடியும் தொணதொணன்னு கேட்டா என்ன அர்த்தம்?'' என்று சீறினான். வரிசையின் பின்னால் அகப்பட்டுக் கொண்டோமே என்று அவன் தவித்துக் கொண்டிருந்தது, அந்தப் பெரியவருக்கு எப்படித் தெரியும்?

பயணச் சீட்டுக் கிடைப்பதற்கு என்ன வழி! ஆ! அவனுக்கு வழி புலனாகிவிட்டது. அவனது அப்பாவிற்கு மிகவும் வேண்டிய நண்பர் ஒருவர் தான் அந்த பஸ் நிலையத்தில் அதிகாரியாக இருக்கிறார்!

அவன் கிரியைப் பார்த்து, ''இப்படி வரிசையில் நின்னுக்கிட்டிருந்தா காரியம் நடக்காது. என்னோட அப்பாவின்

நண்பர்தான் இங்கே அதிகாரியாக இருக்கிறார். இப்பப் பாரு, ஒரு நிமிஷத்துல டிக்கட்டோட வர்றேன்'' என்று கிளம்பினான்.

''நமக்கு முன்னால் எத்தனை பேரு, கால் கடுக்க நின்னுக்கிட்டிருக்காங்க. நாம மட்டும் இடையிலே புகுந்து டிக்கட் வாங்குவது நியாயமில்லையே!'' என்றான் கிரி.

''சரியாய்ப் போச்சு. நியாய அநியாயத்தைப் பார்த்துக்கிட்டிருந்தா நாம ஊர் போய்ச் சேர முடியாது. இந்த மாதிரிச் சூழ்நிலையில் அரிச்சந்திரத் தனத்தைக் கொஞ்சம் மாத்தி வச்சுக்கணும், தெரியுதா?'' என்றான் இரத்னாகரன் கிண்டலாக.

இரத்னாகரனின் தற்பெருமையும், எதற்கும் மதிப்புக் கொடுக்காத அலட்சியப் போக்கும் கிரிக்குக் கொஞ்சமும் பிடிப்பதில்லை. மேலும், அவனிடம் பேசினால் கோபித்துக் கொள்வானே என்று பேசாமல் நின்றான்.

அதிகாரியின் அறைக் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்த இரத்னாகரன், அவரைப் பார்த்து: ''குட்மார்னிங் ஸார்'' என்றான். அவனைப் பார்த்தவுடனேயே அவருக்கு அடையாளம் தெரிந்து விட்டது.

''நீ இரத்னாகரன் இல்லையா? அப்பா சௌக்கியமா இருக்காரா? பார்த்து ரொம்ப நாளாச்சு, என்ன திடீர்னு வந்து நிக்கறே? உனக்கு என்ன வேண்டும்? உட்கார்'' என்று கூறி உபசரித்தார்.

''ஒண்ணுமில்லே சார். நானும் என்னுடைய நண்பனுமாக இங்கே ஒரு விளையாட்டுப் போட்டிக்கு வந்தோம். தஞ்சாவூர் பஸ்ஸுக்கு ஒரே கூட்டமா இருக்கு. இரண்டு டிக்கெட் வேணும்'' என்று இழுத்தான் அவன்.

''இவ்வளவுதானே! இதோ வாங்கித் தர்றேன்'' என்ற அதிகாரி, தன்னுடைய உதவியாளரை அழைத்து உடனே இரண்டு டிக்கட் வாங்கி வரும்படி கூறினார். அவர் இரத்னாகரனிடம்



விருப்பமானதைக் கொடு

ஒருவர் இறக்கும் போது தம்முடைய நண்பரிடம் பதினாயிரம் வராகன் பொன்னைக் கொடுத்து, ''என் ஒரே மகனை நீதான் காப்பாற்ற வேண்டும். அவன் பெரியவனானதும் இந்தப் பணத்தில் உனக்கு விருப்பம் எதுவோ அதைக் கொடுத்து அவனை ஆளாக்க வேண்டும்'' என்று கேட்டுக் கொண்டார்.

அவர் இறந்த பிறகு அந்த நண்பர் தமக்கு ஒன்பதினாயிரம் வராகனை வைத்துக்கொண்டு, மகனுக்கு ஓராயிரம் வராகனைக் கொடுத்தார். ''என் அப்பா கொடுத்ததில் பெரும்பகுதியை நீங்கள் எடுத்துக்கொண்டு எனக்கு இவ்வளவு குறைவாகக் கொடுக்கின்றீர்களே! இது நியாயமா?'' என்று மகன் கேட்டான். பலன் இல்லை. உடனே, அவர் மீது வழக்குத் தொடுத்தான்.

மரியாதை ராமன் வழக்கை நன்கு விசாரித்துத் தீர்ப்புக் கூறினார்.

''உமக்கு விருப்பம் எதுவோ அதை என் மகனிடம் கொடு என்றுதானே உமது நண்பர் சொன்னார்? இப்போது நீர் விருப்பப்பட்டு எடுத்துக் கொண்டிருப்பது ஒன்பதாயிரம் வராகன். அதனால், நீர் உமக்கு விருப்பமான ஒன்பதாயிரம் வராகனைப் பிள்ளைக்குக் கொடுத்து விட்டு, மீதியை நீர் எடுத்துக் கொள்ளும்''

தீர்ப்புப்படி பிள்ளைக்கு ஒன்பதாயிரம் வராகன் பொன் கிடைத்தது!

பணம் பெற்றுக் கொண்டு சென்ற அடுத்த சில நிமிடங்களில் மீண்டும் திரும்பி வந்தார், இரண்டு பயணச் சீட்டுகளுடன்.

அவனுக்கு ஒரே சந்தோஷம். அந்த அதிகாரிக்கும், உதவியாளருக்கும் நன்றி தெரிவித்து விட்டு வெளியே வந்தான். கிரியிடம், ''எப்படி என்னுடை சாமர்த்தியம், பார்த்தாயா?'' என்று பயணச் சீட்டுகளைக் காட்டி மகிழ்ந்தான்.

பஸ் புறப்பட இன்னும் நேரமிருந்தது. இருவரும் பயணச் சீட்டுக் கிடைத்துவிட்ட மகிழ்ச்சியில் கவுண்டரின் ஓரமாகச் சென்று வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றனர். ஒவ்வொருவராகப் பயணச் சீட்டுகளைப் பெற்றுக் கொண்டு செல்ல, அந்தப் பெரியவரின் முறை வந்த போது பயணச் சீட்டு தீர்ந்து போயிற்று! கவுண்டர் மூடப்பட்டது.

அவர் என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்துப் போய் நின்றிருந்தார்.

''டிக்கெட் தீர்ந்து போச்சே, நான் என்ன செய்வேன்? அடுத்த பஸ்ஸுக்கு இன்னும் இரண்டு மணிநேரமிருக்கே. அதுக்குள்ள ஆஸ்பத்திரிக் கதவைப் பூட்டிடுவாங்களே'' என்று அங்குமிங்கும் ஓடியவாறு அங்கலாய்த்தார்.

கிரி இரத்னாகரனிடம் மெதுவாக, ''டேய், பார்த்தியா, அந்தப் பெரியவர் படற அவஸ்தையை. நியாயமா அவருக்குக் கிடைக்க வேண்டிய டிக்கட்டைத்தான் இப்போது நாம் வைத்துக் கொண்டிருக்கிறோம்... நீ இடையில் புகுந்து வாங்காமல் இருந்திருந்தால் அவருக்குக் கிடைத்திருக்கும். பாவம், தன்னுடைய பிள்ளையை ஆஸ்பத்திரியில் போய்ப் பார்க்க வேண்டும் என்று துடிக்கிறார், பார். இந்தக் கஷ்டத்தில் நாம் அவருக்கு உதவி செய்தால் என்ன? நமக்குத்தான் அவசரமில்லையே! அடுத்த பஸ்ஸில் போய்க் கொள்ளலாம். டிக்கட்டை அவருக்குக் கொடுத்து விடுவோம்'' என்றான்.

இரத்னாகரனுக்கு என்ன சொல்வது என்றே புரியவில்லை. அவன் அவ்வளவு தூரம் முயன்று வாங்கிய பயணச் சீட்டை அவருக்குக் கொடுப்பதா?

''பெரியவர் எப்படியாவது வந்து சேருவார். பேசாமல் வா'' என்று கிரியின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு பஸ்ஸை நோக்கி நடந்தான் இரத்னாகரன்.

அப்போது ''ஐயா!'' என்று யாரோ கூப்பிடுவது கேட்டது.

இரத்னாகரனும், கிரியும் நின்று, திரும்பிப் பார்த்தார்கள்.

அந்தப் பரட்டைத் தலைச் சிறுவன் தான் பெரியவரை நோக்கி வந்து கொண்டிருந்தான். ''ஐயா, எனக்கு ஒன்னும் அவசரமில்லே. நீங்க இந்த பஸ்ஸில போயிருங்க. பொழுதோட போய் ஆஸ்பத்திரியில உங்க மகனைப் பார்த்துடலாம். கவலைப்படாதீங்க'' என்றவாறு தன்னுடைய பயணச் சீட்டை அவரிடம் கொடுத்தான்.

பெரியவர் நன்றியோடும் ஆவலோடும் அதைப் பெற்றுக் கொண்டார். அவர் முகத்தில் சொல்ல முடியாத சந்தோஷம் தெரிந்தது. ''தம்பி, நல்ல சமயத்திலே உதவினாய், இந்தா'' என்று கூறி ரூபாயைக் கொடுத்தார்.

அவன் ரூபாயை எண்ணிப் பார்த்தான். ''கூட ரெண்டு ரூபாய் இருக்குதே! இந்தாங்க'' என்று அந்த இரண்டு ரூபாயைத் திருப்பிக் கொடுத்தான்.


''தம்பி, நீ செய்த உதவிக்கு எவ்வளவு வேணுமானாலும் கொடுக்கலாம். சும்மா வச்சுக்கோ'' என்றார்.


அந்த இரண்டு ரூபாய் நோட்டைப் பலவந்தமாக அந்தப் பெரியவர் கையில் திணித்து விட்டுக் காலியாக இருந்த ஓர் இருக்கையில் போய்ப் படுத்துக்கொண்டான், அச்சிறுவன்.


''பார்த்தாயா, இரத்னாகரா, அந்த ஏழைச் சிறுவனின் பெருந்தன்மையை! அவன் எவ்வளவு களைத்துப் போய் வந்தான். பொழுது இருட்டு முன் தஞ்சாவூரிலிருந்து பஸ் பிடித்து, தன் கிராமத்திற்குப் போய் விட வேண்டும் என்று துடித்தான்.... இப்போது தன்னுடைய டிக்கட்டை அந்தப் பெரியவருக்குக் கொடுத்துவிட்டான். பெரியவர் அதிகப்படியாகக் கொடுத்த பணத்தையும் வாங்க மறுத்து விட்டான்! நியாயமாக அவருக்குச் சேர வேண்டிய டிக்கெட்டை அபகரித்துக் கொண்டு நாம் இங்கே நின்று கொண்டிருக்கிறோம். அவனைப் போய், 'காட்டுமிராண்டி' என்றாயே, காட்டுமிராண்டித்தனம் அவனைப் போன்றவர்களின் உருவத்திலா இருக்கிறது? நம்மைப் போன்றவர்களின் மனத்தில்தான் இருக்கிறது'' என்று உணர்ச்சி பொங்கும் குரலில் சொன்னான் கிரி.


தன்னுடைய நண்பனுக்குப் பதில் எதுவும் சொல்ல முடியாமல், தன் செயலுக்கு வெட்கித் தலை குனிந்து நின்றிருந்தான் இரத்னாகரன்.

ஓவியர் ஆகலாம்









நீங்கள் அனுப்பியவை

நாடோடிப் பாடல்கள்



கத்தரிக்காய்ப் பாட்டு

சின்னச் சின்னக் கத்தரிக்காய்
சிங்காரக் கத்தரிக்காய்
நல்லப்பன் தோட்டத்திலே
நட்டு வைத்த கத்தரிக்காய்.
ஆலந்தூர்ச் சந்தையிலே
ஆட்டம் போட்ட கத்தரிக்காய்
கூடலூர்ச் சந்தையிலே
குத்துப்பட்ட கத்தரிக்காய்
பொன்னம்மாள் வாங்கி வந்து
பொரியல் செய்த கத்தரிக்காய்
கண்ணம்மா வாங்கி வந்து
கறிசமைத்த கத்தரிக்காய்
பைசாவுக்கு ஒண்ணுதான்
வாயிலே போட்டாத் தண்ணிதான்!
—வீர. வள்ளிக்கண்ணு, பரப்பாடி.

பத்து மைல் தூரத்திலே

பத்துமைல் தூரத்திலே
பறக்குதடி ஏரோப்பிளேன்
செத்தாப் பிழைக்க வைப்பான்
சீமை வெள்ளைக்காரன் மகன்.
—த. பாஸ்கரன் (3038), தாண்டிக்குடி.



தொங்கவிடு!

என்னடி, என்னடி, சின்னப்பொண்ணு
எந்நேரம் பார்த்தாலும்தொள்ளைக்காது
தொள்ளைக் காதுலே ஒரு கல்லைக்கட்டி
தொண்ணூறுகாக்கையைத்தொங்கவிடு.
—வி. லலிதா (3690), கணியூர்.



பூ, பூ, புளியம் பூ.

பூ! பூ! புளியம்பூ!
பொட்டிலே வெச்ச தாழம்பூ!
தாழம்பூவை ரெண்டாக்கி
தங்கச்சி கையிலே மூணாக்கி
சித்தாத்தா அடுப்பிலே
கத்தரிக்காய் வேகல்லே!
மாமா வர ஜோக்கிலே
மல்லிகைப் பூ பூக்கல்லே!
பூக்கல்லே! பூக்கல்லே!
—எம். மீனாட்சி (1385) சென்னை—33

சுண்டெலிக் கல்யாணம்

சுண்டெலிக் கல்யாணம்
அப்புக்குட்டி மகன் சுப்புக்குட்டி
சுப்புக்குட்டி பிள்ளை சுண்டெலியாம்.
சுண்டெலி ராசனுக்குக் கல்யாணமாம்;
சோளத்தட்டுப்பல்லக்கு ஊர்கோலமாம்
பாம்பைக் கூப்பிடுங்கள்; பல்லக்குத்
தூக்கட்டும்.

பல்லியைக் கூப்பிடுங்கள்; பராக்குப் பார்க்கட்டும்.
தவளையைக் கூப்பிடுங்கள்; தாரை ஊதட்டும்.
சேவலைக் கூப்பிடுங்கள்; கொம்பு முழங்கட்டும்.
—பி. ஸ்ரீவித்யா (3330), கோவை—18.





பூமியும் சாமியும்

பூமி ஒண்ணு, சாமி ஒண்ணு,
புரிஞ்சுக்கிட்டா உள்ளம் ஒண்ணு.
சாமிதுணை இருந்ததுன்னு
சனங்க துன்பம் தீர்ந்திடுமே!
சாமி துணை நிக்காமே
சனங்க துணை இல்லாமே
பூமி விளையாது
பொற்காலம் காணாது.
—மு. கா. நெடுமாறன் (660),
காவேரிப்பட்டணம்.



கோகுலம் சிறுவர் சங்கம்

கிண்டி, சென்னை-600 032

இச்சங்கத்தில் யார் சேரலாம்?

தமிழ் தெரிந்த குழந்தைகள் உலகில் எங்கிருந்தாலும், அவர்கள் கோகுலம் குழந்தைகள் சங்கத்தில் சேரவேண்டும் என்பது எங்கள் ஆசை.

15 வயதுக்கு உட்பட்டவர்கள் மட்டுமே இதில் உறுப்பினர் ஆகலாம்.

உறுப்பினர் ஆனதும்.....

கோகுலத்திற்கு நீங்கள் எதை எழுதினாலும் எப்போது எழுதினாலும் மறக்காமல் உறுப்பினர் எண்ணைக் குறிப்பிடுங்கள்.

உங்கள் ஒவ்வொருவருக்கும் கோகுலம் முத்திரையுடன் (பிள்ளையாரும் கண்ணனும்) கூடிய உறுப்பினர் அட்டையை அனுப்புவோம்.

அதில் ஒவ்வொரு உறுப்பினருக்கும் ஓர் எண் கொடுக்கப்பட்டிருக்கும். உறுப்பினர் பெயரும், பிறந்த நாளும் முகவரியும் அதில் இருக்கும்.

பயன் என்ன?

உறுப்பினர் ஆனவர்களின் பெயர்களை முகவரியுடன் கோகுலத்தில் வெளியிடுவோம். உறுப்பினர்கள் இதன் மூலம் பேனா நண்பர்கள் ஆகலாம்.

உறுப்பினர்கள் கோகுலத்துக்குக் கதைகள், கவிதைகள், துணுக்குகள், இன்னும் பயனுள்ள விஷயங்களை அனுப்பலாம். யோசனைகளையும் கருத்துக்களையும் தெரிவிக்கலாம். நன்றாயிருந்தால் வெளியிடுவோம்.

உறுப்பினர்களுக்கான பலவிதப் போட்டிகளை நடத்துவோம். வெற்றி பெறுவோர் பரிசுகள் பெறலாம். அவர்களின் படங்களையும் வெளியிடுவோம்.

'கோகுலம்' கௌரவ ஆசிரியர், ஆசிரியர், அல்லது கோகுலத்தின் பிரதிநிதிகள் உங்கள் பகுதிக்கு வந்தால் அறிவிப்போம். சந்தித்து உரையாடலாம்.

ஆண்டுக்கு ஒரு முறை நல்ல முறையில், பயன் தரும் வகையில் விழா நடத்தலாம்.

உறுப்பினராகக் கட்டணம் உண்டா?

இல்லை. கீழேயுள்ள கூப்பனைப் பூர்த்தி செய்து இப்பக்கத்தை அப்படியே கோகுலம் முகவரிக்கு அனுப்பினால் போதும். தமிழ் நாட்டுக்கு வெளியில் உள்ளவர்கள் முகவரியை ஆங்கிலத்தில் எழுத வேண்டும்.

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர் மனு

பெயர்:

பிறந்த தேதி:

முகவரி:

கையெழுத்து



உலகப் புகழ் பெற்ற சிறுவர் கதை—20

காட்டு அன்னங்கள்

மூலம்: ஹான்ஸ் கிறிஸ்டியன் ஆண்டர்சன்
தமிழ்ச் சுருக்கம்: எச். கிருஷ்ணமூர்த்தி

ஓர் ஊரில் ஓர் அரசன் இருந்தான். அவனுக்குப் பதினொரு ஆண் பிள்ளைகள்; ஒரு பெண். பெண்ணுக்கு எலிசி என்று பெயர். அவள் மிகவும் அழகானவள்; நல்லவள். ஆண் குழந்தைகள் எல்லோரும் பள்ளிக்கூடம் போனார்கள். எப்படிப் போனார்கள், தெரியுமா? சட்டையில் நட்சத்திரங்கள், இடுப்பில் வாள், கையில் தங்கச் சிலேட்டு, வைர எழுதுகோல். அவர்களைப் பார்த்ததுமே அரச குமாரர்கள் என்று எளிதில் சொல்லிவிடலாம்.

எலிசி ஒரு பிரகாசமான கண்ணாடி நாற்காலியில் உட்கார்ந்து கொள்வாள். அவளுடைய கையில் ஓர் அழகான சித்திரப் புத்தகம் இருக்கும். அதற்கு விலையே சொல்ல முடியாது. அந்தக் குழந்தைகள் சந்தோஷமாக வாழ்ந்தனர். ஆனால், பாவம்! அவர்களுடைய சந்தோஷம் நீடிக்கவில்லை.

அந்த அரசன் ஒரு பொல்லாத அரசியை இரண்டாந் தாரமாகக் கல்யாணம் செய்து கொண்டான். அவள் ரொம்பக் கொடுமையானவள் என்பதைக் கல்யாணத்துக்கு அடுத்த நாளே குழந்தைகள் புரிந்து கொண்டனர். சில நாட்கள் கழித்துக் கிராமத்திலிருந்த குடியானவர்களுடன் வசிப்பதற்காக எலிசியை அரசி அனுப்பிவிட்டான். அரச குமாரர்களைப் பற்றிச் சில பொய்க் கதைகளை ஜோடித்து அரசன் அவர்களை மறந்து போகும்படி செய்தாள்.

''நீங்கள் வாயில்லாத பறவைகளாக மாறி உலகத்தில் திரியுங்கள்'', என்று அரசி அரசகுமாரர்களைச் சபித்தாள். அவர்கள் பதினொரு அழகான வெள்ளை அன்னங்களாக மாறினர். வினோதமாகக் கத்திக்கொண்டே பறந்து சென்றனர். காட்டில் மறைந்தனர்.

குடியானவனுடைய வீட்டில் விளையாட எலிசிக்குப் பொம்மைகளே இல்லை. அவள் செடிகளின் இலைகளைப் பறித்து விளையாடினாள். இலையில் சின்ன ஓட்டை போட்டு அதன் மூலம் சூரியனைப் பார்த்தாள். சூரியன் தன் அண்ணன்மார்களின் ஒளிபடைத்த கண்களைப் போல் அவளுக்குத் தோன்றியது. சூரியனின் ஒளிக் கீற்று அவளுடைய கன்னத்தில்படும்போதெல்லாம் சகோதரர்கள் தன்னை அன்போடு முத்தமிடுவதாக எலிசி உணர்ந்தாள். எலிசி காட்டு மலரைப் போல் அழகாகத் தோன்றினாள். எலிசியின் அழகையும், நல்ல குணத்தையும் குடியானவப் பெண்கள் பாராட்டினர்.

எலிசிக்குப் பதினைந்து வயதாயிற்று. அவள் அரண்மனைக்கு வரவழைக்கப்பட்டாள். எலிசியின் அழகைக் கண்டு அரசி அவளை அதிகமாக வெறுத்தாள். அரசன் தன் பெண்ணைப் பார்க்க விரும்பியதால், அவளையும் ஓர் அன்னப் பறவையாக மாற்ற முடியவில்லை.

அரசி மூன்று மாயத் தவளைகளைக் கூப்பிட்டு எலிசியின் அழகையும், அறிவையும், அமைதியையும் அழிக்கும்படி கட்டளையிட்டாள். எலிசி இயல்பாக நல்ல குணமுள்ளவள். ஆகவே, தவளைகளால் எலிசியை ஒன்றும் செய்ய முடியவில்லை. அரசிக்குக் கோபம் வந்தது. அவள் எலிசியை அழைத்து அவளுடைய உடல் முழுவதும் ஒரு சாயத்தைப் பூசினாள். முகத்தில் நாற்றமடிக்கும் கொழுப்பைத் தடவினாள். நீண்ட கூந்தலைச் சிக்கல்படுத்தினாள்.

உருவம் மாறிய எலிசியை அப்பாவிடம் அழைத்துச் சென்றனர். அவளைப் பார்த்ததும் அவருக்கு ஓரே அதிர்ச்சி. ''நீ என்னுடைய பெண் இல்லை'', என்று சொல்லி அனுப்பிவிட்டார். வேறு யாரும் அவளுக்கு இரங்கவும் இல்லை. உதவியும் செய்யவில்லை.

பாவம், எலிசி! அரண்மனை முழுவதும் தன் அண்ணன்மார்களைத் தேடினாள். காணவில்லை. அவர்களுக்காகக் கண்ணீர் விட்டு அழுதாள். பிறகு, அரண்மனையை விட்டு வெளியேறிக் காட்டை அடைந்தாள். ''வீட்டிலிருந்து துரத்தப்பட்ட அண்ணன்மார்களை எப்படியும் கண்டுபிடிப்பேன்'', என்று தீர்மானம் செய்து கொண்டாள்.

இரவு வந்தது. காட்டில் வழி தெரியவில்லை. ஒரு மரத்தடியில் சாய்ந்தாள். அவளைச் சுற்றிலும் அநேக மின்மினிப் பூச்சிகள் சுடர்விட்டன. தாழ்ந்திருந்த ஒரு மரக்கிளையைத் தொட்டதும், அதிலிருந்த மின்மினிப் பூச்சிகள் விண்ணிலிருந்து விழும் நட்சத்திரங்களைப் போல் அவள் மீது சொரிந்தன. இரவெல்லாம் அவள் தன் சகோதரர்களுடன் விளையாடுவதைப் போலக் கனவு கண்டாள்.

மறுநாள் வெகுநேரம் கழித்து எழுந்தாள். அருகில் ஓர் ஓடை இருந்தது. அதில் அமிழ்ந்து குளித்தாள். அவள் மீது பூசப்பட்டிருந்த சாயங்களெல்லாம் கரைந்து போயின. திரும்பவும் அவள் அழகான அரசகுமாரியாக மாறினாள். காட்டில் கிடைத்த கனிகளை உண்டு, கால் போன திசையில் நடந்தாள். காட்டில் தனியாக இருப்பது அவளுக்குப் பயமாக இருந்தது. இருந்தாலும், ''கடவுள் என்னைக் கைவிடமாட்டார்; காப்பாற்றுவார்'', என்று உறுதியாக நம்பினாள்.

ஒரு கூடை நிறையப் பழங்களைச் சுமந்துகொண்டு ஒரு பாட்டி காட்டு வழியில் வந்தாள். அன்போடு எலிசிக்குச் சில பழங்களைக் கொடுத்தாள். ''பாட்டீ! நீங்கள் பதினொரு இளவரசர்களைப் பார்த்தீர்களா?'' என்று எலிசி கேட்டாள்.

''நான் இளவரசர்களைப் பார்க்கவில்லை. ஆனால், தங்கக் கிரீடம் தாங்கிய பதினொரு அன்னங்களைப் பார்த்தேன். அருகிலுள்ள ஆற்றில் நேற்று நீந்திக்கொண்டிருந்தன'', என்று பாட்டி பதிலளித்தாள். பாட்டிக்கு நன்றி சொல்லிவிட்டு, எலிசி ஆற்று ஓரமாகவே நடந்தாள். கடற்கரையை அடைந்தாள்.

எலிசியின் முன்னால் கடல் பரந்து கிடந்தது. படகோ, கப்பலோ ஒன்றும் இருக்கவில்லை. 'கடலை எப்படிக் கடப்பது?' என்று யோசித்தாள். கரையில் ஏராளமான கூழாங்கற்கள் சிதறிக் கிடந்தன. மிருதுவான அலைகள் அந்தக் கரடு முரடான கற்களை உருட்டி உருட்டி வழுவழுப்பான கூழாங் கற்களாக மாற்றி இருந்தன. ''அலைகளே! நீங்கள் சோர்வில்லாமல் உழைக்கிறீர்கள். கல்லையும் கனியச் செய்கிறீர்கள். உங்களைப் போலவே நானும் உழைப்பேன். நீங்கள் எனக்குக் கற்பித்த பாடத்திற்கு நன்றி'', என்று அலைகளிடம் பேசினாள்.

மாலைவேளை. பதினொரு வெள்ளை அன்னங்கள் நிலத்தை நோக்கிப் பறந்து வந்தன. எலிசி ஒரு புதரின் பின்னால் மறைந்து கொண்டாள். அன்னங்கள் புதருக்கு அருகிலேயே இறங்கிச் சிறகுகளைப் படபடவென்று அடித்துக் கொண்டன.

சூரியன் கடலில் மறைந்தது. உடன் அன்னங்களும் மறைந்து, பதினொரு அழகான அரச குமாரர்களாக, எலிசியின் சகோதரர்களாக மாறின. உரக்கக் கத்திக்கொண்டே எலிசி ஓடினாள். சந்தோஷத்தோடு அவர்களைக் கட்டிக் கொண்டாள். தங்களுடைய அழகான தங்கையைக் கண்டு அவர்களும் மகிழ்ச்சி அடைந்தனர். அவர்கள் சிரித்தனர்; அழுதனர். சித்தி தங்களுக்குச் செய்த கொடுமைகளைப் பரிமாறிக் கொண்டனர்.

பெரிய அண்ணன் பேசினான்:—''சூரியன் தொடுவானத்திற்கு மேலே இருக்கும் வரையில்தான் நாங்கள்



அன்னங்களாக இருப்போம். சூரியன் மறைந்ததும் எங்களுக்கு மனித உருவம் வந்துவிடும். அப்புறம் பறக்க முடியாது. வானத்திலிருந்து கீழே விழுவோம். அதற்குள் நாங்கள் பாதுகாப்பான இடத்தை அடைவோம். கடலுக்கு அப்பால் வெகு தொலைவில் உள்ள ஓர் அழகிய நாட்டில் நாங்கள் வசிக்கிறோம். இங்கிருந்து செல்ல இரண்டு நாட்கள் ஆகும். கடல் நடுவில் ஒரு சின்னப் பாறை இருக்கிறது. இரவில் அங்கு தங்கி இளைப்பாறிச் செல்வோம். நம்முடைய பிறந்த பொன்னாட்டைத் தரிசிக்கும் ஆசையால், ஆண்டுக்கு ஒரு முறை மட்டும் இங்கு வருகிறோம். அருமைத் தங்கையாகிய உன்னைச் சந்தித்ததில் எங்களுடைய ஆனந்தம் அளவிட்டுச் சொல்ல முடியாது. இன்னும் இரண்டு நாட்களில் இங்கிருந்து போகிறோம். எங்களிடம் படகுகள் இல்லை. உன்னை எப்படி அழைத்துப் போவதென்று தெரியவில்லை.''

''இந்தச் சாபத்திலிருந்து உங்களை எப்படி விடுவிக்க முடியும் என்றுதான் யோசிக்கிறேன்'' என்றாள் எலிசி. இரவு முழுவதும் அவர்கள் உரையாடினர். சிறிது நேரமே உறங்கினர்.

பொழுது புலர்ந்தது. சகோதரர்கள் அன்னங்களாக மாறினர். பறவைகள் எலிசியை வட்டமிட்ட பிறகு தொடு வானத்திற்குப் பறந்தன. ஆனால், கடைசி சகோதரன் மட்டும் போக வில்லை. நாள் முழுவதும் தங்கையின் மடியிலேயே தலையை வைத்துக் கொண்டு படுத்திருந்தான். எலிசி அதனுடைய வெள்ளைச் சிறகுகளை அன்போடு தடவிக் கொடுத்தாள். பொழுது சாய்ந்ததும் மற்ற சகோதரர்களும் திரும்பினர். பழைய உருவத்தை அடைந்தனர்.

''நாளை நாங்கள் புறப்படுகிறோம். உன்னைத் தனியாக விட்டுச் செல்ல எங்களுக்கு மனம் இல்லை. உன்னைச் சுமந்து கொண்டு கடலைக் கடந்து செல்லக்கூடிய வலிமை எங்களுக்கு இருக்கிறது. ஆனால், நீ பயப்படாமல் வர முடியுமா?'' என்று பெரிய அண்ணன் கேட்டான். ''வருகிறேன், அழைத்துச் செல்லுங்கள்!'' என்றாள் எலிசி.

அவர்கள் புல்லையும், பிரம்புகளையும் சேகரித்தனர். இரவு முழுவதும் கண் விழித்து ஓர் உறுதியான பாயை முடைந்தனர். எலிசி அந்தப் பாயில் படுத்துத் தூங்கினாள். சூரியன் உதய

மானதும், சகோதரர்கள் அன்னங்களாக மாறினர். அன்னப் பறவைகள் தங்கள் அலகுகளால் பாயின் ஓரங்களைக் கவ்வின. தூங்கும் தங்கையைத் தூக்கிக்கொண்டு வானத்தில் பறந்தன. அவளுடைய முகத்தில் வெய்யில் படாதவாறு தன் பெரிய சிறகுகளை விரித்துக்கொண்டே ஓர் அன்னம் பறந்து வந்தது.

இவை எல்லாம் எலிசிக்கு ஒரு கனவைப் போலத் தோன்றின. அவள் விழித்துக்கொண்ட போது தரையை விட்டு வெகு தூரம் வந்திருந்தாள். அவளுக்கு அருகில் சுவையான பழங்கள் இருந்தன. கடைசி சகோதரன்தான் குடைபிடித்தாற்போல அவளுக்கு அருகிலேயே பறந்து வந்தான். எலிசி அவனுக்குப் புன்னகையோடு நன்றி சொன்னாள்.

வெய்யில் அதிகரித்தது. பறவைகள் வில்லிலிருந்து புறப்பட்ட அம்பைப் போல 'விர்'ரென்று பறந்து சென்றன. அன்று எலிசிக்காக அவை குறைந்த வேகத்தோடு பறந்தன. சூரியன் சாய்ந்தான். புயல் சின்னங்கள் தோன்றின. கடல் நடுவில் இருந்த பாறை இன்னும் தென்படவில்லை. அன்னங்கள் முழுபலத்தோடும் தங்கள் இறக்கைகளை அடித்துக்கொண்டன.

''சூரியன் மறைந்தால், உடனே பறவைகள் மனித உருவை அடையும். அதற்குள் பாறையைச் சேர வேண்டும் இல்லாவிட்டால் எல்லோருமே கடலில் மூழ்கி இறக்க வேண்டியதுதான்! தன்னைக் காப்பாற்ற விரும்பிய சகோதரர்களுக்கு எத்தகைய ஆபத்தை உண்டாக்கி விட்டேன்!'' என்று எலிசி கவலைப்பட்டாள். ''ஆண்டவனே! எங்களைக் காப்பாற்று'' என்று அவள் மனம் உருகிக் கடவுளை வேண்டினாள்.

சூரியன் கடல் விளிம்பைத் தொட்டது. எலிசியின் மார்பு வேகமாக அடித்துக் கொண்டது. வானத்திலிருந்த அன்னங்கள் சரேலெனக் கீழ் நோக்கி இறங்கின. 'கடலில் விழப் போகிறோம்', என்று எலிசி பயந்தாள். ஆனால், பறவைகள் சற்றுத் தயங்கின. சூரியனின் ஒரு பாதி நீரில் மூழ்கியிருந்தது. அப்போது கீழே ஒரு பாறை தெரிந்தது. சூரியன் மறைந்துகொண்டே வந்தது. எலிசியின் கால்கள் பாறையைத் தொட்டதும், எரியும் காகிதத்தின் கடைசிப் பொறி மறைவது போல, சூரியன் மறைந்தது.

எலிசியைச் சுற்றிச் சகோதரர்கள் கைகோத்து நின்றனர். அந்தச் சிறிய பாறையில் அவர்கள் நெருங்கி நிற்பதற்கு வேண்டிய இடம்தான் இருந்தது. கடல் குமுறியது. அலைகள் பாறையில் மோதின. நீரும், நுரையும் அவர்கள் மீது சொரிந்த வண்ணம் இருந்தன. வானமே தீப்பிடித்தது போல மின்னல்கள் பளிச்சிட்டன. இடி தொடர்ந்து முழங்கியது. அண்ணன்மார்களும், தங்கையும் தங்களுடைய கரங்களை இறுகப் பற்றித் தோத்திரம் பாடிக் கொண்டே இருந்தனர். அந்தப் பாடல்கள் அவர்களுடைய உள்ளத்திற்குப் புதிய சக்தியை அளித்தன.

மறுநாள் விடியற்காலையில் அன்னங்கள் எலிசியைச் சுமந்து, பயணத்தைத் தொடர்ந்தன. வழியில் ஆகாயத்திற்கும் பூமிக்கும் இடையில் ஓர் அழகிய நகரம் காணப்பட்டது. பிரம்மாண்டமான அரண்மனையும், மலர்க் காடுகளும் தோன்றின. ''இந்த ஊருக்கா நாம் போகிறோம்?'' என்று எலிசி கேட்டாள்.

''இது மார்கானா என்ற தேவதையின் ஊர். இங்கு மனிதர்கள் போக முடியாது'', என்று ஓர் அண்ணன் பதில் சொன்னான்.

சூரியன் மறைவதற்குள் அவர்கள் மாடமாளிகைகள் நிறைந்த ஓர் அழகான தீவை அடைந்தனர். அவர்கள் அந்தத் தீவின் மலைப் பகுதியில் ஒரு குகையின் அருகில் இறங்கினர். குகையின் வாசலில் ஒரு பசுமையான செடி காணப்பட்டது. மாலை ஆனதும் அவர்கள் குகைக்குள்ளே சென்றனர். கடைசி அண்ணன் எலிசியின் அறைக்கு அவளை அழைத்துச் சென்றான். ''இன்றிரவு நீ என்ன கனவு காணப் போகிறாய்?'' என்று கேட்டான். ''இந்த மந்திர சக்தியிலிருந்து உங்களை எப்படி விடுவிப்பது என்றுதான் கனவு காணுவேன்!'' என்று சிரித்துக் கொண்டே சொன்னாள் எலிசி.

கடவுளின் உதவியை வேண்டிக் கொண்டே எலிசி தூங்கிப் போனாள். அவள் காற்றில் மிதப்பது போலவும், மார்கானா தேவதையின் அரண்மனைக்குப் போவது போலவும் உணர்ந்தாள். ஒளிமயமான அந்தத் தேவதை அவளை அன்போடு வரவேற்றாள். காட்டில் அன்னப் பறவைகளைப் பற்றிச் சொன்ன பாட்டியின் சாயல் தேவதையிடம் தெரிந்தது. ''நீ உன்னுடைய சகோதரர்களுக்கு விடுதலை அளிக்க முடியும். ஆனால், அதற்கு வேண்டிய பொறுமையும், தைரியமும் உன்னிடம்

இருக்கின்றனவா?'' என்று தேவதை கேட்டாள். தேவதை தொடர்ந்து பேசியதை எலிசி ஆர்வத்தோடு கேட்டாள்.

''மென்மையான தண்ணீர், கரடு முரடான கற்களின் உருவத்தைக் கூட மாற்றி விடுகிறது. ஆனால், உன் மெல்லிய விரல்களில் ஏற்படுகிற வலி தண்ணீருக்கு இல்லை. உன் இதயம் அனுபவிக்கும் வேதனை அதற்குக் கிடையாது. இதோ, என் கையிலுள்ள முட்செடியைப் பார். இது கையில் பட்டாலே எரிச்சலும், அரிப்பும் உண்டாகும். இது குகையின் வாசலில் வளர்ந்துள்ளது. இதையோ, அல்லது மாதா கோவிலைச் சார்ந்த கல்லறையில் வளரும் இதே மாதிரி முட்செடிகளையோ நீ உன் கையாலேயே பறித்துச் சேகரிக்க வேண்டும். அவற்றை உன் காலாலேயே மிதித்து நார்களை எடுக்க வேண்டும். அந்த நார்களைக் கொண்டு பதினொரு சட்டைகளை நீ செய்ய வேண்டும். அந்தச் சட்டைகளைப் பதினொரு காட்டு அன்னங்களின் மீதும் போட்டால், சாபம் நீங்கும். ஆனால், இந்தப் பணியைத் தொடங்கியதிலிருந்து முடிக்கும் வரை, எவ்வளவு காலமானாலும், நீ ஒரு வார்த்தைகூடப் பேசக் கூடாது. அப்படிப் பேசினால், நீ உச்சரிக்கும் முதல் சொல்லே ஒரு கத்தியாக மாறி உன் சகோதரர்களின் இதயத்தில் பாயும். அவர்களுடைய உயிர் உன் நாவில்தான் இருக்கிறது. ஜாக்கிரதை!'' என்று தேவதை கூறினாள். பிறகு, எலிசியின் கையில் அந்த முள் செடியைத் தேய்த்தாள். தீப்பிடித்தது போலக் கை எரிந்தது. எலிசி விழித்துக் கொண்டாள்.

பொழுது விடிந்திருந்தது. கனவில் கண்ட முட்செடி அருகில் கிடந்தது. எலிசி முழந்தாளிட்டுக் கடவுளுக்கு நன்றி செலுத்தினாள். பிறகு, குகைக்கு வெளியே சென்று, அந்த முட்செடிகளைப் பறித்தாள். கால்களால் மிதித்து மிதித்து நகக்கி நாரை எடுத்தாள் அவளுடைய கை, கால்களில் கொப்புளங்கள் தோன்றின. வலி எடுத்தது. தன் சகோதரர்களைக் காப்பாற்றுவதற்காக அவள் அந்த வலியைப் பொறுமையோடு ஏற்றுக் கொண்டாள்.

மாலையில் சகோதரர்கள் திரும்பினர். எலிசி எதுவுமே பேசாமல் இருப்பதைக் கண்ட அவர்களுக்குப் பயம் ஏற்பட்டது. அதுவும் சித்தியின் கொடுமையோ என்று சந்தேகப்பட்



டனர். ஆனால், அவளுடைய கைகள் கொப்புளித்த காரணத்தையும் அவள் தங்களுக்காக என்ன செய்கிறாள் என்பதையும் அவர்கள் விரைவில் உணர்ந்தனர். அன்புத் தங்கையைக் கண்டு, கடைசி அண்ணன் அழுதான். அவனுடைய கண்ணீர் எலிசியின் கைகளில் சிந்தியதும் கொப்புளங்கள் மாயமாய் மறைந்தன!

எலிசி இரவு பகலாக இளைப்பாறாமல் பணி செய்தாள். அன்னங்கள் பகலில் பறந்தன. அவள் தனிமையில் சட்டைகளை நெய்து கொண்டிருந்தாள். ஒரு சட்டையை முடித்து, இரண்டாவதைத் துவக்கினாள்.

ஒரு நாள் காட்டில் ஊதுகொம்பு முழங்கியது. திடீரென்று வேட்டைக்காரர்கள் தோன்றினர். எலிசி பயந்து போய், தான் சேகரித்துள்ள முட்செடி, நார் முதலியவற்றை ஒன்றாகக் கட்டி, அவற்றின் மீது அமர்ந்தாள். முதலில் வேட்டை நாய்கள் குரைத்துக் கொண்டு ஓடின. அழகான தோற்றமுள்ள அந்த நாட்டு அரசனும், அவனுடைய பரிவாரங்களும் பின்னால் வந்தன. அரசன் எலிசியின் அழகைக் கண்டு ஆச்சரியப்பட்டான். எலிசியிடம் சென்று, ''குழந்தாய், நீ எப்படி இங்கு வந்தாய்?'' என்று கேட்டான்.

எலிசி வாயைத் திறக்கவில்லை. தலையை மட்டும் அசைத்தாள். ''நீ அழகாக இருப்பதைப் போலவே நல்லவளாகவும் இருந்தால், என்னோடு வா. உனக்குப் பட்டாடை தருவேன். முடி சூட்டுவேன். நீ அரண்மனையிலேயே வசிக்கலாம்.'' என்று சொல்லிக் கொண்டே அவளைத் தூக்கிக் குதிரை மீது வைத்துக் கொண்டான். எலிசி அழுதாள். ''நீ மகிழ்ச்சியாக இருக்க உனக்கு எல்லா வசதிகளையும் செய்வேன்'', என்று சொல்லி அரசன் குதிரையைத் தட்டி விட்டான். அரசனும் பரிவாரங்களும் மலைப் பிரதேசத்தைத் தாண்டி மறைந்தனர்.

மாலைவேளை. அரசனும் ஆட்களும் ஒரு மகோன்னதமான மாளிகையை அடைந்தனர். பணிப் பெண்கள் எலிசியை ஒரு தேவதையைப் போலவே அலங்கரித்தனர். எலிசி மௌனமாக மனத்திற்குள்ளேயே அழுதாள்.

எலிசியின் அழகைக் கண்டு வியந்த சபையோர் அவளுக்கு வணக்கம் செய்தனர். அரசன் அவளை மணக்க விரும்பினான். ஆனால், தலைமைக் குரு மட்டும் சந்தேகப்பட்டார். ''அதிக அழகுடைய இந்தப் பெண் ஒரு கெட்ட தேவதையாகத்தான் இருக்க வேண்டும்'' என்று அவர் அரசனிடம் சொன்னார். அரசன் அவருடைய பேச்சைக் கேட்கவில்லை.

அவளைத் திருமணம் செய்துகொள்ள ஆசைப்பட்டு, அதற்கான ஏற்பாடுகளைச் செய்யும்படி உத்தரவிட்டான். மங்கல வாத்தியங்கள் முழங்கின. விருந்து தயாராகியது. அரண்மனையின் கலைக் கூடங்களுக்கு எலிசியை அழைத்துச் சென்றனர். ஆனால், அவளுடைய முகத்தில் ஒரு புன்னகைகூட அரும்பவில்லை. கடைசியில் அரசன் அவளை ஒரு சிறிய அறைக்கு அழைத்துச் சென்றான். அந்த அறை அவள் வசித்த குகையைப் போலவே அலங்கரிக்கப்பட்டிருந்தது. அவள் பறித்த முட்செடிகளின் கட்டும், அவள் நெய்த சட்டைகளும் அங்கு காட்சி அளித்தன. ''உன்னுடைய குகையிலிருந்த பொருள்களை இந்த அறையில் வைத்திருக்கிறோம். நீ விரும்பினால், இந்த அரண்மனைக்குள்ளேயே உன் பழைய வீட்டை நினைவுபடுத்திக் கொள்ளலாம்'', என்றான் அரசன்.

தனக்கு மிகவும் பிடித்த பொருள்களைக் கண்டதும், எலிசியின் மனத்தில் உற்சாகம் பிறந்தது. தன் சகோதரர்களைக் காப்பாற்ற முடியும் என்ற நம்பிக்கை அவளுக்குத் திரும்பியது. நன்றியோடு அரசனுடைய கையை முத்தமிட்டாள். உடனே அவர்களுடைய திருமணத்தை அறிவிப்பதற்காக அரசன் கோயில் மணிகளை அடிக்கச் செய்தான்.

அந்தத் திருமணத்தைத் தடுத்து நிறுத்தத் தலைமைக் குரு கடைசிவரை முயன்றார். அரசன் செவி சாய்க்கவில்லை. தலைமைக் குருவே எலிசிக்கு முடி சூட்டும்படி ஆயிற்று. எலிசி ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. அவளை ஊமை என்று கருதினர். அவள் எப்போதும் தன் சகோதரர்களையே நினைத்துக் கொண்டிருந்தாள். தன்னைச் சந்தோஷப்படுத்துவதற்காக எல்லா முயற்சிகளையும் மேற்கொள்ளும் அரசனை நோக்கி அவளுடைய கண்கள் அன்பையும், நன்றியையும் பொழிந்தன.

தன் மனத்திலுள்ள துக்கங்களை எல்லாம் எலிசி அரசனிடம் பகிர்ந்து கொள்ள விரும்பினாள். தான் எடுத்த காரியம் முடியும் வரை அவள் பேசக் கூடாது அல்லவா? ஒவ்வொரு இரவும் அவள் முட்செடிகள் இருந்த அறைக்குச் சென்று சட்டைகளைத் தயார் செய்தாள். அவள் ஏழாவது

சட்டையைச் செய்யும் போது நார்கள் தீர்ந்து போயின.

''நான் மாதா கோவில் கல்லறைக்குச் சென்று முட்செடிகளைப் பறித்து வருவேன். அதனால் என்ன துன்பம் வந்தாலும் பரவாயில்லை'', என்று எலிசி தீர்மானித்தாள்.

நிலா வீசும் அந்த இரவில் அவள் அரண்மனையைக் கடந்து கல்லறையை அடைந்தாள். அங்கு பயங்கரமான சூனியக்காரிகள் உலாவினர். எலிசி ஒன்றையுமே லட்சியம் செய்யவில்லை. கருமமே கண்ணாகத் தனக்கு வேண்டிய முட்செடிகளை மட்டும் பறித்துக் கொண்டு திரும்பினாள். இரவில் தூங்காத தலைமைக் குரு எலிசியைக் கவனித்து விட்டார். ''எலிசி ஒரு சூனியக்காரிதான். அபூர்வ அழகினால் அவள் அரசனையும், மக்களையும் கவர்ந்திருக்கிறாள்'' என்ற அவருடைய நம்பிக்கை உறுதி ஆயிற்று.

தலைமைக் குரு, தாம் பார்த்த உண்மையை அரசனிடம் தெரிவித்தார். அரசன் குழம்பினான். அடுத்த நாளிலிருந்து அரசன் தூங்குவதைப் போலப் பாசாங்கு செய்தான். ஒவ்வொரு இரவும் எலிசி வழக்கம்போல அந்தச் சிறிய அறைக்குச் சென்று சட்டைகளை நெய்து வந்தாள். அரசன் எலிசிக்குத் தெரியாமல் 'அந்த அறை வரைக்கும் சென்று பார்த்துவிட்டுத் திரும்பினான். ஒரு பைத்தியக்காரியைப் போல எலிசி அந்தச் சட்டைகளைத் தயார் செய்வதைக் கண்டு அரசன் கவலைப்பட்டான். ஆனால், அரசனுடைய கவலையின் காரணம் எலிசிக்குத் தெரியவில்லை.

எலிசி பத்துச் சட்டைகளை நெய்து முடித்தாள். பதினோராவது சட்டை பாதியிலேயே நின்று விட்டது. துரதிர்ஷ்டவசமாக முட்செடிகள் தீர்ந்து விட்டன. கல்லறைக்குச் சென்று மறுபடியும் முட்செடிகளைப் பறித்துவரத் தீர்மானித்தாள்.

இரவில் எலிசி அரண்மனையைக் கடந்து நடந்தாள். அரசனும், தலைமைக் குருவும் பின் தொடர்ந்தனர். கல்லறையில் பல பயங்கர உருவங்கள் நடப்பதைக் கண்டதும், எலிசி ஒரு சூனியக்காரிதான் என்று அரசனும் நம்பினான். உடனே அரண்மனை திரும்பினான்.

எலிசியைப் பொது மக்கள் முன் நிறுத்தி விசாரணை செய்ய அரசன் ஏற்பாடு செய்தான். பொது மக்களையே தீர்ப்பு வழங்கும்படியும் சொன்



பாரதியாரின் கையெழுத்து

* பாரதியாரின் இடது கையில் ஒரு நோட்டுப் புத்தகம், சில காகிதங்கள், ஒரு புத்தகம் — இவைகள் கண்டிப்பாய் இருக்கும். கோட்டுப் பையில், ஒரு பெருமாள் செட்டி பென்சில் இருக்கும். பவுண்டன் பேனா அவரிடம் தரிப்பதில்லையோ என்னவோ, பவுண்டன் பேனாவில் அவர் எழுதி, நான் பார்த்ததில்லை. எப்பொழுதும் பென்சில் எழுத்துத்தான்!

எழுத்து குண்டு குண்டாயிருக்கும். ஒரு எழுத்தின் பேரில் இன்னொரு எழுத்து படாது; உராயவும் உராயாது. க—வுக்கும் ச—வுக்கும் வித்தியாசமில்லாமல் நம்மில் பலர் எழுதுகிறார்களே, - அத்தகைய அலட்சிய புத்தியை பாரதியார் எழுத்தில் காண முடியாது. ஒற்று எழுத்துக்களுக்கு மேல், நேர்த்தியான சந்தனப் பொட்டைப் போல, புள்ளி வைப்பார். அவர் எழுத்தை அட்சராப்பியாசம் ஆரம்பிக்கும் குழந்தைகள் கூடப் படிக்கலாம். ஒரு வரிக்கும் மற்றொரு வரிக்கும் இடையே தாராளமாக இடம் விட்டு எழுதுவார். காகிதத்தின் இரண்டு கங்குகளிலும் போதிய இடம் விட்டு விடுவார்.

—'வ. ரா' எழுதிய 'மகாகவி பாரதியார்' என்ற நூலிலிருந்து.

ளுன். ''எலிசி ஒரு சூனியக்காரி. அவளை எரித்துக் கொல்ல வேண்டும்'' என மக்கள் தீர்ப்பு வழங்கினர்.

எலிசியைக் கடுஞ்சிறையில் அடைத்தனர். எலிசி கொண்டு வந்த முட்செடிகளையே தலையணையாகவும், அவள் நெய்த சட்டைகளையே விரிப்பாகவும் அவளுக்கு அளித்தனர். அவற்றைத் தவிர எலிசிக்கு வேறு என்ன வேண்டும்? அவள் கடவுளை வேண்டிக் கொண்டே தன் பணியைத் தொடர்ந்தாள். ஒருவர்கூட அவளிடம் இரக்கம் காட்டவில்லை.

சூரியன் மறைவதற்குச் சிறிது நேரம் முன்பாக எலிசியைத் தேடிக் கொண்டு ஓர் அன்னம் பறந்து வந்தது. அது அவளுடைய கடைசி அண்ணன். தங்கையைக் கண்டு அது சந்தோஷப்பட்டது. எலிசி தொடங்கிய வேலை பூர்த்தியாகும் நிலையில் இருந்தது. அதற்குள் அவளுடைய அண்ணனே அவளைச் சந்தித்து விட்டான். ஆகவே, அடுத்த நாள் அவளுக்கு மரண தண்டனையாக இருந்தாலும், தன் கடமை முடியப் போவதை எண்ணி அவள் ஆனந்தப்பட்டாள்.

எலிசிக்குத் துணை இருப்பதற்காக அன்று இரவு அரசன் தலைமைக் குருவைச் சிறைச் சாலைக்கு அனுப்பினான். எலிசி அந்தக் கடைசிச் சட்டையைச் செய்வதிலேயே கருத்தாக இருந்தாள். ஆகவே, அவள் அந்தக் குருவைத் திருப்பி அனுப்பி விட்டாள். அவர் கோபத்தோடு போனார்.

இரவு முழுவதும் எலிசி அந்தப் பதினோராவது சட்டையையே தயாரித்துக் கொண்டிருந்தாள். பொழுது விடிய இன்னும் ஒரு மணி நேரம் தான் பாக்கி இருந்தது. பதினொரு சகோதரர்களும் அரண்மனை வாசலுக்கு வந்து அரசனைப் பார்க்க அனுமதி கேட்டனர். அரசன் தூங்கிக் கொண்டிருந்ததால், அனுமதி மறுக்கப்பட்டது. ஆனால், அவர்கள் திரும்பிப் போகாமல் வாதிட்டனர். அந்த சப்தத்தைக் கேட்டு அரசனும், வீரர்களும் வாசலுக்கு வந்தனர். அப்பொழுது சூரியன் உதித்தது. சகோதரர்கள் மறைந்தனர். பதினொரு அன்னங்கள் இறக்கைகளை விரித்து அரண்மனையைக் கடந்து பறந்து சென்றன.

எலிசியை ஒரு வண்டியில் வைத்து எரியூட்டும் இடத்திற்கு இழுத்துச்சென்றனர். அவள் சோகமே உருவாக இருந்தாள். சாவை எதிர்நோக்கிப் போகும் வேளையில்கூட அவள், தான் மேற்கொண்ட பணியை நிறுத்தவில்லை. கடைசிச் சட்டையை நெய்து கொண்டிருந்தாள். பத்துச் சட்டைகள் அவளுடைய காலடியில் கிடந்தன. 'ஊமைச் சூனியக்காரி'யை வேடிக்கை பார்க்க ஊரே திரண்டு வந்தது. மக்கள் வாயில் வந்தபடி அவளை வைதனர்.

சாகும் நேரத்தில்கூடத் தோத்திரம் சொல்லாமல் கைவேலை செய்யும் அந்தப் பெண்ணை மக்கள் வெறுத்தனர். ''அந்தச் சட்டைகளைப் பிடுங்கி சுக்கல் சுக்கலாகக் கிழித்துப்போடுங்கள்'', என்று கூட்டத்திலிருந்த ஒருவன் சொன்னான். உடனே மக்கள் எலிசியின் வண்டியை நோக்கிப் பாய்ந்தனர். அவர்கள் சட்டைகளைப் பறிக்கும் நேரத்தில் பதினொரு அன்னங்களும் பறந்து வந்து எலிசியைச் சுற்றி வண்டியில் அமர்ந்தன. மக்கள் பயந்து விலகினர்.

சிதையில் மரக்கட்டைகள் குவிக்கப்பட்டிருந்தன. காவல் அதிகாரி எலிசியின் கரங்களைப் பிடித்து இழுத்தார். இமைக்கும் நேரத்தில் எலிசி பதினொரு சட்டைகளையும் அன்னங்கள் மீது வீசினாள். உடனே அன்னங்கள் மறைந்து, இளவரசர்கள் தோன்றினர். கடைசி இளவரசனுக்கு மட்டும் ஒரு கையும், இன்னொரு கை இருக்கும் இடத்தில் ஓர் இறகும் இருந்தன. ஏனென்றால், எலிசி அந்தச் சட்டையை முடித்திருக்கவில்லை!

''இனிமேல் நான் பேசலாம். நான் குற்றமற்றவள்'', என்று சொல்லி விட்டு எலிசி சகோதரர்களின் கையில் மயங்கி விழுந்தாள். பெரிய அண்ணன் அவர்களுடைய கதையை எல்லோருக்கும் சொன்னான்.

அப்போது, சிதையில் அடுக்கப்பட்டிருந்த மரக்கட்டைகள் வேர்பாய்ந்து, துளிர் விட்டுப் பூக்களைச் சொரிந்தன. அரசன் ஒரு பெரிய பூவைப் பறித்து எலிசிக்கு அணிவித்தான். எலிசி அமைதியோடும், ஆனந்தத்தோடும் கண் விழித்தாள். மயான பூமியிலிருந்து மன்னன் மாளிகைக்கு ஒரு மகிழ்ச்சி ஊர்வலம் புறப்பட்டது!

Hans Christian Anderson எழுதிய The Wild Swans என்ற கதையின் சுருக்கமே இது.

Printed and published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600032
(Phone: 431543)

Editor: K. Rajendran



வீரமாமுனிவர்

பிறந்த நாள்: 8-11-1680 மறைந்த நாள்: 4-2-1747

REGISTERED No. TN MS (S) 281
Registered as a Newspaper in Sri Lanka